இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli


வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 106 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – கார்த்திகை 09 – சனிக்கிழமை 25 நவம்பர் 2023 – திருச்சி ★ ★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 106: Thiruvalluvar Year - 2054 - Karthigai 09 - Saturday 25 November 2023 - Trichy ★★16 Pages ₹ 5.00

## இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (3)

# சிங்கத்தின் குகையில் சிலந்தி கூடுகட்டுவதா?



**நெல்லைச் சீமையில் 2007ஆம் ஆண்டு டிசம்பர் 15, 16 ஆகிய இரண்டு நாட்கள் கழக இளைஞர் அணியின் முதல் மாநில மாபெரும் மாநாட்டை - அப்போதைய கழக இளைஞர் அணிச் செயலாளர் - தற்போதைய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மிக பிரம்மாண்டமான முறையில் எழுச்சியோடு நடத்திக் காட்டினார். இம்மாநாட்டிற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 'இளைஞர்களுக்கு வழி விடுவோம்' எனும் தலைப்பில் முரசொலி'யில் 2007 நவ.7-ந் தேதி முதல் டிச.2-ந் தேதி வரை தொடர்ச்சியாக 25 'கலைஞர் கடிதங்கள்' எழுதி உடன்பிறப்புகளுக்கு அழைப்பு விடுத்தார். தற்போது சேலத்தில் 2023 - டிச.17 அன்று கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்த விருக்கும் கழக இளைஞர் அணியின் 2வது மாநில மாநாட்டையொட்டி, அக்கடிதங்களை இங்கே எடுத்து வெளியிடுவதில் மகிழ்கிறோம்.**

**கலைஞர் கடிதம்**

**உடன்பிறப்பே,**

நெருக்கடி கால நெருப்பின் "ஜுவாலை" அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் அனற் பிழம்பாய்க் கொதித்த போது, இப்போது குடும்பக் கட்சி என்று குதர்க்கம் பேசுகிற குள்ளநரிக் கும்பல், இந்தக் குடும்பம் இருக்கும் திசையின் பக்கம் கூடத் திரும்பிப் பார்த்தது கிடையாது. நெருக்கடி நிலையை எதிர்த்து தி.மு.கழகச் செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றியதைத் தொடர்ந்து, 1976இல் ஆட்சி கலைக்கப்பட்டது என்று அறிவிப்பு - அடுத்த நாள் காலை முதல் அதிகாரிகள் படையெடுப்பு - முன்னாள் அமைச்சர்கள் - நாடாளுமன்றக் கழக உறுப்பினர்கள், சட்டமன்றக் கழக உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் என்று ஆயிரம் பேர் கைது - எந்தச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள் என்ற தகவல் கூட தெரியாத நிலைமை - தம்பி மாறனையும், தம்பி ஸ்டாலினையும் வீட்டுக்குள் நுழைந்து போலீஸ் அதிகாரிகள் கைது செய்ததுதான் தெரியும். அவர்களை எந்த ஊர் சிறைக்குக் கொண்டு சென்றார்கள் - எங்கே அடைத்துள்ளார்கள் என்று தெரியாது - இருபது நாட்களுக்குப் பிறகுதான் அவர்கள் சென்னை சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதும் - சென்னை சிறையில் அடைபட்டுள்ள கழகக் கண்மணிகள் அனைவரையும் சிறைக் கூண்டுகளுக்குள்ளேயே காவலர்கள் கடுமையாக அடித்து உதைத்துச் சித்ரவதை செய்தார்கள் என்பதும் காட்டுத் தீ போல் மூலை முடுக்குகள் எல்லாம் செய்தியாகப் பரவியது.

சென்னைச் சிறையில் இருந்தவர்களை - சிறையில் நேர்காணலுக்கே, எனக்கும், என் குடும்பத்தாருக்கும் நாற்பது நாட்களுக்குப் பிறகே அனுமதி கிடைத்தது - அதுவும் சிறை வாசலில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப் போகிறோம் என்று அறிவித்த பிறகே - அந்த அனுமதியும் வழங்கப்பட்டது. இந்தக் கொடுமை ஓராண்டு நீடித்தது. அந்த ஓராண்டு காலமும் அது வரையில் நெருங்கிப் பழகிய நண்பர்கள், கழகத்தின் சார்பில் பெரும்பதவிகளை அனுபவித்தவர்கள், "அற்ற குளத்து அறுநீர்ப் பறவைகள், மனித உருப்பெற்று வந்தால் எப்படிக் காட்சியளிப்பர்" என்பதை, எனக்கும், இந்த இயக்கத்திற்கும் அனுபவ ரீதியாக உணர்த்தி விட்டனர் என்றே சொல்லலாம்.

அவர்களில் சிலர், நெருக்கடி காலம் நீங்கி, "ஜனநாயக" மறுமலர்ச்சி ஏற்பட்டபோது, கழகத்தையும், என்னையும் நாடித் திரும்பியதை மறந்துவிட முடியாது. அவர்கள் யார் என்பதை அவர்களே அறிவார்கள் என்பதால் இப்போது அதை நான் நினைவூட்ட விரும்பவில்லை.

ஒரு நிகழ்ச்சி - உனக்குச் சொல்லியாக வேண்டும். உயிருக்குயிராக என்னுடன் பழகிய தோழர் - அவரும், அவருடன் நான்கைந்து பேரும் - நெருக்கடி காலம் முழுதும் என்னிடமிருந்து விலகி வெகுதூரம் சென்றிருந்தவர்கள் - சிரித்த முகத்துடன் என்னைச் சந்திக்க வந்தார்கள் - வாசலில் அடியெடுத்து வைத்ததுதான் தாமதம் - "அட, துரோகிகளா! இப்பத்தான் இந்த வீடு அடையாளம் தெரிந்ததா? - எல்லோரும் செத்து விட்டோம் என்று இதுவரை நினைத்து வராமல் இருந்தவர்கள், இப்ப மட்டும் எங்கே வந்தீங்க?"

என்று உரத்த குரல் ஒன்று கேட்டு, வெளியே ஓடிப் போய்ப் பார்த்தால் என் மகன் மு.க. அழகிரியின் குரல்தான் அது!

"என்னப்பா அழகிரி! ஏன் அவுங்களை விரட்டுரே?"

"அப்பா - எமர்ஜன்சின்னு எங்கேயோ ஓடிட்டு - இப்ப வந்திருக்காங்க - இவுங்களை நான் உள்ளே விடமாட்டேன்"

தம்பி அழகிரி, இனிய இயல்புடன் கழகத்தினரிடம் அன்புடன் பழகுவதையும் கண்டிருக்கிறேன் - பாராட்டி மகிழ்ந்திருக்கிறேன் - நன்றிக்குப் பொருள் தெரியாதவர்கள், கழகத்தை வெறும் பதவி பிடிக்கும் கருவியாக மட்டும் கருதுகிறவர்கள் மீது, கடுமையான வெறுப்பு உமிழ்வதையும் கண்டுணர்ந்திருக்கிறேன் - அளவோடு இருந்தால் இரண்டுசுபாவங்களுமே இளைஞர்களுக்கு இன்றியமையாத் தேவைகள்தான்.

உடன்பிறப்பே, என்னுடைய பிள்ளைகள், பெண்கள் இன்று கழக ஆர்வலர்களாக இருப்பதால், வயிறெரிந்து வசை பாடுகிறார்களே! வார ஏடுகள், நாளேடுகளில் கூட "வாரிசு" - "குடும்பம்" என்றெல்லாம் விஷத்தைக் கக்கிய வண்ணம் இருக்கிறார்களே! அவர்கள் நான், நேற்று எழுதிய இளம் வயது லெனின் பற்றிய கட்டுரை தீட்டிட நான் படித்த லெனின் வரலாற்றைப் படித்தால் அறிந்து கொள்ளக் கூடும்; "வில்தீமிர் உலியானவ் எனப்படும் லெனின் மற்றும் ஆன்னா, அலெக்ஸாந்தர், ஓல்கா, திமீத்ரிய், மரீயா எனும் ஆறு பேர் சகோதரர்கள்! அந்த நூலாசிரியர் கூறுகிறார்! மொத்தம் அந்த ஆறு பிள்ளைகளும் புரட்சிக்காரர்களாக விளங்கியது தற்செயல் அல்ல" என்பதாக! அந்தக் குடும்பத்துப் பிள்ளைகள் எல்லோருமே இயல்பாகவே புரட்சிக் கருத்துக் கொண்டவர்களாக விளங்கியதால் பெருமையடைந்தனர் பெற்றோர் - ஆனால், இன்னமும் இங்கேதான் வாரிசு, குடும்பம் என்று வயிறு எரிந்து வக்கணை பேசிக் கொண்டிருக்கின்றனர். என் குடும்பத்துப் பிள்ளைகள் ஆறு பேரும் இயக்க ஆர்வம் படைத்தவர்கள் - இலட்சியம் காப்பவர்கள் - தொண்டர்க்குத் துணை நிற்பவர்கள்.

என் குடும்பத்திலாகட்டும், இயக்க முன்னோடிகள் வீட்டுப் பிள்ளைகளாகட்டும், தந்தை வழியில் தன்மானம் போற்றித் தமிழகம் காத்திடும் ஆக்கப் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வது எவ்வாறு தவறாகும்? அவர்கள் போற்றுதலுக்குத் தகுதி படைத்தவர்களன்றோ?

நான், 1957ஆம் ஆண்டு, குளித்தலையில் போட்டி யிட்டபோது, முதலில் என்னை வரவேற்று வாழ்த்தியவர், அந்த ஊர்ப் பெரியவர்களில் ஒருவரான வையாபுரிச் சோழகர் - அவர் பழுத்த காங்கிரஸ்காரர் - அவர் மூத்த மகன் திராவிடர் கழகம் - அவருக்கு அடுத்த மகன் தி.மு.கழகம் - அவர்களுடைய பிள்ளைகுட்டிகள், பேரன், பேத்திகள் மொத்தம் குடும்பத்தினர் பதினைந்து பேர் இருக்கும். ஆளுக்கொரு கட்சி! அப்படியும் ஒரு குடும்பம் - எல்லாப் பிள்ளைகட்கும் திராவிட முன்னேற்றக் கழகப் பற்று என்பதாக இப்படியும் ஒரு குடும்பம்.

இதிலும் என் குடும்பத்து பிள்ளை - என் பிள்ளை என்பதால் ஸ்டாலினுக்குச் சிறப்பா? அவர் அல்லும் பகலும், ஓடியாடி, அலைந்து திரிந்து, இயக்கப் பணியை ஓய்வின்றி ஆற்றுவதால்தானே உடன்பிறப்புக்களாம் உன் போன்றோர் இதயத்தில் இடம் பெற்றுள்ளார் - நெருக்கடி கால நெருப்பாற்றைக்

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

---

## சட்டமன்ற நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியாது!

# "ஆளுநருக்கு தனியாக எந்த அதிகாரமும் இல்லை"!

## பஞ்சாப் அரசு தொடுத்த வழக்கில் உச்சநீதிமன்றம் தீர்ப்பு!

புதுடெல்லி, நவ.25–

**மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளுக்கே முழு அதிகாரம் உள்ளது என்றும், ஒரு அடையாளப் பதவியான ஆளுநருக்கு தனியாக எந்த அதிகாரமும் இல்லை என்றும், அரசும் அமைச்சர்களும் சொல்லுகின்றபடிதான் ஆளுநர் செயல்பட முடியும் என்றும் உச்சநீதிமன்றம் பரபரப்புத் தீர்ப்பை வெளியிட்டுள்ளது.**

**மசோதா மீதான ஒப்புதலை நிறுத்திவைக்க முடிவு செய்தால், அந்த மசோதாவை மறுபரிசீலனைக்காக ஆளுநர் சட்டப் பேரவைக்குத்தான் திருப்பி அனுப்ப வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் பஞ்சாப் வழக்கின் தீர்ப்பில் கூறியுள்ளது.**

பஞ்சாப் ஆளுநர் பன்வாரிலால் புரோகித் அம்மாநில சட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் தராமல் நிறுத்திவைத்ததை எதிர்த்து அம்மாநில அரசு தொடர்ந்த வழக்கில் உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. அதன் எழுத்துப்பூர்வமான தீர்ப்பை நேற்று முன்தினம் இணையத்தில் பதிவிட்டுள்ளது.

அரசியலமைப்பின் 200–வது பிரிவின் படி மசோதா மீதான ஒப்புதலை ஆளுநர் நிறுத்தி வைக்க முடிவு செய்தால், அதற்கு அடுத்தகட்ட நடவடிக்கைக்காக சட்டப்பேரவையின் மறு பரிசீலனைக்காக மாநில சட்டமன்றத்திற்கு மசோதாவை அனுப்ப வேண்டும். அப்படிச் செயல்படுவதே சரியான நடவடிக்கையாகும் என்றும் உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.

அப்படி ஆளுநர் செயல்படவில்லை என்றால், சட்டமன்ற நடவடிக்கைகளுக்கு முட்டுக் கட்டை போடும் செயல் ஆகிவிடும். ஆளுநரால் சட்டமியற்றும் சட்டமன்றத்தின் அரசியல் சாசன நடவடிக்கைகளை கட்டுப்படுத்த முடியாது என்றும், ஜனநாயக நடைமுறையில் உண்மையான அதிகாரம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடமே உள்ளது; குடியரசுத் தலைவரால் நியமனம் செய்யப்படும்



ஆளுநர், மாநிலத்தின் தலைமைப் பதவி வகிப்பவர் மட்டுமே ஆவார் என்றும் உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.

### மசோதாக்களைத் தடுக்க முடியாது!

மாநில ஆளுநர் என்பவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுபவர் கிடையாது. ஆனாலும் அவருக்கென்று அரசியல் சட்ட அதிகாரங்கள் உள்ளன. ஆனாலும் அந்த அதிகாரங்களைக் கொண்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில சட்டமன்றங்களால் நிறைவேற்றப்படும் மசோதாக்களைத் தடுத்து நிறுத்த முடியாது.

ஆளுநர்களின் அதிகாரங்கள் தொடர்பாக 200–வது சட்டப்பிரிவு தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. சட்டப்பேரவையில் நிறைவேற்றப்படும் மசோதாக்களுக்கு ஒப்புதல் தர வேண்டும் அல்லது சந்தேகம் இருப்பின் விளக்கம் கேட்டு சட்டப்பேரவைக்கே திருப்பி அனுப்ப வேண்டும் அல்லது குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்க வேண்டும். அதை விடுத்து ஆளுநருக்கு என்று தனியாக எந்த அதிகாரமும் இல்லை. ஆளுநர் பதவி என்பது ஒரு அடையாளப் பதவிதானே தவிர, மாநில சட்டமன்றங்கள் நிறைவேற்றி அனுப்பும் மசோதாக்களை அவர் நிறுத்திவைக்க முடியாது என்றும் உச்சநீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

### அரசியல் சட்ட அடிப்படைக்கு முரணானது!

நாடாளுமன்ற ஜனநாயக முறையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கொண்ட சட்டமன்றங்களுக்கே முழு அதிகாரங்கள் உள்ளன. ஆளுநர் என்பவர் அமைச்சரவையின் ஆலோசனைப்படி தான் செயல்பட வேண்டும். அப்படி இருக்கும்போது, எந்தவொரு காரணமுமின்றி, எந்தவொரு மசோதாக்களையும் கிடப்பில் வைத்திருக்க ஆளுநருக்கு அதிகாரமில்லை.

அவ்வாறு நாள் கணக்கில் மசோதாக்களை தம்மிடம் நடவடிக்கை எதையும் எடுக்காமல் கிடப்பில் வைத்துக்கொண்டிருப்பது அரசியல் சட்ட அடிப்படைக் கொள்கைகளுக்கே முரணானது என்றும் உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 25-11-2023

# உச்சநீதிமன்றத்துக்கே நெருக்கடி

**மாநில அரசுகளுக்கு ஆளுநர்கள் மூலமாக நெருக்கடி கொடுக்கிறார்கள் என்று உச்சநீதிமன்றத்துக்குச் செல்கிறோம். ஆனால் உச்சநீதிமன்றத்துக்கே ஒன்றிய அரசு நெருக்கடியைக் கொடுத்துக் கொண்டு இருக்கிறது. 'கொலீஜியம்' எனப்படும் நீதிபதிகள் தேர்வுக்குழு பரிந்துரைகளுக்கு உரிய நேரத்தில் ஒப்புதல் தராமல் ஒன்றிய அரசு இழுத்தடித்து வருவதை தொடர்ச்சியாக உச்சநீதிமன்றம் கண்டித்துக் கொண்டு இருக்கிறது.**

உச்சநீதிமன்றம், உயர்நீதி மன்றத்துக்கான நீதிபதிகளை நியமனம் செய்யும் அதிகாரம் உள்ள அமைப்பு கொலீஜியம் ஆகும். உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியுடன், உச்சநீதி மன்றத்தின் நான்கு மூத்த நீதிபதிகள் அடங்கிய குழுவாகும். இவர்கள் பரிந்துரை செய்வதை அரசு ஏற்கும். அது தான் நடைமுறையாக இருந்தது. பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தது முதல் அதிலும் சிக்கல் ஏற்பட்டது. கொலீஜியம் பரிந்துரை செய்வதை ஏற்பது இல்லை. நிராகரிக்கிறார்கள். மேலும், கொலீஜியம் பரிந்துரை செய்வதற்கு அனுமதி வழங்காமல் கிடப்பில் போடுகிறார்கள். இதனை பல முறை உச்சநீதிமன்றம் சுட்டிக் காட்டி வருகிறது. ஆனாலும் ஒன்றிய பா.ஜ.க. அரசு அதே மந்தகதியில் தான் தனது செயல்பாடுகளை வைத்துள்ளது.

**கடந்த 20 ஆம் தேதி அன்றும் உச்சநீதிமன்றம் இது பற்றி கவலையைத் தெரிவித்து இருக்கிறது. நாங்கள் அனுப்பி வைப்பதை முழுமையாக ஏற்காமல், 'குறிப்பிட்ட' சிலரை மட்டும் ஏற்றுக் கொள்வது ஏன் என்பது தான் உச்சநீதிமன்றம் எழுப்பும் கேள்வி ஆகும்.**

பஞ்சாப் - அரியானா உயர்நீதிமன்ற நீதிபதிகளாக 5 மூத்த வழக்கறிஞர்களின் பெயர்களை உச்சநீதிமன்ற கொலீஜியம் பரிந்துரை செய்தது. அதில் இருவர் சீக்கிய மதப்பிரிவைச் சேர்ந்தவர்கள். அந்த இருவருக்கு மட்டும் ஒன்றிய அரசு அனுமதியை வழங்கவில்லை. இதுதான் சமீபத்திய சர்ச்சைக்குக் காரணம் ஆகும். கொலீஜியத்தின் பரிந்துரைகளுக்கு ஒன்றிய அரசு உடனடியாக ஒப்புதல் வழங்க வேண்டும் என்பது தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் இரண்டு வழக்குகள் விசாரணையில் உள்ளது. இந்த மனுக்களின் மீதான விசாரணை உச்சநீதிமன்ற நீதிபதிகள் சஞ்சய் கிஷன் கவுல், சுதாஷு துலியா ஆகியோர் அடங்கிய அமர்வின் முன்னால் கடந்த 20 ஆம் தேதி நடந்தது.

**உயர்நீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தில் 11 பேர் பெயரை பரிந்துரை செய்து கொலீஜியம் அனுப்பியதாகவும் அதில் 5 பரிந்துரைகளுக்கு மட்டுமே ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்ததாகவும் நீதிபதிகள் தகவல் கூறினார்கள். "இது வரை நாங்கள் அனுப்பிய 8 நீதிபதிகளின் பரிந்துரைக்கு ஒன்றிய அரசு ஒப்புதல் தரவில்லை. கொலீஜியம் பரிந்துரைக்கும் பெயர்களில் 'குறிப்பிட்ட' சிலரை மட்டும் தேர்ந்தெடுத்து ஒப்புதல் அளிக்கும் அணுகுமுறையை ஒன்றிய அரசு கடைப்பிடிக்கிறது. இதன் காரணமாக நீதிபதிகளின் பணி மூப்பு பாதிக்கப்படுகிறது. இது நல்ல நடைமுறையாக இல்லை" என்று நீதிபதிகள் கவலை தெரிவித்துள்ளார்கள். உச்சநீதிமன்ற நீதிபதிகள் கண்டனம், கவலை, வருத்தம் தெரிவிப்பது இது முதல் முறை அல்ல. தொடர்ந்து இது நடந்து வருகிறது.**

கடந்த 7 ஆம் தேதியும் உச்சநீதிமன்றம் இதே கருத்தை இன்னும் கடுமையாகக் கூறியது. "வழக்கறிஞர்கள், அவர்களுக்கு வழங்கப்படும் நீதிபதி பதவியை பொறுப்புணர்வுடன் சமூகத்துக்கான பங்களிப்பாகக் கருதி ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால் கொலீஜியம் பரிந்துரைப்பதில் 'குறிப்பாக' சிலரை மட்டும் பிரித்தெடுத்து அரசு நியமனம் செய்கிறது. இது வெற்றிகரமான வழக்கறிஞர்களை நீதிபதி பணிக்கு கொண்டுவருவதற்கு உதவாது. இந்த நடைமுறையை நிறுத்துமாறு திட்டவட்டமாகக் கேட்டுக் கொள்கிறோம். அதேபோல், நீதிபதிகள் பணியிட மாற்றம் தொடர்பான பரிந்துரைகளுக்கும் ஒன்றிய அரசு உடனடியாக ஒப்புதல் வழங்க வேண்டும் என்பதே எங்கள் கருத்தாகும். இந்த விவகாரத்தில் ஒன்றிய அரசு விரும்பாத முடிவை எடுக்க வேண்டிய சூழல் எங்களுக்கு வராது என நம்புகிறோம்" என்று நீதிபதிகள் சஞ்சய் கிஷன் கவுல், சுதாஷு துலியா ஆகியோர் கடுமையாகக் கருத்துத் தெரிவித்தார்கள்.

கொலீஜியம் என்ற அமைப்பு முறையைக் கலைக்க வேண்டும் என்றே பா.ஜ.க. அரசு நினைக்கிறது. தேசிய நீதிபதிகள் நியமன ஆணையத்தை 2014 ஆம் ஆண்டே உருவாக்கியது ஒன்றிய அரசு. தேசிய நீதிபதிகள் நியமன ஆணையம் எனப்படும் புதிய தேர்வு முறை, உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி, உச்ச நீதிமன்றத்தின் இரண்டு மூத்த நீதிபதிகளை உள்ளடக்கியது. ஆனால் அதில் சட்ட அமைச்சர், இரண்டு நிபுணர்கள் உறுப்பினர்களாக இருப்பார்கள். இவர்கள் இருவரையும் அரசு நியமிக்கும். 'இது சுதந்திரமான நீதித்துறை செயல்பாட்டை பாதிக்கும், இந்த ஆணையம் அரசியலமைப்புச் சட்டத்துக்கு எதிரானது' என்று கூறி அந்த அமைப்பையே 2016 ஆம் ஆண்டு கலைத்துவிட்டது உச்சநீதிமன்றம். **அது முதல் ஒன்றிய அரசுக்கும் உச்சநீதிமன்றத்துக்குமான மோதல் நடக்கிறது. உச்ச நீதிமன்றத்தால் அனுப்பப்பட்ட பரிந்துரைகளை தாமதப்படுத்தும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் நடவடிக்கை தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 'அரசின் தாமதம் நீதிமன்ற அவமதிப்பு' என மனுதாரர்கள் தரப்பு தெரிவிக்கிறது.**

"கொலீஜியம் பரிந்துரைகள் மீது 3 முதல் 4 வாரங்களுக்குள் பரிசீலனை செய்து நீதிபதிகள் நியமனத்துக்கான ஒப்புதலை ஒன்றிய அரசு அளிக்க வேண்டும்" என்று மனுதாரர்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள்.ஒவ்வொரு முறை இந்த வழக்குகள் விசாரணைக்கு வரும் போதும் எதையாவது சொல்லி நாள் கடத்தி வருகிறது பா.ஜ.க. அரசு.

**அரசியல் அமைப்புச் சட்டம் உருவாக்கிய அனைத்து அமைப்புகளையும் ஒன்றிய பா.ஜ.க. அரசு நெருக்கடிக்கு உள்ளாக்கி வருகிறது என்று சொல்வது இதனால் தான்.**

சென்னை, ராஜீவ் காந்தி சாலை - இந்திரா நகர் சந்திப்பில் ரூ.18.15 கோடி செலவில்

# 'U' வடிவ மேம்பாலம்: முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

## போக்குவரத்து நெரிசல் பெருமளவு குறையும்!




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.11.2023) தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் சென்னை, ராஜீவ் காந்தி சாலை (OMR), இந்திரா நகர் சந்திப்பில் ரூ.18.15 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 'U' வடிவ மேம்பாலத்தை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்ட இயக்குநர் மரு. எஸ். பிரபாகர், செயல் இயக்குநர் திருமதி எம்.விஜயா ஆகியோர் கலந்து கொண்டனர்.

**சென்னை, நவ. 25- முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.11.2023) தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் சென்னை, ராஜீவ் காந்தி சாலை (OMR), இந்திரா நகர் சந்திப்பில் ரூ.18.15 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 'U' வடிவ மேம்பாலத்தை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.**

பொருளாதாரத்தின் அங்கங்களான விவசாயம், தொழில், வணிகம், சுற்றுலா, போன்ற துறைகளின் மேம்பாட்டிற்கு சாலை உட்கட்டமைப்பு முக்கிய பங்கு வகிக்கிறது. மாநிலத்தில் புதிய சாலைகள் மற்றும் பாலங்கள் அமைத்தல், சாலைகள் மற்றும் பாலங்களை பராமரித்தல், கிராமப்புறங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைத்தல் போன்ற முக்கியப் பணிகளை நெடுஞ்சாலைத் துறை மேற்கொண்டு வருகிறது. இதன்மூலம், தமிழ்நாடு அரசு, நெடுஞ்சாலைத் துறை வாயிலாக தரமான மற்றும் பாதுகாப்பான சாலை கட்டமைப்பினை சிறந்த முறையில் உருவாக்கி, பராமரித்து வருகிறது.

### இந்திரா நகர் சந்திப்பில் கட்டப்பட்டுள்ள 'U' வடிவ மேம்பாலத்தை திறந்து வைத்தல்

ராஜீவ் காந்தி சாலையில் (ஓ.எம்.ஆர்), இந்திரா நகர் சந்திப்பு மற்றும் டைடல் பார்க் சந்திப்பில் அமைந்துள்ள இரண்டு போக்குவரத்து சமிக்ஞைகளில் தற்போது வாகனங்கள் சுமார் 20 முதல் 30 நிமிடங்கள் வரை காத்திருக்க வேண்டிய சூழல் உள்ளது. இதனால் அப்பகுதியில் கடும் போக்குவரத்து நெரிசலும் ஏற்படுகிறது. இதற்கு ஒரு நிரந்தர தீர்வு காணும் வகையில், மேற்கண்ட இந்திரா நகர் சந்திப்பு மற்றும் டைடல் பார்க் சந்திப்பு ஆகிய இரண்டு சந்திப்புகளிலும் 'U' வடிவ மேம்பாலங்கள் அமைக்க முடிவெடுக்கப்பட்டது.

அதன்படி, இந்திரா நகர் மற்றும் டைடல் பார்க் சந்திப்புகளில் 'U' வடிவ மேம்பாலங்கள் அமைத்தல் உள்ளிட்ட ஒருங்கிணைந்த போக்குவரத்து உள் கட்டமைப்பை மேம்படுத்தும் பணிகளுக்காக ரூ.108.13 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. **இப்பணிகளுள் ஒன்றான ரூ.18.15 கோடி செலவில் இந்திரா நகர் 'U' வடிவ மேம்பாலப் பணிகள் முழுவதும் தற்போது முடிக்கப்பட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டது.**

இந்திரா நகர் சந்திப்பில் கட்டப்பட்டுள்ள 237 மீட்டர் நீளமுள்ள இப்பாலம், 12.5 மீட்டர் நீளமுள்ள 19 கண்களை கொண்டதாகும். ராஜீவ் காந்தி சாலையின் வலது புறத்தில் இந்த பாலத்தின் ஏறு சாய்தளம் 120 மீட்டர் நீளத்திற்கும், இடது புறத்தில் இறங்கு சாய்தளம் 120 மீட்டர் நீளத்திற்கும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்திரா நகர் "U" வடிவ மேம்பாலம் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்படுவதால், சோழிங்கநல்லூர் திசையில் இருந்து வரும் வாகனங்கள் இந்திரா நகர் மேம்பாலம் வழியாக ஏறி "U" திருப்பம் எடுத்து, இந்திரா நகர் வழியாக அடையாறு மற்றும் திருவான்மியூர் ஆகிய பகுதிகளுக்கு போக்குவரத்து நெரிசலின்றி விரைந்து செல்ல இயலும்.

இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலகத்திலிருந்து தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்ட இயக்குநர் மரு. எஸ். பிரபாகர், செயல் இயக்குநர் திருமதி எம்.விஜயா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்திரா நகர் சந்திப்பு பகுதியிலிருந்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். அரவிந்த் ரமேஷ், கே.கணபதி, ஜெ.எம்.எச்.அசன் மௌலானா, ஏ.எம்.வி. பிரபாகர ராஜா, பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், மண்டலக் குழுத் தலைவர் துரைராஜ், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்ட முதன்மை பொது மேலாளர் மனோகரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் 22.11.2023 அன்று திருப்பூர் மாவட்டம், பெருமாநல்லூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் புதிய மருத்துவ கட்டடத்தை திறந்து வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், மேயர் ந.தினேஷ்குமார், மாநகராட்சி ஆணையாளர் பவன்குமார் ஜி.கிரியப்பனவர், இயக்குநர் (பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை) தி.சி.செல்வவிநாயகம், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.ஜெகதீஷ்குமார் ஆகியோர் உள்ளனர்.



## இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (3)

# சிங்கத்தின் குகையில் சிலந்தி கூடுகட்டுவதா?

## கலைஞர் கடிதம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

கடந்து வந்தது சாதாரணமா, இதோ! "சிட்டிபாபுவின் சிறை டைரி" என்ற நூலில் சிங்க ஏறு சிட்டிபாபுவே தன் கைப்பட ஸ்டாலினைப் பற்றி எழுதியுள்ள வாக்கியங்கள்! இன்று வார ஏடு நடத்தும் சிலர் வயிறெரிந்து பாடுகிறார்களே, அது வசைபுராண வரிகளா? அல்லது வாழ்த்துக் கீதங்களா? அதுவும் தனது ஆருயிரைக் காராக்கிரகக் கொடுமைக்குக் காவு கொடுத்த கழகக் காளை – என் அருமைத் தம்பி – சிட்டிபாபுவின் இதயமல்லவா எழுத்துக்களை குருதியில் நனைத்துக் கொட்டி அடுக்கியிருக்கிறது!

இதோ – அந்தக் கண்ணீரும் செந்நீரும் – கலக்க காராக்கிரகக் கொடுமையைப் படிப்போம் உடன்பிறப்பே, படிப்போம்!

**"வெறிக் கூட்டம் முரசு பறை அறைவது போல் இரு கைகளால் அடி கொடுத்து கொண்டிருந்தன. ஒரு புறத்தில் இக்காட்சி, பள்ளிக்கூட மாணவன் பெஞ்ச் மீது நிற்பது போல் இரும்பு ஏணி அருகில் கன்னத்தில் கை வைத்துக் கொண்டு கதறும் "வி.எஸ்.ஜி." ஒரே குத்துத்தான் நீலத்துக்கு (நீலநாராயணன்). குள்ள உருவம் நீலம். மேலே நிமிர்ந்து பார்த்திட மார்பகத்தில் மற்றொரு குத்து! முதுகில் இரண்டு தடி அடி! அவ்வளவுதான் குலை நோயில் கேவிக் கொண்டு கீழே விழும் நோயாளி போல் சுருண்டு விழுவதைக் கண்டேன். கால் எடுத்து வைத்து கை கொடுக்க முடியுமா என்று அசைந்தேன். தொண்டையில் ஓர் குத்து எனக்கு! மீண்டும் சுவற்றில் தள்ளப் பட்டேன். அய்யோ! என்று சாய்ந்தேன் நான்.**

**அருகே என் அன்புத் தம்பி! ஆமாம், ஸ்டாலின்தான், தமிழகத்து முதல் அமைச்சரின் மகன் என்று நேற்று வரை அறிந்த அந்த ஆசிரியன் (சுருளிராஜன்) தன் கால் பூட்ஸால் அவன் அழகிய முகத்தைச் சுவைபார்க்க உதைத்தான். அடுத்து கொலைகாரன் ஒருவன் ஓங்கிய கோல் அவனது தோள் பட்டையில்! காக்கி உடை அணிந்த வார்டர் ஒருவன் கன்னத்தில் கை நீட்டினான், கண்டேன் காட்சியை! இவர்கள் இவனை அடித்தே கொன்று விடுவர் என்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. மற்றவர்கள்தான் மண்ணுடன் சாய்ந்து கிடப்பவர்களாக இருக்கின்றனர். உதவிக்கு எழ அவர்கள் முடியாதபடி அருகில் எமதூதர்கள். என்ன செய்வது? எனக்கென்று ஓர் துணிவு! திடீர் என்று குறுக்கே பாய்ந்தேன். தம்பியை தள்ளிக் கொண்டே தடிகள் கழுத்தில்!**

**அவைகள் அடிகள் அல்ல. உலைக்களத்தில் பழுத்துக் காய்ச்சிய இரும்பை தட்டிப் பதப்படுத்தும் உளியாக மாற்றி விடும் சம்மட்டி அடிகளாக எனக்கு அமைந்தது. கழுத்தில் அத்தனையும் தாங்கிக் கொண்டேன். அன்புத் தம்பி அறைக்குள்ளே ஓடிவிட வழி கிடைத்தது.**

**வீராசாமியை தூக்கி நிறுத்தி ஒரு குத்து விட்டு உள்ளே தள்ளினர். நீலம், மூச்சுத் திணற வி.எஸ்.ஜி.யை தாங்கிப் பிடித்து அழைத்துச் சென்றார். தம்பியோ, தான்பட்ட அடி மறந்து தன் உடன்பிறப்புகளை உள்ளே அழைத்துச் செல்லும் காட்சி கண்டேன். அவர்களைப் படுக்க வைக்க தன் தோள் துண்டை தரையில் போட்டு, தாக்கப்பட்டவர்களை தாங்கி படுக்க வைத்த காட்சி கண்டேன். என்னை ஒருவன் வாடா தம்பி வா என்று வாயில் ஓர் குத்துவிட்டு உள்ளே தள்ளினான்."**

சிறையில் நடந்த மிசாக் கொடுமையைத்தான் சிட்டிபாபு இப்படிக் கண்ணீர்க் காவியமாக்கிக் கைப்பட எழுதியுள்ளார்.

கழகக் குடும்பத்தினருக்கு அன்பு அரவணைப்பாகவும், மாறுபட்டவர்க்கு அங்குசமாகவும் விளங்கிடும் அழகிரியும் – தியாகத் தீயில் புடம்போட்ட தங்கமாக ஒளிர்ந்திடும் ஸ்டாலினும் என் ஒரு குடும்பத்தில் மட்டுமல்ல – உன் போன்ற உடன்பிறப்புகள் பலரது குடும்பங்களிலும், அண்ணன், தம்பிகளாக இருக்கின்றார்கள் – அல்லது தணற்காட்டைத் தாமரைப் பொய்கையாக மதிக்கும் தன்மானச் சிங்கங்களாக இருக்கிறார்கள். இருப்பதால்தான் இத்தனை புயல், வெள்ளம், பூகம்பங்களுக்கு ஈடு கொடுத்து இந்த இயக்கத்தின் கொள்கைகள், திட்டங்கள் பூத்துக் குலுங்குகின்றன.

இந்த நறுமணமிக்க நந்தவனத்தில் நுழைந்து, பூக்களையும், செடிகொடிகளையும் நாசப் படுத்தலாமா என்று கணக்கிடுவோரை – அவர்தம் காரியம் கை கூடாமல் தடுத்து விரட்டிட இன்னும் இளைஞர்கள் பல்லோர், நமது நந்தவனத்து வேலிகளில் அமைந்துள்ள வேல் கம்புகளாக விளங்கிட விரைந்து வாரீர் என அழைக்கின்றேன். கருதிப் பார்த்து கடமையைச் செம்மையாகச் செய்திடுவீரானால், சிங்கத்துக் குகையில் சிலந்திகள் கூடு கட்டிட முடியாது! நமது புலிப்போத்துகள் முன்னே, புத்திகெட்ட நரிகள் நடத்திட முனையும் பிரித்தாளும் சூழ்ச்சி, வீழ்ச்சியில்தான் இடறி வீழ்ந்து முடியும் என்பது திண்ணம்!

**அன்புள்ள**

**மு.க.**

(முரசொலி – 10.11.2007)

## மக்களை நாடி குறைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காண

# 'உங்களைத் தேடி உங்கள் ஊரில்' என்ற புதிய திட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, நவ. 25 –

மக்களை நாடி, மக்கள் குறைகளைக் கேட்டு, உடனுக்குடன் தீர்வு காண அரசு இயந்திரம் களத்திற்கே வரும் 'உங்களைத் தேடி, உங்கள் ஊரில்' என்ற புதிய திட்டம் ஒன்றை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

அரசினால் அறிவிக்கப்பட்ட நலத்திட்டங்கள் மக்களைச் சரியாகச் சென்று அடை கின்றனவா? பல்வேறு துறைகளால் வழங்கப்படுகின்ற சேவைகள் மக்களுக்கு முறையாகக் கிடைக்கின்றனவா? என்பதை முதலமைச்சரே களத்திற்கு நேரடியாகச் சென்று, ஆய்வில் ஈடுபட்டு, அரசு இயந்திரத்தை முடுக்கி விட்டு, கள அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டத்தையும் நடத்தி உரிய அறிவுரைகளை வழங்குவதற்காக கொண்டு வரப்பட்ட திட்டம் தான் "களத்தில் முதல்வர் திட்டம்".

"மக்களிடம் செல், அவர்களுடன் வாழ், அவர்களிடமிருந்து கற்றுக்கொள், அவர்களை நேசி, அவர்களுக்குச் சேவை செய்" என்று சொன்ன பேரறிஞர் அண்ணாவின் கனவை நனவாக்கும் திட்டம் இது.



மக்களுக்காக செயல்படுத்தப்படும் மக்கள் நலத் திட்டங்கள் மக்களின் நலனையும் முன்னேற்றத்தையும் மையமாகக் கொண்டு தீட்டப்படுகின்றன; செயல்படுத்தப்படுகின்றன. அவற்றின் பலன் மக்களைச் சென்றடைவதை உறுதிப்படுத்த வேண்டியதும், மக்கள் அரசு நலத் திட்டங்களின் முழுப் பலனையும் அடைவதிலுள்ள இடர்ப்பாடுகளைக் களைய வேண்டியதும் அரசு இயந்திரத்தின் முதன்மையான பணி ஆகும்.

**மாவட்ட ஆட்சியர் வட்ட அளவில் ஆய்வு!**

அரசு இயந்திரம், கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன், மக்களைத் தேடிச் சென்று பணியாற்ற வேண்டும். மக்களையும் அரசையும் இணைக்கும் பாலமாகச் செயல்பட்டு வருப வர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள். ஒவ்வொரு கிராமத்தில் வசிக்கும் மக்களும் தங்கள் கிராம முன்னேற்றத்துக்கும், அரசு தொடர்பாக தனக்கிருக்கும் பிரச்சினைகளுக்கும், தீர்வை நாடிச் செல்லும் நபர் மாவட்ட ஆட்சித் தலைவர். தங்கள் அருகில் இருக்கும் பிற அதிகாரிகள் அன்புக்குரியவராக இருப்பினும், மக்களின் மகத்தான அன்புக்கும், ஆதரவுக்கும், நம்பிக்கைக் கும் உரியவர்களாக மாவட்ட ஆட்சியர்களைப் பார்க்கிறார்கள். மாவட்ட ஆட்சியர்களிடம் திங்கட்கிழமை தோறும் வந்து மனு அளிக்கிறார்கள். மாவட்ட ஆட்சியர் பதவியின் கம்பீரம் மக்களைக் கலவரம் அடையச் செய்வதில்லை, மாறாக கவர்ந்திழுக்கிறது.

'உங்களைத் தேடி, உங்கள் ஊரில்" திட்டத்தின்படி ஒவ்வொரு மாவட்ட ஆட்சியரும், இனி ஒவ்வொரு மாதமும் ஒரு நாள் வட்டம் அளவில் தங்கி, கள ஆய்வில் ஈடுபட்டு, அரசு அலுவலகங்களை ஆய்வு செய்து, மக்களின் குறைகளைக் கேட்டறிந்து, அரசின் அனைத்து நலத் திட்டங்களும், சேவைகளும், தங்கு தடையின்றி மக்களைச் சென்று அடைவதை உறுதி செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளேன்.

**அண்ணாவின் கனவுத் திட்டம்!**

இந்தத்திட்டம், 'களத்தில் முதல்வர்' திட்டத்தின் அடுத்தகட்டம் எனலாம்; மக்களிடம் செல் என்று சொன்ன அண்ணாவின் கனவுத் திட்டம் என்றும் சொல்லலாம்.

உங்களை நாடி, உங்கள் குறைகளைக் கேட்டு, உடனுக்குடன் தீர்வு காண அரசு இயந்திரம் வருகிறது. நானும் அரசு இயந்திரமும் களத்திற்கு வருகிறோம். கவனமுடன் உங்கள் குறை கேட்போம்; களத்திலேயே தீர்வு காண்போம்; மக்களின் கவலையைப் போக்குவோம்; மகத்தான தமிழ்நாட்டை உருவாக்குவோம்.

'உங்களைத் தேடி, உங்கள் ஊரில்" என்ற இந்த புதிய திட்டம் வரும் டிசம்பர் மாதம் தொடங்கப் படும்.

மேற்கண்டவாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## திருச்சி – திருவெள்ளரை பெருமாள் திருக்கோயிலில்

# ரூ. 7.85 கோடி மதிப்பில் வடக்கு இராஜ கோபுரம் கட்டும் பணி!

## அமைச்சர்கள் கே.என்.நேரு – பி.கே.சேகர்பாபு அடிக்கல் நாட்டினர்!

திருச்சி, நவ.25-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று முன்தினம் (23.11.2023) திருச்சி மாவட்டம், திருவெள்ளரை, புண்டரிகாட்ச பெருமாள் திருக்கோயில் வடக்கு இராஜகோபுரம் கூடுதல் 5 நிலை கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டினர்.

திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம், அரங்கநாத சுவாமி திருக்கோயிலில் உபகோயிலான திருவெள்ளரை, புண்டரிகாட்ச பெருமாள் திருக்கோயிலானது 108 திவ்ய தேசங்களில் நான்காவது திருத்தலமாகும். பெரியாழ்வார் மற்றும் திருமங்கை ஆழ்வாரால் பாடல் பெற்றது. இத்திருக்கோயில் 13 ஆம் நூற்றாண்டில் ஹொய்சாள மன்னரால் கட்டப்பட்டது. இத்திருக்கோயிலின் வடக்கிலுள்ள இராஜகோபுரம் இரண்டு நிலைகளுடன் நிறைவு பெறாத நிலையில் பல நூறு ஆண்டுகாலமாக அமைந்துள்ளது. இந்த இராஜகோபுரத்தில் கூடுதலாக ஐந்து நிலைகள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், நீண்ட காலமாக நிறைவேற்றப்படாமல் இருந்த கூடுதலாக ஐந்து நிலைகள் அமைக்கும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டு, மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்படி மாநில வல்லுநர் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டது. அதன்படி நேற்று முன்தினம் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆகியோர் ரூ.7.85 கோடி மதிப்பீட்டில் உபயதாரர் நிதியில் வடக்கு இராஜகோபுரத்தின் இரண்டு நிலையோடு கூடுதலாக 5 நிலைகள் அமைக்கும் திருப்பணிக்கு நேற்று முன்தினம் அடிக்கல் நாட்டினர். அதனைத் தொடர்ந்து, அமைச்சர் பெருமக்கள் திருப்பட்டூர், பிரம்மபுரீஸ்வரர் திருக்கோயிலில் ரூ.89.60 லட்சத்தில் கட்டப்பட்டுள்ள அன்னதானக் கூடம் மற்றும் ரூ.31.95 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அலுவலக கட்டிடம் ஆகியவற்றை திறந்து வைத்து, சட்டமன்ற அறிவிப்பின்படி அன்னதானத் திட்டத்தை விரிவுப்படுத்தி வாரந்தோறும் வியாழக்கிழமை அன்று 500 பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வினை தொடங்கி வைத்தனர்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு குணசீலம், பிரசன்ன வேங்கடாஜலபதி பெருமாள் திருக்கோயிலில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள புதிய பசுமடத்திற்கு அடிக்கல் நாட்டி, ரூ.25 இலட்சம் மதப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மனநல மறுவாழ்வு மையத்தினை திறந்து வைத்தார்.

முன்னதாக திருச்சி மாவட்டம், மலைக்கோட்டை, தாயுமானசுவாமி திருக்கோயிலில் வீற்றிரு க்கும் மாணிக்க விநாயகருக்கு உபயதாரர் நிதியில் ரூ. 4 லட்சம் மதிப்பீட்டில் தேக்கு மரத்தினால் உருவாக்கப்பட்ட மரத்தேரின் வெள்ளோட்டத்தினை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு மற்றும் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

இந்நிகழ்ச்சிகளில் திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் மா. பிரதீப் குமார், இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர் இனிக்கோ எஸ்.இருதயராஜ், திருச்சி மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், இணை ஆணையர்கள் சி.மாரியப்பன், எ.ஆர்.பிரகாஷ், உதவி ஆணையர்கள் ஆர். ஹரிஹர சுப்பிரமணியன், எஸ். லட்சுமணன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கலைஞரின் மனசாட்சி! திராவிட இயக்கத்தின் அறிவுப் பெட்டகம்!

# முரசொலி மாறன் நினைவு நாளில் அவருக்கு என் புகழ் வணக்கம்!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழஞ்சலி!



சென்னை, நவ. 25-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மனசாட்சியாகத் திகழ்ந்த முரசொலி மாறன் அவர்களின் 20ஆம் ஆண்டு நினைவுநாள் நேற்று முன்தினம் (23.11.2023)!

அரசியலில் நாகரிகம், பொது வாழ்வில் தூய்மை, உயர்ந்த கொள்கைகள், தொலைநோக்குப் பார்வை, ஒன்றிய அமைச்சரவையில் கழகத்தின் சார்பில் பொறுப்பேற்று உலக அரங்கில் இந்தியாவை உயர்த்திக் காட்டிய பாங்கு என பெருமைக்குரியவராகத் திகழ்ந்தவர்!

இத்தகைய சிறப்புகளை பெற்ற முரசொலி மாறன் அவர்களின் நினைவு நாளையொட்டி, கழகத் தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள புகழஞ்சலியில், "கலைஞரின் மனசாட்சி, திராவிட இயக்கத்தின் அறிவுப் பெட்டகம், முரசொலி மாறன் அவர்களின் நினைவு நாளில் அவருக்கு என் புகழ் வணக்கம்" எனப் புகழாரம் சூட்டியுள்ளார்.

முரசொலி மாறன் அவர்களின் நினைவு நாளையொட்டி நேற்று முன்தினம் (23.11.2023), திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**மூத்த பிள்ளையாம் முரசொலியைப் பொறுப்பேற்று நடத்திய கலைஞரின் மனசாட்சி!**

**திராவிட இயக்கத்தின் அறிவுப் பெட்டகம்!**

**தலைநகரில் கழகத்தின் முகம்!**

**நாடாளுமன்றத்தில் மாநில உரிமையின் குரல்!**

**உலக அரங்கில் வளரும் நாடுகளுக்காக வாதாடிய மதியூகி!**

**இப்படி எத்தனை சொன்னாலும் தகும் தகுதிக்குரிய மதிப்புக்குரிய முரசொலி மாறன் அவர்களின் நினைவுநாளில் அவருக்கு என் புகழ்வணக்கம்!**

இவ்வாறு தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புகழாரம் சூட்டியுள்ளார்.





திருவண்ணாமலை நகர தி.மு.க. சார்பில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நலஉதவிகள் வழங்கும் விழாவில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு நலஉதவிகள் வழங்கினார். உடன் டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரை, இரா. ஶ்ரீதரன், எஸ்.பன்னீர்செல்வம், ப.கார்த்திவேல்மாறன் உட்பட பலர் உள்ளனர்.

நீலகிரி மாவட்டம் குன்னூரில் கடும் மழை - மண் சரிவு

# பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவிகள்!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் - ஆ.இராசா எம்.பி. வழங்கினர்!

நீலகிரி, நவ. 25 -

நீலகிரி மாவட்டத்தில், குன்னூர் வட்டத்தில் மழையின் காரணமாக பாதிக்கப்பட்ட குயில்ஹில்ஸ் பகுதி தடுப்புச்சுவர், மௌண்ட்பிளசன்ட்டில் மண்சரிவு ஏற்பட்ட பகுதிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் மற்றும் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா ஆகியோர் நேற்று முன்தினம் (23.11.2023) நேரில் பார்வையிட்டு, முத்தாலம்மன் பேட்டை அங்கன்வாடி மையத்தில்; தங்கியுள்ள பொதுமக்களை சந்தித்து, அவர்களுக்கு அத்தியாவசிய பொருட்களை வழங்கினர்.

பின்னர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது :

நீலகிரி மாவட்டத்தில் பெய்து வரும் மழையை எதிர்கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கை மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாவட்டத்தில் பெய்த மழை காரணமாக வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்ததால் சுமார் 25 பொதுமக்கள் நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தேவையான அத்தியாவசிய தேவைகள் பூர்த்தி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் மாவட்ட நிர்வாகம் 24 மணிநேரமும் மழையை எதிர்கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேட்டுப்பாளையம் சாலையில் ஏற்பட்ட மண்சரிவினை உரிய நேரத்தில் அப்புறப்படுத்தி, வாகனங்கள் செல்வதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளது என நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் கீர்த்தி பிரியதர்சினி, குன்னூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.பூஷணகுமார், குன்னூர் வட்டாட்சியர் திரு.கனிசுந்தரம் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

மயிலாடுதுறை மாவட்டம் - காவேரி பூம்பட்டினத்தில்

# கலைஞர் பாதையில் ஒரு பயணம் - மாணவர்களின் சுற்றுலா வாகனம்!

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார்!

நாகை. நவ.25-

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி ஒன்றியம் காவேரிபூம்பட்டினம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில், “கலைஞரின் பாதையில் ஒரு பயணம்” என்ற பெயரில் கலைஞரின் இலக்கிய பெருமை மற்றும் வரலாற்று சிறப்புகளை அறிந்து கொள்வதற்காக மாணவ, மாணவியர்களின் சுற்றுலா வாகனத்தை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி ஒன்றியம் காவேரிபூம்பட்டினம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில், “கலைஞரின் பாதையில் ஒரு பயணம்” என்ற பெயரில் கலைஞரின் இலக்கிய பெருமை மற்றும் வரலாற்று சிறப்புகளை அறிந்து கொள்வதற்காக மாணவ, மாணவியர்களின் சுற்றுலா வாகனத்தை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் பன்னீர்செல்வம்,மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.பி.மகாபாரதி மாவட்ட ஊராட்சி தலைவர் உமா மகேஸ்வரி சங்கர்,தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முத்து மகேந்திரன், ஜி என். ரவி, இராம இளங்கோவன், மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் மு. ஞானவேல், எஸ். செல்வமணி, கண்ணகி பன்னீர் பொருளாளர் மகா அலெக்சாண்டர், ஒன்றிய கழகச் செயலாளர்கள் பஞ்சு குமார், ஞான இமயநாதன், ப.முருகு மணி,செல்ல சேது ரவிக்குமார் மலர்விழி திருமாவளவன் அமிர்த விஜயகுமார் என்.இளையபெருமாள் என்.அப்துல் மாலிக் மங்கை சங்கர் கு.வைத்தியநாதன் ஏ.ஆர்.ராஜா ஏ.ஜி. ஜே.பிரபாகர் நகரக் கழக செயலாளர் மா. சுப்பராயன், உண்டாமணி (எ) என். செல்வராஜ், ஒன்றிய குழு தலைவர் கமலஜோதி தேவேந்திரன்,சீர்காழி நகர் மன்ற தலைவர் துர்கா பரமேஸ்வரி, ஊராட்சி மன்ற தலைவர் சசிகுமார் பொதுக்குழு உறுப்பினர்கள் பி.கென்னடி பி.சிவதாஸ்,சுபா நெடுஞ்செழியன், ஊராட்சி மன்ற தலைவர் என்.சசிகுமார் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அம்பிகாபதி, சீர்காழி வருவாய் கோட்டாட்சியர் உ.அர்ச்சனா, சீர்காழி முதன்மை கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் முத்துக்கணியன், த.பரமசிவம், மற்றும் மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி மாணவ, மாணவியர்களின் சுற்றுலா வாகனத்தை கொடியசைத்து வைத்து பேசுகையில்,

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் எழுப்பப்பட்ட கட்டிடங்கள், நினைவுச் சின்னங்கள், நினைவகங்கள், மணிமண்டபங்கள் போன்றவை பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு காண்பிக்கப்பட்டது. சென்னை வள்ளுவர் கோட்டம் கலைஞர் அவர்கள் எழுப்பிய கட்டிடம் முதன் முதலில் சென்னை பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு காண்பிக்கப்பட்டது. தொடர்ந்து, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள திருவள்ளுவர் சிலை, காமராஜர் மணிமண்டபம் மற்றும் ஒரு சில அணைகள் போன்றவை பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு காண்பிக்கப்பட்டது.

நவீன தமிழகத்தின் சிற்பி யார் என்றால் அது கலைஞர் அவர்கள். தமிழ்நாட்டில் எந்தவொரு மாவட்டத்திற்கு சென்றாலும், அங்குள்ள ஏதாவது ஒரு இடத்தில், கட்டிடமோ, நினைவகங்களோ, மற்ற கட்டிடங்களோ, அது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கைவண்ணத்தில் அமைந்ததாகவே இருக்கும். இதற்கு முன்னர் பல முதலமைச்சர்கள் தமிழ்நாட்டை ஆட்சி செய்து வந்தார்கள். அதில் பள்ளிக்கல்வித்துறைக்கு அதிகப்படியான திட்டங்களை கொண்டு வந்தது யார் என்று மாணவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். மாணவர்களுக்கு படிப்பு மிகவும் அவசியமானதாகும். அதனுடன், இந்த வரலாற்று சின்னங்களை தெரிந்து கொள்வது மிகவும் சிறப்பான ஒன்றாகும். 15 ஆயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த நகரம் இந்த பூம்புகார் நகரம் ஆகும். ஒரே நாளில் 70 கப்பல் நிறுத்தக்கூடிய அளவிற்கு முன்பு துறைமுகம் அமைந்திருந்தது. அதோடு, சங்கத்தமிழ் இலக்கியமான சிலப்பதிகாரம், மணிமேகலை, பட்டினப்பாலை போன்ற இதிகாசங்களில் வாணிபம் நடந்த சிறப்பு பற்றி எழுதப்பட்டிருக்கிறது. இந்த பெருமையை எல்லாம் அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையில் முத்தமி ழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சரான பிறகு, பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் நினைவுச் சின்னங்கள், மணிமண்டபங்கள், எழுப்பியுள்ளார்கள். நாம் எங்கு சென்றாலும், நாம் தமிழர் என்ற உணர்வு அனைவரின் மனதிலும் வர வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு, மாணவர்கள் யார் என்று தெரிந்து கொள்ள வேண்டும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பள்ளி மாணவ, மாணவர்கக்கு காண்பிப்பதற்காக இந்த பணிகளை துவங்கியுள்ளோம். இன்று மயிலாடுதுறை மாவட்டம் காவேரிப்பூம்பட்டினம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் இருந்து கலைஞரின் பாதையில் ஒரு பயணம் என்ற பெயரில் காவேரிப்பூம்பட்டினம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, காவேரிப்பூம்பட்டினம் அரசு உயர்நிலைப்பள்ளி, வாணகிரிக்குப்பம் அரசு நிலைப் பள்ளி உயர்நிலைப்பள்ளி, கீழப்பெரும்பள்ளம் அரசு மேல்நிலைப்பள்ளிகளைச் சார்ந்த 40 மாணவ - மாணவியர் இரண்டு வாகனங்களில் பூம்புகார் சிலப்பதிகாரக் கலைக்கூடம், தியாகி தில்லையாடி வள்ளியம்மை நினைவு மண்டபம், திருக்குவளை கலைஞர்.மு கருணாநிதி அவர்கள் பிறந்த இல்லம், திருவாரூர் ஆழித்தேர் மற்றும் கலைஞர் கோட்டம் ஆகிய இடங்களுக்கு சென்று வர உள்ளனர். கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆளுமைத் திறனை இளந்தலைமுறையினர் அறிந்து கொள்ளும் வகையில் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் பேச்சு, கவிதை, கட்டுரை முதலிய பல்வேறு போட்டிகள், கருத்தரங்குகள் ஆகியன சிறப்பான முறையில் நடத்தப்பட்டு வருகின்றன. இது மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பேசினார்

டிசம்பர் இறுதி வரை தினமும்

# தமிழ்நாட்டுக்கு காவிரியிலிருந்து 2,700 கனஅடி நீர் திறந்துவிட வேண்டும்!

## புதுடெல்லியில் நடைபெற்ற காவிரி ஒழுங்காற்றுக் குழு பரிந்துரை!

டெல்லி, நவ. 25 -

காவிரி நீர் ஒழுங்காற்று குழுவின் 90வது கூட்டம் நேற்று டெல்லியில் தொடங்கிய நிலையில் நாளை முதல் டிசம்பர் இறுதி வரை தமிழ் நாட்டுக்கு தினமும் 2,700 கனஅடி தண்ணீர் திறக்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது

காவிரி நடுவர் மன்றம் மற்றும் உச்சநீதிமன்ற உத்தரவு களை பின்பற்றி கர்நாடகா அரசு தமிழ்நாட்டுக்கு தண்ணீர் திறந்து விட வேண்டும். ஆனால் கர்நாடகா அரசு தண்ணீர் திறந்து விடுவது இல்லை.

உச்சநீதிமன்ற உத்தரவை கர்நாடகா மதிக்காமல் மழையில்லை, தண்ணீர் இல்லை என தமிழகத்தை வஞ்சிக் கிறது. அதோடு காவிரி நதி நீரை தமிழ்நாட்டுக்கு திறந்து விடுவதற்கு கர்நாடக அரசு தொடர்ந்து மறுத்து வருகிறது.

மேலும் அங்குள்ள கன்னட அமைப்பினர், விவசாய அமைப்பினர் தமிழ்நாட்டுக்கு தண்ணீர் திறப்பபை எதிர்த்து தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றனர். மேலும் பந்த் போராட் டங்களும் நடந்தன. அதோடுதமிழ்நாட்டுக்கு தண்ணீர் திறந்து விடப்படும் கிருஷ்ணராஜசாகர் (கே.ஆர்.எஸ்.) அணையையும் முற்றுகை யிட்டு போராட்டங்கள் நடத்தி னர்.

இந்நிலையில் தான் கடந்த மாதம் 30ம் தேதி நடந்த காவிரி ஒழுங்காற்று குழு கூட்டத்தில் நவம்பர் மாதம் 22ம் தேதி வரை தமிழ்நாட்டுக்கு வினாடிக்கு 2,600 கனஅடி நீரை திறக்க வேண்டும் என பரிந்துரை செய்யப்பட்டது. இதற்கு கர்நாடக அரசு எதிர்ப்பு தெரிவித்தது. இருப்பினும் வேறு வழியின்றி அந்த தண்ணீரை கர்நாடகா தமிழ்நாட்டுக்கு திறந்து விட்டது.

இந்நிலையில் தான் டெல்லியில் நேற்று காவிரி ஒழுங்காற்று குழுவின் 90வது கூட்டம் நடைபெற்றது. காவிரி நீர் ஒழுங்காற்று குழுவின் தலைவர் வினீத் குப்தா தலைமையில் நேற்று காலை 11.30 மணிக்கு டெல்லியில் தொடங்கியது. இந்த கூட்டத்தில் காணொலி மூலம் தமிழகம், கர்நாடகா, கேரளா, புதுச்சேரி ஆகிய மாநிலங்களின் நீர் வளத் துறை அதிகாரிகள், ஒழுங்காற்று குழு உறுப்பினர்கள் பங்கேற்றுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில், தமிழக அரசு சார்பில் கர்நாடகா நிலுவையில் உள்ள தண்ணீரை திறந்து விட நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டது. அதோடு கர்நாடகாவில் வட கிழக்கு பருவமழை என்பது ஓரளவு பெய்து வருகிறது. இதனால் தண்ணீர் திறப்பதில் அவர்களுக்கு சிக்கல் இருக்காது. அதே வேளையில் கர்நாடகா திறந்து விடும் தண்ணீரை மேட்டூர் அணையில் சேமித்து வைக்கவும் முடியும்.

ஏனென்றால் மேட்டூர் அணையில் 23 டி.எம்.சி. தண்ணீர் தான் இருப்பு உள்ளது. இதனால் கர்நாடகா திறக்கும் தண்ணீரை முழு மையாக சேமிக்க முடியும் என கூறப்பட்டது.

இதை கேட்ட காவிரி நீர் ஒழுங்காற்று குழு கர்நாடகாவை வினாடிக்கு 2,600 தண்ணீர் திறந்து விட வேண்டும் என கூறியிருந்தோம். ஆனால் 5 ஆயிரம் முதல் 8 ஆயிரம் கன அடி வரை தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இருப்பி னும் முந்தயை நிலுவை தண்ணீர் திறக்க வேண்டி யுள்ளது.

இதனால் நாளை முதல் டிசம்பர் இறுதி வரை தமிழ் நாட்டுக்கு தினமும் 2,700 கனஅடி நீரை கர்நாடகா திறக்க பரிந்துரை செய்யப்படுகிறது” என கூறியது.

இதன்மூலம் இன்று முதல் கர்நாடகா தமிழ்நாட்டுக்கு 2,700 கனஅடி தண்ணீரை டிசம்பர் இறுதி வரை திறக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு முன்னாள் ஆளுநர்:

# பாத்திமா பீவி மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, நவ. 25-

தமிழ்நாடு முன்னாள் ஆளுநர் பாத்திமா பீவி அவர்களின் மறைவையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

**தமிழ்நாடு முன்னாள் ஆளுநரும், உச்சநீதிமன்ற நீதிபதியான முதல் பெண்மணி என்ற பெருமைக்குரிய வருமான பாத்திமா பீவி அவர்கள் மறைந்தார் என்றறிந்து வருந்துகிறேன்.**

**உச்சநீதிமன்ற நீதிபதி, தேசிய மனித உரிமைகள் ஆணைய உறுப்பினர், கேரள பிற்படுத்தப்பட்டோர் ஆணையத் தலைவர், தமிழ்நாடு ஆளுநர் எனப் பல உயர் பொறுப்புகளில் பணியாற்றியுள்ள பாத்திமா பீவி அவர்களது மறைவால் வாடும் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



மாநில உரிமை மீட்பை வலியுறுத்தி சேலத்தில் நடைபெறவிருக்கும் கழக இளைஞரணி ‘2’வது மாநில மாநாட்டிற்கான இருசக்கர வாகனப் பேரணி காரைக்காலை வந்தடைந்தது. பிரச்சாரத்தில் வந்த காரைக்கால் மாநில கழக அமைப்பாளர் ஏ.எம்.எச்.நாஜிம், எம்.எல்.ஏ. எம்.நாக தியாகராஜன், எம்.எல்.ஏ. கழக இளைஞர் அணி அமைப்பாளர் I முஹம்மது ரிஃபாஸ் ஆகியோர் வாகனப் பேரணியை வரவேற்று வாழ்த்துகள் தெரிவித்தார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சமயநல்லூர் செல்வராஜ்

### நவம்பர் 25 (2012)



**சமயநல்லூர் தொகுதியிலிருந்து இருமுறை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டவர்.**

**தலைவர் கலைஞர் அவர்களின் அமைச்சரவையில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சராக 1996 முதல் 2001ஆம் ஆண்டு வரை பொறுப்பு வகித்தவர்.**

**“இளமைக் காலத்திலேயே, மாணவப் பருவத்திலே ஆசிரியராகப் பணியாற்றிய காலத்திலேயே சுயமரியாதை வீரராகத் திகழ்ந்தவர். அவர் முடிவெய்துகிற வரையில் முனை முறியாமல்; திராவிட இயக்கச் சிந்தனையாளராக சுயமரியாதைச் சுடராகத் திகழ்ந்தவர்” என தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## ஆண்களுக்கு சரிநிகர் சமமாக

# பெண்களுக்கு உரிமைகளைப் பெற்றுத் தந்தது திராவிட இயக்கம்!

## கிருஷ்ணகிரியில் நடைபெற்ற திருமண விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

கிருஷ்ணகிரி,நவ.25-

ஆண்களுக்கு சரிநிகர் சமமாக பெண்களுக்கு உரிமைகளை பெற்றுத் தந்தது திராவிட இயக்கம் என்று கிருஷ்ணகிரியில் நடைபெற்ற மணவிழாவில் பேசுகையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.

கிருஷ்ண்கிரி குறிஞ்சி மஹாலில் என்.அமீர் சுஹேல் ஆ.மாதுளா ஆகியோர் திருமணத்தை நடத்தி வைத்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்திப் பேசினார்.

அப்போது மணமக்களை வாழ்த்தி, தி.மு.க தலைவரும் தமிழக முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கிய வாழ்த்துச் செய்தியை வாசித்தளித்து, மணமக்களை வாழ்த்திப்பேசினார்.

அப்போது அவர் வாழ்த்திப் பேசியதாவது:

**முதலமைச்சரின் வாழ்த்துச் செய்தியை முதலில் படித்து விடுகிறேன்.**

**கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் பின்புறம் அமைந்துள்ள குறிஞ்சி மஹாலில் இன்று நடைபெறும் திருமண விழாவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்திட மிகவும் ஆவலுடன் நான் காத்திருந்தேன்.**

**தங்களின் அன்புக்குரிய மகன் திருநிறைச்செல்வன் என்.அமீர் சுகைர் அவர்களுக்கும்,திரு.சி.எம்.ஆசைத்தம்பி, திருமதி.பரிமளா ஆகியோருடைய பாசமிகு மகள் திருநிறைச்செல்வி ஆ.மாதுலா பி.ஏ, எம்.டி அவர்களுக்கும்,**

**கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் பின்புறம் அமைந்துள்ள குறிஞ்சி மகாலில் இன்று நடைபெறும் திருமண விழாவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்திட மிகவும் ஆவலுடன் நான் காத்திருந்தேன்.**

**ஆனால், பயணங்களைத் தவிர்க்குமாறு மருத்துவர்கள் அறிவுறுத்திய காரணத்தால் இந்த மணவிழாவில் கலந்து கொள்ள இயலவில்லை. எனவேதான் எனது சார்பில் இளைஞரணி செயலாளர், இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களை இந்த மணவிழாவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துமாறு அனுப்பி வைத்துள்ளேன்.**

**மணமக்கள் இருவரும் தங்களது இல்லற வாழ்வுப் பயணத்தில் எல்லா வளமும் நலமும் பெற்று வீட்டிற்கும் நாட்டிற்கும் ஒளிவிளக்காகத் திகழ்ந்திட எனது நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொள்கின்றேன்.**

**இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துச் செதியை படித்தார்.**

இதை தொடர்ந்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:

மணமக்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திருமண விழாவில் நம்முடைய முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் பங்கு பெற்று அவர்களுடைய தலைமையில், இந்தத் திருமணம் நடைபெறுவதாக இருந்தது. அந்த வாழ்த்துச் செய்தியை நான் படித்தேன். அவரால் வரவில்லை என்றாலும், அவருடைய நினைவு முழுவதும் அவருடைய ஆசி முழுவதும் அவருடைய வாழ்த்து முழுவதும் இன்றைக்கு இந்தத் திருமண விழாவில் தான் இருக்கும்.

எனவேதான் என்ன அழைத்து, `நீ கண்டிப்பாகத் திருமணம் நிகழ்ச்சிக்கு சென்று மணமக்களை வாழ்த்த வேண்டும்' என்று அறிவுறுத்தி இருந்தார்கள். எனவே அந்தப் பெருமையை அளித்த கழகத் தலைவர் அவர்களுக்கும் மணமக்கள் வீட்டாருக்கும் என்னுடைய வாழ்த்துக்களையும் நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நவாப் அவர்களும் அக்கா சரிதா அவர்களும் போட்டி போட்டுக் கொண்டு கழகத்தில் தங்களுடைய செயல்களை, கழகப் பணிகளை ஆற்றிக் கொண்டிருப்பவர்கள்.

### முத்தமிழறிஞர் கலைஞர் சிலை திறக்க வாய்ப்பு!

நேற்று கூட நம்முடைய கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கலைஞரின் திருவுருவச் சிலையைத் திறந்து வைக்கின்ற வாய்ப்பை எனக்கு நவாப் அவர்கள் அளித்திருந்தார்கள். அதற்கு இந்த நேரத்தில் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் பிறந்ததிலிருந்து அவர் இறக்கும் வரை அவர் சந்திக்காத போராட்டமே கிடையாது. அவர் சந்தித்த அத்தனை போராட்டகளிலும் வெற்றி பெற்ற ஒரே தலைவர் அது முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தான். அதேபோல் நேற்று இந்தச் சிலையை நிறுவுவதற்கும் மிகப்பெரிய ஒரு சட்டப் போராட்டத்தை நடத்தி நவாப் அவர்கள் வெற்றி பெற்று இந்தக் கிருஷ்ணகிரியில் நம் தலைவருடைய கலைஞரின் சிலையை அவர் திறந்து வைத்திருக்கின்றார்.

சென்ற மாதம் கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு இளைஞர் அணியின் சார்பாகப் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு வந்திருந்தேன். செயல் வீரர் கூட்டம் பொற்கிழி வழங்குகின்ற நிகழ்ச்சி. நம் மாவட்ட கழகச் செயலாளர் மதியழகன் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள். அப்பொழுதுகூட நவாப் அவர்கள் நம்முடைய இளைஞர் அணி மாநில மாநாட்டிற்காக நிதியாக மாநாட்டு நிதியாக ஐந்து லட்சம் ரூபாய் அளித்திருந்தார்கள். இப்பொழுது இந்த மேடையிலே தேர்தல் நிதியாக 10 லட்சம் ரூபாய் நவாப் அவர்கள் அளித்திருக்கிறார்கள். எனவே அதற்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேஎன்.

தேர்தல் வந்து விட்டது என்பதை அவர்கள் அத்தனை பேரும் ஞாபகப்படுத்துவதற்காகத் தான் இதை அளித்து இருக்கின்றார்கள் இங்கே தாய்மார்கள் வந்திருக்கிறீர்கள்.

ஒரு காலத்தில் நூறு வருடத்திற்கு முன்பு பெண்கள் வீட்டை விட்டு வெளியே வர முடியாத சூழ்நிலை இருந்தது. பெண்கள் படிக்க முடியாத சூழ்நிலை இருந்தது. பெண்கள் வேலை பார்க்க முடியாத சூழ்நிலை இருந்தது. பெண்கள் யாரிடமும் பேச முடியாது. வீட்டை விட்டே வெளியே வரமுடியாது. அப்படி இருந்த சூழல் இருந்தது. அதையெல்லாம் மாற்றி இன்றைக்கு ஆணுக்குப் பெண் சமம். சரிநிகர் என்ற அந்தச் சூழ்நிலையை உருவாக்கியது யார் என்றால் நம்முடைய திராவிட இயக்கம்தான். தந்தை பெரியார் அவர்கள் தான். பேரறிஞர் அண்ணா அவர்கள்தான். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான்.

பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை கொடுத்தது. நம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் அரசில். அதேபோல் இன்றைக்கு நம்முடைய தலைவர் அவர்கள் ஆட்சி அமைந்து பெண்களுக்குக் கட்டணமில்லா பேருந்து வசதியை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்.

ஒவ்வொரு பெண்ணும் இந்தத் திட்டத்தின் மூலம் கட்டணமில்லா பேருந்து வசதி திட்டத்தின் மூலம் ஒவ்வொரு மகளிரும் மாதம் 1000 ரூபாய் சேமிக்கிறார்கள்.

சமீபத்தில் நம் தேர்தல் வாக்குறுதியில் சொன்ன ஒரு வாக்குறுதி. மூன்று மாதங்களாகக் கொடுத்துவிட்டோம். கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத்திட்டம் தேர்தல் அறிக்கையில் சொன்ன வாக்குறுதி.

### அரசின் திட்டங்களை மக்களிடம் சேர்ப்பீர்!

ஒவ்வொரு மாதமும் ஆயிரம் ரூபாய். கிட்டத்தட்ட ஒரு கோடியே 14 இலட்சம் மகளிர் இந்தத் திட்டத்தின் மூலம் பயன்பெறுகிறார்கள். இந்தத் திட்டங்களையெல்லாம் மக்களிடம் கொண்டு நீங்கள் சேர்க்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் உங்களிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

மணமக்கள் இருவரும் நன்கு படித்தவர்கள். எனவே, அவர்களுக்கு நான் அறிவுரை கூறத் தேவையில்லை. அவர்கள் இரண்டு பேரும் தங்களின் சுயமரியாதையோடு தன் உரிமைகளை விட்டுக் கொடுக்காமல் பல்லாண்டு காலம் வாழ்ந்து நாட்டிற்கும், வீட்டிற்கும் ஒளிவிளக்காய் திகழ வேண்டும் என்று கேட்டுக்கொண்டு நம்முடைய நவாப் அவர்கள் சகோதரி சரிதா அவர்களும் கழகமும் போல, நம் கலைஞரும் தமிழும் போல, நம்முடைய தலைவரும் உழைப்பும் போலவாழ்க வாழ்க எனக் கூறிக்கொள்கின்றேன்.

மணமக்களுக்கு ஒரேயொரு கோரிக்கை தங்களுக்குப் பிறக்கப்போகும் பெண்ணாக இருந்தாலும் சரி, ஆணாக இருந்தாலும் சரி ஓர் அழகான தமிழ் பெயரை சூட்ட வேண்டும் என்று கூறிக் கொண்டு வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.



இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### டாக்டர் கனிமொழி (எ) ஜெயஸ்ரீ டாக்டர் நவீன் குமார் மணவிழா!

அடுத்து கிருஷ்ணகிரி மாவட்டம், பெங்களூரு பைபாஸ், குமரன் மஹாலில் டாக்டர் எம்.கனி மொழி என்கிற ஜெயஸ்ரீ எம்.பி.பி.எஸ் அவர்களுக்கும், டாக்டர்.நவீன்குமார் எம்.பி.பி.எஸ் அவர்களுக்கும், இளைஞர் நலன் விளையாட்டு மேம்பட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திருமணத்தை நடத்தி வைத்து வாழ்த்துரை வழங்கினார்.

அப்போது மணமக்களை வாழ்த்தி, தி.மு.க தலைவரும் தமிழக முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கிய வாழ்த்துச் செய்தியை வாசித்தளித்து, மணமக்களை வாழ்த்திப்பேசினார். அப்போது அவர் வாழ்த்திப் பேசியதாவது:

**கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டத் துணைச் செயலாளர் வேப்பனப்பள்ளி பி.முருகன்பி.ஜெயபிரபா இல்லத் திருமணத்துக்கு முதலமைச்சர் அவர்களின் வாழ்த்துச் செய்தி.**

**தங்களின் அன்புக்குரிய மகள் திருநிறைச்செல்வி டாக்டர் எம்.கனிமொழி என்கிற ஜெயஸ்ரீ எம்.பி.பி.எஸ் அவர்களுக்கும், திரு. டி.முருகன் திருமதி.எம்.தேவகி ஆகியோரின் பாசமிகு மகன் திருநிறைச்செல்வன் டாக்டர்.எம். நவீன்குமார் எம்.பி.பி.எஸ் அவர்களுக்கும், கிருஷ்ணகிரி மாவட்டம், பெங்களூரு பைபாஸ், குமரன் மஹாலில் இன்று நடைபெறும் திருமண விழாவில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்திட மிகவும் ஆவலுடன் இருந்தேன்.**

**ஆனால், பயணங்களைத் தவிர்க்குமாறு மருத்துவர்கள் அறிவுறுத்தியதன் காரணத்தால், இந்த மண விழாவில் கலந்துகொள்ள இயலவில்லை. எனவேதான் எனது சார்பில், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களை இந்த மண விழாவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துமாறு அனுப்பி வைத்துள்ளேன்.**

**மணமக்கள் இருவரும் தங்கள் இல்லற வாழ்க்கைப் பயணத்தில் எல்லா வளமும், நலமும் பெற்று வீட்டிற்கும், நாட்டிற்கும் ஒளிவிளக்காகத் திகழ்ந்திட, எனது நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.**

**இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டார்.**

இதனைத் தொடர்ந்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மணமக்களை வாழ்த்திப் பேசியதாவது:

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன் அவர்களின் இல்லத் திருமண விழாவில், கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தியுள்ள, அமைச்சர் சக்கரபாணி அவர்களே, கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டத்தின் இந்தத் திருமண விழாவில் பங்கேற்று மணமக்களை வாழ்த்துவதில் நான் மிகுந்த பெருமை அடைகின்றேன். மகிழ்ச்சி அடைகின்றேன்.

இங்கு ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல நம்முடைய கழகத் தலைவர் அவர்கள், முதலமைச்சர் அவர்கள் நேற்றும், இன்றும் இந்த கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வருகை தந்து, பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு இந்தத் திருமண விழாவையும் அவருடைய தலைமையில் நடத்துவதாகத்தான் இருந்தது.

மருத்துவர்கள் கட்டளையின்படி 2, 3 நாட்கள் பயணத்தைத் தவிர்க்கும்படி கேட்டுக்கொண்டதால், அவர் சார்பாக, நான் இங்கே வந்து இந்தத் திருமணத்தை நடத்தி வைத்திருக்கின்றேன்.

தலைவர் அவர்கள் இந்தத் திருமண விழாவிற்கு வரவில்லை என்றாலும், அவருடைய எண்ணம் முழுவதும், இந்தத் திருமண விழாவில்தான் இருக்கும். அவர் சென்னையில் இருந்தாலும், அங்கிருந்து நம் மணமக்களை வாழ்த்திக்கொண்டுதான் இருக்கின்றார். இருந்தாலும், எனக்கு இந்த வாய்ப்பை அளித்த தலைவர் அவர்களுக்கும், முருகன் அவர்களுக்கும், மணமக்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்களை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்தத் திருமணம் நம் கழகக் குடும்பங்களுக்கே உரித்தான வகையில் சுயமரியாதைத் திருமணமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மணமக்கள் இருவரும் மருத்துவர்கள். அந்த வகையில், இந்தத் திருமணத்தில் பங்கேற்பதில் எனக்குக் கூடுதல் மகிழ்ச்சி.

### ஆற்றல்மிகு செயல்வீரர் முருகன்!

முருகன் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கழகத்தில் ஆற்றமிகு செயல்வீரர்களில் முதன்மையானவர். கழகத்தில் பல்வேறு நிலைகளில் உழைத்துப் படிப்படியாகத் தனது உழைப்பின் மூலமாக உயர்ந்தவர். இரண்டு முறை ஊராட்சி மன்றத் தலைவராகச் செயல்பட்டவர்.

ஒரு முறை வேப்பனப்பள்ளி ஒன்றியப் பெருந்தலைவராகவும், வேப்பனப்பள்ளி சட்டமன்ற உறுப்பினராகவும் சிறப்பாகப் பணியாற்றியவர். குறிப்பாக, இந்தத் திருமணத்தில் பங்கேற்பதில் கூடுதல் மகிழ்ச்சி, பெருமை. ஏனென்றால், முருகன் இளைஞர் அணியில் இருந்து வந்தவர்.

1985ஆம் ஆண்டிலேயே இளைஞர் அணியில் உறுப்பினராகச் சேர்ந்தவர். ,

பின்னர் ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர், ஒன்றியத் துணைச் செயலாளர், மாவட்டப் பொருளாளர் போன்ற பொறுப்புகளில் எல்லாம் சிறப்பாக பணியாற்றியவர்.

இன்றைக்கு மாவட்டத் துணைச் செயலாளராகச் சிறப்பாகச் செயல்பட்டு வந்துக் கொண்டிருக்கிறார். முருகன் அவர்கள் கடந்த சட்டமன்றத் தேர்தலிலே வெற்றிப் பெற்றிருக்க வேண்டும். மிகக் குறைந்த வாக்கு வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை இழந்தார்.

ஆனால், இந்த நேரத்தில் நீங்கள் அனைவரும் ஒரு சபதம் எடுத்துக்கொள்ள வேண்டும். வருகின்ற வேப்பனப்பள்ளி சட்டமன்றத் தேர்தலில் அடுத்தமுறை கழகத்தை நீங்கள் நிச்சயம் வெற்றிப்பெற செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

கழகத்தில் எப்படி செயற்குழு, பொதுக்குழு எல்லாம் எவ்வளவு முக்கியமோ அதேபோல கழக இல்லங்களின் திருமண விழாவும் மிக மிக முக்கியம். இன்னும் சொல்லப்போனால், இந்தத் திருமண விழாவே ஒரு சிறிய மாநாடு போல சிறப்பாக உங்களுடைய வாழ்த்துகளோடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

### செயற்குழு, பொதுக்குழு போல் கழகத் திருமணமும் முக்கியம்!

ஏனென்றால், எமர்ஜென்சி காலத்தில்கூட அரசியல் கூட்டங்களை நடத்த முடியாத ஒரு சூழல் இருந்தது. அப்போது நம்முடைய கழக உடன்பிறப்புகளெல்லாம் திருமண நிகழ்ச்சியைத்தான் கழக நிகழ்ச்சியாக அங்கே சென்று நம்முடைய கொள்கைகளை எல்லாம் பேசுகின்ற இடமாகத் திருமண விழாக்களை நடத்திக் கொண்டிருந்தோம்.

இந்தத் திருமண நிகழ்ச்சியில்கூட ஆண்களுக்கு நிகராக, இன்னும் சொல்லப்போனால், ஆண்களைவிட அதிகமாக பெண்கள் வந்து அமர்ந்திருக்கிறீர்கள்.

ஒரு காலத்தில், நூறு வருடத்திற்கு முன்பு பெண்கள் வீட்டை விட்டு வெளியே வர முடியாத சூழ்நிலை இருந்தது. பெண்கள் படிக்க முடியாத சூழ்நிலை இருந்தது. பெண்கள் வேலை பார்க்க முடியாத சூழ்நிலை இருந்தது. பெண்கள் யாரிடமும் பேச முடியாது. வீட்டை விட்டே வெளியே வரமுடியாது. அப்படிப்பட்ட சூழல் இருந்தது. அதையெல்லாம் மாற்றி இன்றைக்கு ஆணுக்குப் பெண் சரி நிகர் சமம் என்ற அந்தச் சூழ்நிலையை உருவாக்கியது யார் என்றால், நம்முடைய திராவிட இயக்கம்தான். தந்தை பெரியார் அவர்கள்தான். பேரறிஞர் அண்ணா அவர்கள்தான். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான்.

பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை பெற்றுக் கொடுத்தது, நம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் அரசில்தான். அதேபோல் இன்றைக்கு நம்முடைய தலைவர் அவர்கள் ஆட்சி அமைந்து, பெண்களுக்குக் கட்டணமில்லாப் பேருந்து வசதியை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்.

ஒவ்வொரு பெண்ணும் இந்தத் திட்டத்தின் மூலம் கட்டணமில்லாப் பேருந்து வசதி திட்டத்தின் மூலம் ஒவ்வொரு மகளிரும் மாதம் 1000 ரூபாய் சேமிக்கிறார்கள்.

ஒரு ஆய்வில் சொல்லியிருக்கிறார்கள். குடும்பச் செலவுக்காகச் சேமிப்பதில், ஆண்களைவிட, பெண்கள்தான் அதிக ஆர்வம் காட்டுவார்கள். சரியாகச் சேமிப்பார்கள் என்று ஒரு ஆய்வறிக்கை சொல்லியிருக்கிறது.

அதனால்தான் பெண்களுக்கு என்று நம்முடைய திராவிட மாடல் அரசு பல்வேறு திட்டங்களைச் செய்துகொண்டிருக்கிறது. சமீபத்தில் நம் தேர்தல் வாக்குறுதியில் சொன்ன ஒரு வாக்குறுதி.

### பெண்களுக்கு பல்வேறு திட்டங்கள்!

மூன்று மாதங்களாகக் கொடுத்துவிட்டோம். கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம், தேர்தல் அறிக்கையில் சொன்ன வாக்குறுதி. ஒவ்வொரு மாதமும் ஆயிரம் ரூபாய். கிட்டத்தட்ட ஒரு கோடியே 14 இலட்சம் மகளிர் இந்தத் திட்டத்தின் மூலம் பயன்பெறுகிறார்கள்.

இந்தத் திட்டங்களையெல்லாம் மக்களிடம் நீங்கள்தான் கொண்டு சேர்க்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் உங்களிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

நம்முடைய மணமக்கள் இருவரும் படித்தவர்கள். நிறைய ஆலோசனை சொல்ல தேவையில்லை, நிறைய அறிவுரை சொல்ல தேவையில்லை.

இரண்டு பேருமே மருத்துவர்கள். எனவே, அவர்கள் இரண்டு பேரும் சுயமரியாதையுடன் உரிமைகளை விட்டுக் கொடுக்காமல், நம்முடைய இந்தியா கூட்டணி போல, வெற்றிக் கூட்டணியாக இருவரும் வாழ்க. வாழவேண்டும்.

நம்முடைய முருகன் அவர்களும் கழகமும் போல, நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரும், தமிழும் போல, நம்முடைய தலைவரும் உழைப்பும் போல இருவரும் ஒன்றிணைந்து பல்லாண்டு காலம் வாழ்க, வாழ்க என வாழ்த்துகின்றேன்.

முருகன் அவர்களின் இல்லத் திருமண விழாவை நடத்தி வைக்கின்ற வாய்ப்பைக் கொடுத்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, இரண்டு நாட்களாக இந்த கிருஷ்ணகிரி மாவட்டத்தில், பல்வேறு நிகழ்ச்சிகள், இங்கு சக்கரபாணி அவர்கள் சொன்னதைப்போல, எங்கு போனாலும் நேற்று முன்தினம் மாலையிருந்து எங்கு போனாலும் மக்கள் கூட்டம்.

மிகப்பெரிய எழுச்சி, எங்கு போனாலும் கருப்பு சிவப்புக் கொடி. நம்முடைய கழகத்தினர், பொது மக்கள், முக்கியமாக மகளிர்... மிகப்பெரிய எழுச்சியான வரவேற்பைக் கொடுத்திருக்கிறீர்கள்.

2021ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் மிகப்பெரிய ஒரு வெற்றி வாய்ப்பை கொடுத்தீர்கள். அடிமைகளை விரட்டி வீட்டிற்கு அனுப்பினோம். இப்போது வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் அடிமைகளுடைய ஓனர்ஸ், எஜமானர்களையும் துரத்தி அடிக்க வேண்டும். எனவே, இந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கு நாம் அத்தனைபேரும் தயாராகுவோம் என்று கூறிக்கொண்டு மணமக்கள் இருவரும் வாழ்க, வாழ்க என்று வாழ்த்தி வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.


இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



திருச்சி மலைக்கோட்டை தாயுமான சுவாமி திருக்கோவிலில் உள்ள மாணிக்க விநாயகர் சன்னதியில் தேர் வெள்ளோட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு மற்றும் தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் கலந்து கொண்டு தேரை இழுத்து தொடங்கி வைத்தனர். இந்நிகழ்வில் மாநகரக் கழகச் செயலாளர் மதிவாணன், கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், மலைக்கோட்டை பகுதிச் செயலாளர் மோகன் திருச்சி மண்டல இணை ஆணையர் இரா. பிரகாஷ், மலைக்கோட்டை திருக்கோவில் உதவி ஆணையர் செயல் அலுவலர் ஹரிஹர சுப்பிரமணியன், மலைக்கோட்டை கண்காணிப்பாளர் எஸ்.தேவராஜ் மற்றும் பொதுமக்கள் திருக்கோவில் பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை தி.மு.க. அலுவலகத்தில் முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் 20வது நினைவு தினத்தை முன்னிட்டு புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் முரசொலி மாறன் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். இந்நிகழ்வுகளில் டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ., அரு.வீரமணி, செ.அசோக்பாண்டியன், பி.ராஜேஸ்வரி, எம்.லியாகத்அலி, ஆ.செந்தில், சுப.சரவணன், கீரை, தமிழ்ராஜா, என்.சாத்தையா, சி.ஆர்.வி.சித்ரா, மு.க.ராமகிருஷ்ணன், எம்.எம்.பாலு, அ.ரெத்தினம், ராம.செல்வராஜ், வே.ராஜேஸ், செந்தாமரைபாலு, பொன்.பாரிவள்ளல், அரங்கநாயகம், மு.கலைஞர்கருணாநிதி, வடவாளம்க.செ.மணிமாறன், வெற்றிச்செல்வன், செ.ரமேஷ், பால்ராஜ், முரளி, ரமேஷ், செந்தமிழ் அரசு உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.


HAPPY BIRTHDAY
OUR HOPE
மயிலை த.வேலு MLA,
சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர்
தமிழச்சி தங்கபாண்டியன் MP,
தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்
எஸ்.ஜோயல்
ஜெ.கருணாநிதி MLA,
கே.ஏழுமலை MC,
jagan adds 98417 02981
வாழ்த்துக்களுடன் ♦ ராஜா அன்பழகன் B.Com.,MC,
மாவட்ட அமைப்பாளர் – நியமனகுழு உறுப்பினர்–பெருநகர சென்னை மாநகராட்சி
சென்னை தென் மேற்கு மாவட்ட தி.மு.க இளைஞர்அணி





நவம்பர் 27
எளியோர் எழுச்சிநாள்

அன்பான பண்பாளரே..!

வாழ்க... வாழ்க...



**திருத்தணி எஸ்.சந்திரன்** B.A., LLB., MLA.,
திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச்செயலாளர்
திருத்தணி சட்டமன்ற உறுப்பினர்

அன்புடன்

**Dr.VCR.குமரன்** BAMS.,
மாவட்ட கழக துணை செயலாளர்
திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.

SS Digital திருவள்ளூர்
96 299 326 49


பகுத்தறிவு சீர்திருத்தச் செம்மல்
கலைஞர்
நூற்றாண்டு விழா
நாள்: 25-11- 2023 சனிக்கிழமை காலை 10.30 மணி - இடம்: பேபி மஹால், வேலூர்
மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் / கழகப் பொதுச்செயலாளர்
துரைமுருகன்
பகுத்தறிவு சீர்திருத்தச் செம்மல்-கலைஞர்
என்ற சிறப்பு மலரினை வெளியிட்டு விழாப் பேருரையாற்றுவார்கள்
சு.முத்துசாமி
மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் / ஈரோடு தெற்கு மாவட்ட கழகச் செயலாளர்
அர.சக்கரபாணி
மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் / திண்டுக்கல் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர்
ஆகியோர் முன்னிலை வகிப்பார்கள்
ஆர்.காந்தி
மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் / வேலூர் மாவட்ட கழகச் செயலாளர்
சிறப்புரையாற்றுவார்கள்
வாழ்த்துரை
து.மு.கதிர் ஆனந்த்
வேலூர் பாராளுமன்ற உறுப்பினர் /
மாநில தலைவர் - அமைப்பு சாரா ஓட்டுநர் அணி
சி.என்.அண்ணாதுரை
திருவண்ணாமலை பாராளுமன்ற உறுப்பினர் /
கழக மாநில மருத்துவ அணி துணை அமைப்பாளர்
வி.அமலுவிஜயன்
குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர்
ஜெ.எல்.ஈஸ்வரப்பன்
ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர்
அ.நல்லதம்பி
திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர்
க.தேவராஜி
ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் /
திருப்பத்தூர் மாவட்ட கழகச் செயலாளர்
அ.செ.வில்வநாதன்
ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர்
ஏ.எம்.முனிரத்தினம்
சோளிங்கர் சட்டமன்ற உறுப்பினர்
சுஜாதா ஆனந்தகுமார்
மாண்புமிகு மேயர், வேலூர் மாநகராட்சி
மு.பாபு
மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர்/
திட்டக்குழுத் தலைவர்
மா.சுனில்குமார்
துணை மேயர், வேலூர் மாநகராட்சி
கலைஞர்
100
1924 - 2023
கலைஞர் நூற்றாண்டு விழா
சிறப்பு புகைப்படக் கண்காட்சி
காலை: 10.00 மணி - இடம்: டவுன் ஹால், வேலூர்
துரைமுருகன்
மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் அவர்களால்
தொடங்கி வைக்கப்படும்.
திருச்சி கலைக்காவேரி கலைக்குழுவினரின்
கலை நிகழ்ச்சி
பிற்பகல்: 3.00 மணி - இடம்: பேபி மஹால், வேலூர்
பட்டிமன்றம்
தலைப்பு : முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின்
நிலைத்த புகழுக்குப் பெரிதும் காரணம்
இலக்கியப் பணியா ? சமுதாயப் பணியா ?
மாலை: 6.00 மணி - இடம்: பேபி மஹால், வேலூர்
துவக்கவுரை
எஸ்.ஜெகத்ரட்சகன்
அரக்கோணம் பாராளுமன்ற உறுப்பினர் / கழக கொள்கை பரப்புச் செயலாளர்
முன்னிலை:
ஏ.பி.நந்தகுமார்
அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் /
வேலூர் மாவட்ட செயலாளர்
ப.கார்த்திகேயன்
வேலூர் சட்டமன்ற உறுப்பினர் /
வேலூர் மாநகர செயலாளர்
பட்டிமன்ற நடுவர்:
நகைச்சுவை நாவலர் புலவர் மா.இராமலிங்கம்
இலக்கியப் பணியே
முனைவர் இரா.நவஜோதி
குறிஞ்சிப்பாடி
முனைவர் பி.பாஸ்கர்
பட்டுக்கோட்டை
திருமதி அன்னலெட்சுமி
திருச்சி
சமுதாயப் பணியே
முனைவர் அபு
சேலம்
கவிஞர் லலிதா
மணப்பாறை
முனைவர் வேதநாயகி
திருத்தணி
பகுத்தறிவு சீர்திருத்தச் செம்மல் - கலைஞர்
குழு உறுப்பினர்கள்:
| நீதியரசர் திரு. கே.சந்துரு | திருமதி. ஏ.எஸ்.குமரி
| திரு. சுந்தர ஆவுடையப்பன் | திரு. வே.மதிமாறன்
| திரு. வாலாசா வல்லவன் | திரு. சூர்யா சேவியர்
| திரு. செந்தலை கவுதமன்
அன்புடன்: துரைமுருகன்
நீர்வளத்துறை அமைச்சர் / கழகப் பொதுச்செயலாளர்
வேலூர் மாவட்ட திமுக



உச்சநீதி மன்ற நீதிபதி தலைமையில்
உள்ள மத்திய அரசு ஊழியர்களின்
ANOMALY மற்றும் ARBITRATION COMMITTEE
செயலாளராகவும்

14-இலட்சம் இரயில்வே தொழிலாளர்களை
உறுப்பினர்களாக கொண்டதும், மறைந்த
திரு.ஜெயப்பிரகாஷ் நாராயணன்
தலைவராக இருந்த
**அகில இந்திய இரயில்வே ஊழியர்கள் பெடரேஷன்** (A.I.R.F.)
தலைவராகவும்,

1952-ல் மாண்புமிகு பாரதபிரதமர்
ஜவஹர்லால் நேரு அவர்களால்
துவங்கப்பட்ட 47- இலட்சம் மத்திய அரசு
ஊழியர்கள் உறுப்பினராக உள்ள
**மத்திய அரசு தொழிலாளர்கள் கூட்டு ஆலோசனைகுழு** (J.C.M.)
இணை செயலாளராகவும்,

80-இலட்சம் அமைப்பு மற்றும் அமைப்பு
சாரா தொழிலாளர்கள் உறுப்பினராக உள்ள
**இந்து மஸ்தூர் சபா தொழிற்சங்கத்தின்** (H.M.S.)
தேசிய செயலாளராகவும்
வீற்றிருக்கும்

# டாக்டர். N.கண்ணையா Ph.D.,

*அவர்களை*

## தொடர்ந்து 25-வது ஆண்டாக சதர்ன் இரயில்வே மஸ்தூர் யூனியனின் பொதுச்செயலாளராக

*தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு வாழ்த்தி வணங்கும்!*



இரயில்வே தொழிலாளர்களுக்கு மத்திய அரசு, 6-வது ஊதிய தொகை தரமறுத்த போது, அன்றைய மாண்புமிகு முதலமைச்சர்.மு.கருணாநிதி மற்றும் இன்றைய முதலமைச்சர் மாண்புமிகு.மு.க.ஸ்டாலின் அவர்களின் உதவியோடு, பிரதமர் மற்றும் அமைச்சர்களை S.R.M.U.பொதுச்செயலாளர் N.கண்ணையா, தலைவர் C.A.ராஜாஸ்ரீதர் ஆகியோர் சந்தித்து கொடுத்த அழுத்தத்தால், 6-வது ஊதிய தொகை பெறப்பட்டு, தொடர்ந்து இரயில்வே தொழிலாளர்களின் உரிமைகளை பெற்று தரும் வகையில், நாடாளுமன்றத்தில் குரல் கொடுக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு **மு.க.ஸ்டாலின்** அவர்களுக்கு

நன்றி! நன்றி! நன்றி!



## ச.பரமசிவம் M.A.,B.L.,

அண்ணாநகர் வடக்கு பகுதி தி.மு.கழக செயலாளர்
பொதுச் செயலாளர் - இரயில்வே கூட்டுறவு வங்கி தொழிலாளர் தொழிற்சங்கம்.



நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று முன்தினம் (23.11.2023) திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெள்ளரை, புண்டரிகாட்ச பெருமாள் திருக்கோயில் வடக்கு இராஜகோபுரம் கூடுதல் 5 நிலை கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டினர். உடன் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் மா.பிரதீப் குமார், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.




வேட்டவலம் இலயோலா கல்லூரி பட்டமளிப்பு விழாவில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கலந்து கொண்டு மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்கி பட்டங்களை வழங்கினார். துணை சபாநாயகர் கு. பிச்சாண்டி , மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ., மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், ஒன்றியச் செயலாளர் ஜி.இரவிச்சந்திரன், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் இராஜிவ்காந்தி, ஊராட்சி மன்றத் தலைவர் லூயிஸ் உள்ளிட்ட பேராசிரியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# அடுக்குமாடிக் குடியிருப்புகள் பதிவு செய்வதில் புதிய நடைமுறை!

## வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் தகவல்!

சென்னை, நவ.25 -

தற்போது தமிழ்நாட்டில் அடுக்குமாடி குடியிருப்பு கள் குறித்த ஆவணங்கள் பதிவுக்கு வருகையில் இரண்டு ஆவணங்களாக பதிவு செய்யும் நடைமுறைபின்பற்றப்படுகிறது. அதாவது அடிநிலம் பொருத்து பிரிபடாத பாகத்திற்கு கிரையமாக ஓர் ஆவணமாகவும் கட்டடப் பகுதியைப் பொருத்து கட்டுமான உடன்படிக்கையாக ஓர் ஆவணமாகவும் இரண்டு ஆவணங்களாக பதிவு செய்யப்படுகின்றன.

அடுக்குமாடி குடியிருப்புகள் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படும்போது அடிநிலம் மற்றும் கட்டடம் சேர்ந்த பகுதிக்கு என ஒரே விலையே நிர்ணயம் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. கட்டடங்களை விற்பனை ஆவணமாகப் பதிவு செய்யாமல் கட்டுமான உடன்படிக்கை ஆவணமாகப் பதிவு செய்யும் வழக்கமும் தமிழ்நாட்டில் பின்பற்றப்பட்டு வருகிறது. ஆனால் இந்த பரிவர்த் தனை இரண்டு வெவ்வேறு ஆவணங்களாகப் பதிவு செய்யப்படுகின்றன. விற்பனை ஆவணத்திற்கு 7% முத்திரைத் தீர்வை மற்றும் 2% பதிவுக் கட்டணமும் கட்டுமான உடன்படிக்கை ஆவணங்களைப் பொருத்து 1% முத்திரைத் தீர்வை மற்றும் 3% பதிவுக்கட்டணமும் வசூலிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டைத் தவிர பிற அனைத்து மாநிலங்களிலும் அடுக்குமாடி குடியிருப்புகளைப் பொருத்து கட்டடம் மற்றும் அடிநிலம் சேர்ந்த ஒரு கூட்டு மதிப்பு நிர்ணயிக்கப்பட்டு இம்மதிப்பானது மொத்த கட்டட பரப்பைப் பொருத்து கணக்கிடப்பட்டு அதனடிப்படையில் விற்பனை ஆவணமாகவே பதிவு செய்யப்படுகிறது. மற்ற மாநிலங் களில் நிலவும் இம்முறையை தமிழ்நாட்டிலும் பின்பற்றலாம் என முடிவு செய்யப்பட்டதன் அடிப்படையில் இது குறித்து தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த ரியல் எஸ்டேட் அமைப்புகளின் பிரதி நிதிகளுடன் கலந்தாலோசிக்கப்பட்டது. மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் 27.07.2023, 07.09.2023 மற்றும் 12.09.2023 ஆகிய தேதிகளில் இப்பிரதிநிதிகளுடன் கலந்தாய்வு கூட்டங்கள் நடத்தப்பட்டன. இதில் பங்கேற்ற ரியல் எஸ்டேட் அமைப்புகளின் பிரதிநிதிகள் கூட்டு மதிப்பு அடிப்படையில் அடுக்கு மாடி குடியிருப்புகளை விற்பனை ஆவணமாகப் பதிவு செய்ய தங்களின் இசைவினைத் தெரிவித்தனர். ஆனால் இவ்வகை ஆவணத்திற்கான முத்திரைத் தீர்வை குறைக்கப்பட வேண்டும்என்று கோரிக்கை வைத்தனர்.

இந்நேர்வு தொடர்பாக பதிவுத்துறை தலைவரால் அனுப்பப்பட்ட முன்மொழிவு அரசால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. அடுக்குமாடி குடியிருப்புகளைப் பதியும்போது இனி பிரிபடாத பாக நிலத்திற்கு ஒரு தனி ஆவணம் கட்டடத்திற்கு ஒரு தனி ஆவணம் என இரு ஆவணங்களாகப் பதியப்படும் நிலையை மாற்றி கட்டடம் மற்றும் அடிநிலம் சேர்ந்த கூட்டு மதிப்பின் அடிப்படையில் ஒரே விற்பனை ஆவணமாகப் பதிவு செய்யும் நடைமுறையை அமல்படுத்தவும் குறிப்பிட்ட மதிப்பு வரையிலான புதிய குடியிருப்புகள் பதிவிற்கான முத்திரைத் தீர்வையைக் குறைக்கவும் அரசு முடிவு செய்துள்ளது. மதிப்பு ரூ.50 இலட்சம் வரையுள்ள அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான முத்திரைத்தீர்வையை தற்போது உள்ள 7% லிருந்து 4% ஆக குறைக்கலாம் என்றும் ரூ.50 இலட்சம் முதல் ரூ.3 கோடி வரையிலான அடுக்குமாடி குடியிருப்புகளுக் கான முத்திரைத் தீர்வையை 7% லிருந்து 5% ஆக குறைக்கலாம் என்றும் அரசால் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனால் ரூ.50 இலட்சம் வரையிலான மதிப்புடைய புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை வாங்குவோர் விற்பனைக் கிரைய ஆவணம் பதியும்போது முத்திரைத் தீர்வை 4% மற்றும் பதிவுக் கட்டணம் 2% ஆக மொத்தம் 6% செலுத்தினால் போதுமானது. ரூ.50 இலட்சம் முதல் ரூ.3 கோடி வரையிலான மதிப்புடைய அடுக்குமாடி குடியிருப்பு களை வாங்குவோர் முத்திரைத் தீர்வை 5% மற்றும் பதிவுக் கட்டணம் 2% ஆக மொத்தம் 7% செலுத்தினால் போதுமானது.

இந்த சலுகையானது பிரிபடாத பாக மனையுடன் பதியப்படும் அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு மட்டுமே வழங்கப்படும். மேலும் அடுக்குமாடி குடியிருப்பு களின் முதல் விற்பனைக்கு மட்டுமே இது பொருந்தும். மறு விற்பனைக்கு பொருந்தாது.

இனிமேல் அடுக்குமாடி குடியிருப்புகளை வாங்குவோர் கட்டுமான ஒப்பந்த ஆவணமாக இல்லாமல் விற்பனை கிரைய ஆவணமாகப் பதிந்து தங்கள் குடியிருப்பை உடைமையாக்கிக் கொள்ளலாம். அடுக்குமாடி குடியிருப்புகளை அடிநிலம் சேர்ந்த கூட்டு மதிப்பின் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட முத்திரைத் தீர்வை சலுகையுடன் பதியும் இப்புதிய நடைமுறை எதிர்வரும் 01.12.2023 முதல் அமலுக்கு வருகிறது. ஏற்கெனவே கட்டுமான ஒப்பந்த ஆவணமாகப் பதியப்பட்டிருக்கும் குடியிருப்புகளை மறு விற்பனை செய்வது தற்போது பதிவுத்துறையால் அனுமதிக்கப்பட்டு வரும் நிலையில், இந்த அனுமதியானது, 01.12.2023க்குப் பின்னர் பதியப்படும் கட்டுமான ஒப்பந்த ஆவணங்களைப் பொருத்து விலக்கிக் கொள்ளப்படும்.

கூட்டு மதிப்பின் அடிப்படையில் அடுக்குமாடி குடியிருப்பு விற்பனை ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை சலுகை வழங்கும் அரசின் இந்த நடவடிக்கையால் வங்கியில் கடன் பெற்று புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை வாங்கும் நடுத்தர மக்கள் மிகவும் பயன் பெறுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.





அரியலூர் மாவட்டத்தில் உள்ள அரியலூர் ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதிக்கு இருசக்கர வாகனப் பேரணி, வருகை புரிந்ததையொட்டி இரு சக்கர வாகனங்களில் வந்த இளைஞர்களை மாவட்ட எல்லையான மேலணிகுழி கிராமத்தில் அமைச்சர் சா.சி. சிவசங்கர் வரவேற்பு அளித்து, வருகை தந்த இளைஞரணி பிரச்சார தோழர்களுடன் இருசக்கர வாகனத்தில் பயணித்தார். மீன்சுருட்டியில், கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், கழக கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தெய்வ இளையராஜா, மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர,பேரூர் கிளை கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்துகொண்டனர்.

For circulation among members only

பதிவு அலுவலகம் இடமாற்றம் - புனரமைக்கப்பட்ட கட்டிடத்தின்

துவக்க விழா




கட்டிட திறப்பாளர்

திருமிகு. S.கல்யாணசுந்தரம் MP அவர்கள்

தலைவர், கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட்.,

முன்னிலை

திருமிகு. S.இராமலிங்கம் MP — துணைத்தலைவர்
திருமிகு. G.அன்பழகன் MLA — இயக்குநர்
திரு. PR.P.வேலப்பன் — மேலாண் இயக்குநர்

இயக்குநர்கள்

திரு. B.பிரகாசம் திரு. G.துரைராஜ் திருமதி. E.அம்பிகா திரு. M.குரு பிரசாந்த்

தற்போது 119 கிளைகளுடன் செயல்பட்டுவரும் இந்நிறுவனம் - புதிய கிளைகளை

| | | | | |
|---|---|---|---|---|
| 120. பூதலூர் | 126.பேராவூரணி | 132. லால்குடி | 138.வடுவூர் | 145. செம்பனார்கோவில் |
| 121. செங்கிப்பட்டி | 127. சாலியமங்கலம் | 133. திட்டக்குடி | 139. வல்லம் | 146. அய்யம்பேட்டை |
| 122. கில்லுக்கோட்டை | 128. குடவாசல் | 134. முசிறி | 140. கீரனூர் | 147. மேட்டுப்பாளையம் |
| 123. ஆலங்குடி | 129. பந்தநல்லூர் | 135. தா.பழூர் | 141. வைத்தீஸ்வரன்கோவில் | 148. சிங்காநல்லூர் |
| 124.கறம்பக்குடி | 130. கொல்லுமாங்குடி | 136. முத்துப்பேட்டை | 142. சேத்தியாதோப்பு | 149.பெண்ணாடம், |
| 125. சிவகங்கை | 131. காட்டுமன்னார்கோவில் | 137.உள்ளிக்கோட்டை | 143.ஒட்டன்சத்திரம் | 150. ஓசூர் |
| | | | 144. உளுந்தூர்பேட்டை | |

ஆகிய ஊர்களில் திறக்கப்பட உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

- நிதி நிறுவனத்தின் வரலாற்றில் இல்லாத அளவில் தமிழகமெங்கும் 119 கிளைகளுடன் (காரைக்கால் கிளை உள்பட).
- நாளது தேதியில் டெபாஸிட் நிலுவை தொகை ரூ.3,564 கோடியாகவும், கடன் நிலுவை ரூ.3,436 கோடியாகவும் உள்ளது.
- 11,65,000 பங்குதாரர்களைக் கொண்ட மிகப்பெரும் நிதி நிறுவனமாகும்.
- தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு இணையாக மக்களுக்கு துரித சேவை செய்வது; குறைந்த வட்டியில் நகைக்கடன் வழங்குதல்; மக்கள் நன்மதிப்புடன் வைப்பு நிதி பெறுதல்; வாடகை கட்டணமின்றி பாதுகாப்பு பெட்டக வசதி போன்றவை நமது நிறுவனத்தின் சிறப்பம்சங்களாகும்.
- நிதியின் இயக்குநரவையின் ஆலோசனையின்படி தற்போதைய வணிக சூழ்நிலைக்கேற்ப, வாடிக்கையாளர்களுக்கு அளிக்கப்படும் துரித சேவையை கருத்திற்கொண்டு நிதியின் வரவு செலவு நடவடிக்கைகளுக்கான புதிய மென்பொருள் உருவாக்கம் நடைபெற்று வருகிறது.

R.சுபாஷ்
பொது மேலாளர் & தலைமை நிதி அதிகாரி

இந்தியாவில் NDH - 4 அங்கீகாரம் பெற்றது நமது நிதி நிறுவனமே

கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட்
KUMBAKONAM MUTUAL BENEFIT FUND NIDHI LIMITED
(பதிவு அலுவலகம் : 23 & 24, Dr.பெசன்ட் ரோடு. கும்பகோணம்-612 001)
CIN : U65991TN 1903 PLN 001246 Ph : 0435-2401548 Fax : 0435-2431682 Website : www.kmbf.co e-mail : kmbf@kmbf.co



நீலகிரி மாவட்டம், குன்னூர் வட்டம், மழையின் காரணமாக ஏற்பட்ட பாதிப்பால் முத்தாலம்மன் பேட்டை அங்கன்வாடி மையத்தில் தங்கியுள்ள பொதுமக்களை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் மற்றும் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா ஆகியோர் நேற்று முன்தினம் (23.11.2023) நேரில் சந்தித்து, அவர்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை வழங்கினார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.கீர்த்தி பிரியதர்சினி, குன்னூர் வருவாய் கோட்டாட்சியர் பூஷணகுமார் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.




மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகார் சட்ட மன்ற தொகுதி காவிரிபூம்பட்டினம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் பள்ளி கல்வித்துறை சார்பில் “கலைஞரின் பாதையில் ஒரு பயணம்” என்ற பெயரில் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட இலக்கிய பெருமை மிக்க சிறப்புகளை அறிந்து கொள்வதற்கான பள்ளி மாணவ, மாணவியர்கள் சுற்றுலா வாகனத்தை பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ்பொய்யாமொழி கொடியசைத்து தொடங்கி வைத்தார். உடன் சுற்றுச் சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர்கள் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.பி.மகாபாரதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முத்து.மகேந்திரன், ஜி.என்.ரவி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பஞ் பஞ்சுகுமார், ஏ.ஜி.ஜெ.பிரபாகர், மங்கை எம்.சங்கர், சீர்காழி நகரக் கழகச் செயலாளர் ம.சுப்பராயன், மாவட்ட ஊராட்சி தலைவர் உமமகேஸ்வரிசங்கர் ஒன்றியக்குழு தலைவர் கமலஜோதிதேவேந்திரன் மற்றும் பலர் உள்ளனர்.




விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மறைந்த முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறனின் 20 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு செஞ்சி பேருந்து நிலையம் எதிரில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப் படத்திற்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு தமிழர்கள் மத்திய அமைச்சர் செஞ்சி மஸ்தான் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் ஒன்றிய பெருந்தலைவர்கள் செஞ்சி விஜயகுமார், வல்லம் அமுதா ரவிக்குமார், பேரூராட்சி மன்றத் தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

### வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு!

# கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்!

## கழகத்தினருக்கு தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

கள்ளக்குறிச்சி, நவ.25-

வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழகத்தினர் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு விடுபட்ட மற்றும் புதிய வாக்காளர்களை சேர்த்திட வேண்டுமென கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழக செயலாளர், தா.உதயசூரியன் எம்.எல்.ஏ அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

01.01.2024 தேதியை தகுதியேற்படுத்தும் நாளாக கொண்டு வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் 27.10.2023 அன்று வெளியிட்டுள்ளது. 27.10.2023 முதல் 09.12.2023 வரை புதிய வாக்காளர்களை சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும், திருத்தம் செய்யவும் மனு செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

இது தவிர 25.11.2023 (சனிக்கிழமை), 26.11.2023 (ஞாயிற்றுக்கிழமை), ஆகிய இரண்டு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட மையங்களில் சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளன.

மாறிய இந்நாட்களில் விடுபட்ட வாக்காளர்களும், இடம் வாக்காளர்களும் 01.01.2024 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து அந்த படிவங்களை அந்தந்த முகாம்களில் கொடுக்க வேண்டும்.

17வயது நிரம்பிய வர்களும், உரிய ஆவணங்களோடு விண்ணப்பிக்கலாம். அவர்கள் 18வயது நிரம்பும்போது வாக்காளர் பட்டியலில் இடம்பெற இந்திய தேர்தல் ஆணையம் ஏற்பாடு செய்திருக்கிறது.

இதன் அடிப்படையில் 2024 ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும் புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும். தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள மேற்கண்ட அட்டவணையின் படி சிறப்பு முகாம்கள் நடைபெறவிருக்கும் நாட்களில், நமது கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டத்தில் உள்ள சங்கராபுரம், உளுந்தூர்பேட்டை தொகுதிகளுக்குட்பட்ட வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2) உடன் ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் தங்களை முழுமையாக இப்பணியில் ஈடுபடுத்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

### முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் 20ஆம் ஆண்டு நினைவு தினம்!

# புதுக்கோட்டையில் முரசொலி மாறன் படத்திற்கு அஞ்சலி!

## அமைச்சர் எஸ்.ரகுபதி -கே.கே.செல்லப்பாண்டியன் மாலை அணிவித்து மரியாதை!

புதுக்கோட்டை, நவ.25-

புதுக்கோட்டை தி.மு.க. அலுவலகத்தில் முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் 20வது நினைவு தினத்தை முன்னிட்டு புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் படத்திற்க்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். இந்நிகழ்வுகளில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா, மாவட்ட அவைத் தலைவர் அரு.வீரமணி, மாநில வர்த்தகர் அணி துணைச் செயலாளர் செ.அசோக் பாண்டியன், மாவட்ட துணைச் செயலாளர் பி.ராஜேஸ்வரி, மாவட்ட பொருளாளர் எம்.லியாகத் அலி,

புதுக்கோட்டை நகர கழக செயலாளர் ஆ.செந்தில், தலைமைச் செயற்குழு உறுப்பி னர்கள் சுப.சரவணன், கீரை,தமிழ்ராஜா, பொதுக்குழு உறுப்பினர்கள் என்.சாத்தையா, சி.ஆர்.வி.சித்ரா, புதுக்கோட்டை தெற்கு ஒன்றியச் செயலாளர் மு.க.ராமகிருஷ்ணன், எம்.எம்.பாலு, அ.ரெத்தினம், ராம.செல்வராஜ், வே.ராஜேஸ்,செந்தாமரை பாலு, பொன்.பாரிவள்ளல், அரங்கநாயகம், மு.கலைஞர் கருணாநிதி, வடவாளம் க.செ.மணிமாறன், வெற்றிச்செல்வன், செ.ரமேஷ், பால்ராஜ், முரளி, ரமேஷ், செந்தமிழ் அரசு உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



வடகோவை கிராஸ்கட் சாலையில் உள்ள,கோவை மாவட்ட தி.மு.கழக அலுவலகத்தில், முன்னாள் ஒன்றிய அமைச்சர் நினைவில் வாழும் முரசொலி மாறன் அவர்களின் 20 வது நினைவஞ்சலி நிகழ்வில், கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா. கார்த்திக் கலந்து கொண்டு, முரசொலி மாறன் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தினார். இந்நிகழ்வில், கழக தீர்மானக்குழு இணைச் செயலாளர் பி.நாச்சிமுத்து, மாநகர் மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ்,கல்பனா செந்தில்,மாநகர் மாவட்ட பொருளாளர் எஸ். எம். பி. முருகன்,பொதுக்குழு உறுப்பினர் சரஸ்வதி புஷ்பராஜ்,ராமநாதபுரம் பகுதி செயலாளர் ப.பசுபதி, மல்லிகை ராம்குமார், மாநகர் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் அக்ரிபாலு,டெம்போ சிவா, அர்ச்சுனன்,இலா. தேவசீலன்,சஞ்சய் குமார்,துரை கதிரவன், வட்டக்கழகச் செயலாளர் எஸ்.போஸ், த.பாலச்சந்திரன்,சாரமேடு இஸ்மாயில், மகளிரணி வசந்தி, வசந்தகுமார், ஆர்.எஸ்.புரம் பூபாலன், பூங்குயில் பாபு, வழக்கறிஞர் சீனிவாசன், குட்டி (எ)கார்த்திக், பிரின்ஸ், பொன்.கோவிந்தராஜ், மு.சந்திரசேகரன், ஸ்ரீதர், ஜோதிலட்சுமி, விஜயலட்சுமி,கழக நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மனசாட்சியாக விளங்கிய முரசொலி மாறன் அவர்களின் 20வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயம், முரசொலி மாறன் வளாகத்தில் அவரின் திருவுருவப்படத்திற்கு மாவட்டக் கழக செயலாளர் திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினருமான க.செல்வராஜ் தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதில் தெற்கு மாநகர செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன். வடக்கு மாநகர செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், மாவட்ட அவைத்தலைவர் அ.நடராஜன், துணைச் செயலாளர்கள் டிஜிட்டல் எஸ்.சேகர், வழக்கறிஞர் சி.கே.நந்தினி, மாநகர அவைத்தலைவர் க.ஈஸ்வரமூர்த்தி, பகுதி செயலாளர்கள் மேங்கோ அ.பழனிசாமி, மு.க.உசேன், போலார் இரா.சம்பத்குமார், மாமன்ற உறுப்பினர்கள் வெ.ராதாகிருஷ்ணன். எல்.பி.எப். மாவட்ட தலைவர் பி.எஸ். பாண்டியன், நெசவாளர் அணி அமைப்பாளர் ரவிச்சந்திரன், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ம.சூர்யா, தெற்கு மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் ம.அசோக்குமார், பழ.வீரப்பன், கருணாகரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# திருவாரூரில் ‘மக்களுடன் முதல்வர்’ திட்டத்தில் மனுக்கள் பெறப்பட்டன!

## பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. பார்வையிட்டார்!

திருவாரூர்,நவ.25-

திருவாரூர் நகராட்சிக் குட்பட்ட பகுதியிலுள்ள தனியார் திருமண மண்டபத்தில் மக்களுடன் முதல்வர் திட்டத்தின் கீழ் மனுக்கள் பெறப்படுவதை சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன் பார்வையிட்டார். மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஸ்ரீ,காவல் கண்காணிப்பாளர் எஸ்.ஜெயகுமார் ஆகியோர் உடனிருந்தனர்;.

திருவாரூர் நகராட்சிக் குட்பட்ட 15, 24, 25, 26, 29 ஆகிய வார்டுகளுக்குட்பட்ட பொதுமக்கள் தங்கள் கோரிக்கைகளை சம்பந்தப்பட்ட துறையினரிடம் தெரிவித்திடும் வகையில் அனைத்துத் துறையினரும் ஒரே இடத்தில் முகாமிட்டு கோரிக்கைகளை பெற்று அதற்கான தீர்வினை வழங்கிட ஏதுவாக இந்த முகாம் நடைபெற்றது. பொதுமக்கள் அளிக்கும் கோரிக்கைகளை உடனடியாக கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டது. ஏதேனும் சான்றிதழ் தேவைப்பட்டால் முகாம் நடைபெறும் இடத்தில் அமைக்கப்பட்டுள்ள இ-சேவை மையத்தில் பெற்றுக்கொள்ளும் வசதியும் செய்யப்பட்டது. பொதுமக்கள் தங்களது கோரிக்கைகளை மனுக்களாக காலை 9.00 மணி முதல் மதியம் 2.00 வரை முகாம் நடைபெறும் இடத்தில் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கினர்.

இம்முகாமில்நகர்மன்ற தலைவர் புவனப்பரியா செந்தில், துணைத்தலைவர் அகிலா சந்திரசேகர், நகர் மன்ற உறுப்பினர்கள் பிரகாஷ், டி.செந்தில், ரஜினி சின்னா, அய்யனார், அன்வர், பாரதி, மூர்த்தி, மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் இரா.சங்கர், வட்டாட்சியர்நக்கீரன் உள்ளிட்ட அனைத்துறை அரசு உயர் அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### 17 ஆயிரம் பூசாரிகளுக்கு மாத ஊக்கத் தொகை: முதல்வர் - அமைச்சருக்கு நன்றி!

# கோவை மாவட்ட பூசாரிகள் மாநாடு!

## பி.வாசு தலைமை! பி.என். லோகநாதன் வாழ்த்துரை!

கோவை, நவ. 25-

17ஆயிரம்திருக்கோவில் பூசாரிகளுக்கு மாத ஊக்கத்தொகை ரூ.1000/- வழங்கிய தமிழக முதல்வர் அவர்களுக்கும், இந்து அறநிலையத்துறை அமைச்சருக்கும் நன்றி தெரிவிக்கும் விழா மற்றும் கோவை மாவட்ட பூசாரிகள் மாநாடு 03.12.2023 ஞாயிற்றுக்கிழமை பேரூர் காமாட்சி கல்யாண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு மாநிலத் தலைவர் பி.வாசு தலைமை வகிக்கிறார்.

பூசாரிகள் நலச்சங்க ஆலோசகர் கவியரசர் ஆர். என்.லோகநாதன் வாழ்த்துரையாற்றுகிறார்.

காலை 7 மணியளவில் அருணாசலம், முத்துக்குமார், மாரிமுத்து, நாகராஜ், ரங்கன், அய்யாசாமி ஆகியோர் முன்னிலையில் கணபதி ஹோமத்தை வேள்வித் திலகம், சித்தாந்த ரத்ன இராஜேந்திரசிவம் நடத்துகிறார்.

காலை 10.00 மணியளவில் மாநாட்டை சிவா (எ) சிவாசல சுந்தர சிவாச்சாரியார் துவக்கி வைக்கிறார்.

மாநாட்டிற்கு டி.கணேசன், ஞானமாருதி, டி.புருஷோத்தமன், எஸ்.சங்கர், தங்கநாயகி கே.சுந்தரம், என்.ஜெகநாதன், அல்லிமுத்து, பதிமலை எஸ்.செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாநாட்டில் எஸ்.நரேஸ்குமார் வரவேற்கிறார்.



தருமபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிபட்டி வந்தடைந்த விழிப்புணர்வு வாகன பேரணி இளைஞர்களுக்கு மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர்.முனைவர் பி.பழனியப்பன் தலைமையில் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் பி.எஸ்.சரவணன் ஏற்பாட்டில் ட்ராவல் பேக் அளித்து வரவேற்பளித்தனர்.உடன் மாநில வர்த்தகர் அணி துணை செயலாளர் அ.சத்தியமூர்த்தி,ஒன்றிய கழக செயலாளர் முத்துக்குமார், ஒன்றியக்குழு தலைவர் உண்ணாமலைகுணசேகரன்,மாவட்டவர்த்தகர் அணி அமைப்பாளர் தாமோதரன் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.




திருப்பூர் வடக்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு கலந்தாய்வு கூட்டம் மாவட்டச் செயலாளர் க. செல்வராஜ் எம்.எல்.ஏ. ஒப்புதல் உடன் திருப்பூர் மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் மாநில இணைச்செயலாளர் தெப்பம்பட்டி ஆறுச்சாமி கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார். கூட்டத்தில் மாவட்ட அமைப்பாளர் அவினாசி பழனிச்சாமி, மாவட்ட தலைவர் திருப்பூர் தெற்கு பூபதி, துணைத் தலைவர் திருப்பூர் சுப்பிரமணியம், துணை அமைப்பாளர்கள் திருப்பூர் தெற்கு சாமுவேல், அவினாசி ருக்குமணி, திருப்பூர் ரகுபதி, பொங்கலூர் செல்வக்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## செயல்பாடுகள் எதேச்சாதிகாரமாக இருக்கிறது!

# ஆளுநராக இருக்கத் தகுதியே இல்லாதவர் ரவி!

## ‘தி நியூஸ் மினிட்’ தமிழ் இணையதளத்தில் ‘இந்து’ என்.ராம் காட்டமான பேட்டி!

**சென்னை, நவ.25–**

**“ஆளுநராக இருக்க தகுதியே இல்லாதவர் தமிழ்நாடு ஆளுநர் ரவி” என்று ‘இந்து’ என்.ராம் அவர்கள் “தி நியூஸ் மினிட்” தமிழ் இணையதளத்திற்கு அளித்துள்ள பேட்டியில் கூறியுள்ளார்.**

‘தி நியூஸ் மினிட்’ தமிழ் இணைய தள தொலைக்காட்சியில் நெறியாளர் ஷபீர் அகமது நேர்காணலுக்கு மூத்த பத்திரிகையாளர் ‘இந்து’ என்.ராம் அளித்த பேட்டி வருமாறு:–

**நெறியாளர் ஷபீர் அகமது:** ஆளுநர் குறித்து உச்சநீதிமன்றம் மிகவும் கடுமையான கருத்துகளை தெரிவித்து இருக்கிறது. உச்சநீதிமன்றம் கருத்து தெரிவித்து பிறகு தான் ஆளுநர் அந்த 10 மசோதாக்களை திருப்பி அனுப்பியிருக்கிறார். அப்படியானால் உச்சநீதிமன்றத்தின் மீது ஆளுநருக்கு ஒருவித பயம் இருக்கிறது. மேலும் உச்சநீதிமன்றம் கடுமையாக சொல்லிவிடப்போகிறார்கள் என்கின்ற அச்சம் அவருக்கு இருக்கிறது என்பதினை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. உச்சநீதிமன்றத்தின் இந்தக் கருத்தை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்? இது எந்த அளவிற்கு ஆளுநருக்கு ஒரு பின்னடைவு என்று நீங்கள் நினைக்கிறீர்கள்.?

**மூத்த பத்திரிகையாளர் என்.ராம்:** உச்சநீதிமன்றம் இந்தக் கேள்விகளை எழுப்புவதை நான் மிகவும் வரவேற்கிறேன். இவைகள் முக்கியமான கேள்விகள். குறிப்பாக சட்டப்பிரிவு 200-இல் இருக்கக்கூடிய சரத்து என்ன? அதில் ஆளுநருக்கு என்ன பொறுப்பு இருக்கிறது என்பது தெரிகிறது. அதைப்பற்றி ஆளுநரை கேள்வி எழுப்பியிருக்கிறது உச்சநீதிமன்றம். இன்னும் இறுதியான தீர்ப்பு வரவில்லை என்றாலும் உச்சநீதிமன்றம் கேள்வி கேட்கின்ற முறைகளைப் பார்த்தால் ஆளுநரை விமர்சனம் செய்யலாம். நீங்கள் கூறியதுபோல் மூன்று வருடங்கள் என்ன செய்தார் ஆளுநர்? உச்சநீதின்றம் கேள்வி கேட்டவுடனே மசோதாக்களை திருப்பி அனுப்பிவிட்டார்.

இது ஒரு மணி பில் மாதிரிதான். மீண்டும் இந்த மசோதாக்களை பேரவையில் நிறைவேற்றி அனுப்பினால் அதில் கையெழுத்து போட ஆளுநரால் மறுக்க முடியாது என்ற பாணியில் தான் உச்சநீதிமன்றத்தின் கருத்துகள் – கேள்விகள் இருக்கின்றன. ஆளுநர் அதற்கு என்ன பதில் சொல்லப்போகிறார் என்று நமக்குத் தெரியவில்லை. இந்த மசோதாக்களின் உள்ளடக்கம் என்னவென்றால், பல்கலைக்கழக வேந்தர் என்ற முறையில் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று நினைக்கிறார். தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. இந்த மசோதாக்களில் ஆளுநரே பாதிக்கப்படுவதாக இருந்தால் அதில் எப்படி முடிவு எடுக்க முடியும். விதியில் இருக்கின்றது. இவர் மசோதாக்களை திருப்பி அனுப்பலாம் என்று. அதேபோல் அந்த மசோதாக்களை ஆளுநர் திருப்பி அனுப்பினால் மீண்டும் பேரவை அதே மசோதாக்களை நிறைவேற்றி அனுப்பினால் அதில் ஆளுநர் கையெழுத்து போட்டு அனுப்ப வேண்டும் என்றும் சட்டம் சொல்லுகிறது. அந்த மசோதாவுக்கு ஒப்புதல் கொடுத்தாக வேண்டும் வேறு ஆப்சன் எதுவும் அவருக்கு இல்லை.

### ஒரு மோசமான போலீஸ் ஆபீசரின் செயல்பாடு!

ஆளுநர் மசோதாக்களை தனது டேபிள் மீதே வைத்து இருக்கிறார் கடந்த மூன்று ஆண்டுகாலமாக. இந்த அரசின் மசோதா மட்டுமல்ல, ஜெயலலிதா அரசு காலத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களையும் இந்த ஆளுநர் கிடப்பில் போட்டு வைத்துள்ளார். அதனை படிக்காமல் தான் எடப்பாடி பழனிச்சாமி வெளிநடப்பு செய்துவிட்டுப் போய்விட்டார்.

அதனை இ.பி.எஸ். படித்து இருக்க வேண்டும். அவர்கள் காலத்து மசோதாக்களையே ஒப்புதல் தராமல் வைத்து இருப்பது அவர்களுக்கும் அவமானம் தானே. இந்த கவர்னரின் செயல்பாடுகளை வன்மையாக கண்டிக்க வேண்டும். நானும் அவருடைய செயலை கண்டிக்கிறேன். இவை மட்டுமல்ல; பா.ஜ.க.வின் பிரதிநிதியாக, போலீஸ் ஆபிஸரின் செயல்பாடு, சில நல்ல போலீஸ் ஆபிஸர்கள் இருக்கிறார்கள். ஆனால் இவர் செய்வது ஒரு மோசமான போலீஸ் ஆபிஸரின் செயல்பாடுகள் மாதிரி இருக்கின்றது.

அதாவது ஆளுநர் எந்த சட்டத்தையும் மதிக்காமல் , அதாவது அரசியல் அமைப்புச் சட்டத்தையும் மதிக்காமல் நான் சொல்வதுதான் சட்டம் என்கிற மாதிரியான நடவடிக்கை அது. ஆளுநரின் செயல்பாடு ஏதேச்சாதிகாரமானது. தி இந்து பத்திரிகையில் இதே தலைப்பிட்டு செய்தி வந்திருக்கிறது.

### பிரச்சினை செய்யவே இவரை அனுப்பியிருக்கிறார்கள்!

**நெறியாளர்:** ஆளுநரின் ஒவ்வொரு விஷயத்திலும் ஒரு மோதல் போக்கை கடைபிடிக்க வேண்டும் என்று எண்ணத்தோடுதான் அவர் செயல்படுவது போன்று தெரிகின்றதே. குறிப்பிட்ட காலத்தை எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூட தி.மு.க.வினர் கூறுகிறார்களே?



**இந்து என்.ராம்:** இந்த ஆளுநரை அதற்காகத்தான் அனுப்பி இருக்கிறார்கள். இவர் எதிர்மறையாக வேலை செய்ய ஆரம்பித்தார். தமிழ்நாட்டின் பெயரை மாற்றப் பார்த்தார். வெளியிலே போய் என்னென்னவோ பேசினார். அவருடைய சொந்தக் கருத்தை பேசி இருக்கிறார். திராவிடம் இல்லை என்று பல இடங்களில் பேசினார். திராவிட இயக்கம் பற்றி பேசி இருக்கிறார். பலரை அழைத்து வந்து, குரூப் வைத்து அவர்களுக்கு பார்ட்டி கொடுத்து பேசுகிறார்.

இவர் பேரவையில் அதிகமாகவே பேசினார். ஆளுநரின் நடவடிக்கைகள் முதலில் இருந்தே மோசம். அதனாலேயே இவரை தேர்ந்தெடுத்தே இங்கே அனுப்பி இருக்கிறார்கள். நாகாலாந்தில் இதே மாதிரியே நடந்து இருக்கிறார். அங்கே மக்கள் மத்தியில் மக்களின் வெறுப்புக்குள்ளாகிருக்கிறார். நாகாலாந்தில் இவரை யாருக்குமே பிடிக்கவில்லை. அதனால் தான் இவரை இங்கே அனுப்பி இருக்கிறார்கள்.

இங்கே பிரச்சினை செய்ய வேண்டும் என்பதற்காக அனுப்பி இருக்கிறார்கள். அதனைவிட இவர் ஓவராக செய்கிறாரோ என்கிற சந்தேகம் எனக்கு இருக்கிறது.

**நெறியாளர்:** நீங்கள் என்ன சொல்றீங்க? ஒரு அரசாங்கத்திற்கு ஒரு குடைச்சல் கொடுக்கவேண்டும். பிரச்சினையைக் கொடுக்க வேண்டும் என்றால் அதனையும் இந்த ஆளுநர் சரியாகச் செய்யவில்லை என்று சொல்கிறீர்களா?

**இந்து என் ராம்:** இந்த ஆளுநருக்கு ஆளுநராக இருக்கத் தகுதியே இல்லை என்பதை பட்டவர்த்தனமாகச் சொல்கிறேன். இவருக்கு ஆளுநராக இருக்க கொஞ்சம் கூட தகுதியே இல்லை. இன்னும் பார்க்க வேண்டுமானால் இந்தியா 1949-க்குப் பிறகு இருந்த ஆளுநர்களில் மோசமான ஆளுநர்கள் இருந்திருக்கிறார்கள். அதில் மோசமான ஆளுநர் இவர்.

அதாவது மாநில அரசுகளை கலைப்பதற்கு துணையாக சில ஆளுநர்கள் இருந்திருக்கிறார்கள். நல்ல ஆளுநர்களும் இருந்திருக்கிறார்கள். ஆட்சியைக் கலைக்க முடியாது என்றும் சொல்லி இருக்கிறார்கள். ஆட்சியை கலைக்க முடியாது என்று சொல்லி பர்னாலா தனது ஆளுநர் பதவியையே ராஜினாமா செய்துவிட்டுப் போய்விட்டார். இதே மாதிரி நல்ல ஆளுநர்களும் இருந்திருக்கிறார்கள்.

அதாவது கடந்த 73, 74 ஆண்டு காலங்களில் மிகவும் மோசமான ஆளுநர்கள் என்று ஒரு பட்டியல் எடுத்தால் அந்த டாப் மூன்று இடங்களில் இந்த ஆளுநர் கட்டாயம் இருப்பார். டாப் ஒன்று கூட இருக்கலாம். அதனை நன்கு ஆராய்ந்தால் இவர் முதலில் கூட இருக்கலாம்.

### பா.ஜ.க.வின் பிரதிநிதியாக செயல்படுகிறார்!

**நெறியாளர்:** மோசமான ஆளுநர்களில் ஆர்.என்.ரவி முதலிடம் பிடிப்பார் என்று சொல்கிறீர்களா?

**இந்து என்.ராம்:** முதல் இடம் பிடிக்க சான்ஸ் இருக்கு. அதனை நாம் ஆராய்ச்சி செய்து பார்க்க வேண்டும். இதனைவிட மோசமான ஆளுநர்கள் இருந்திருக்கிறார்களா என்று பார்க்க வேண்டும். இருந்திருக்கலாம், அதனால் தான் மூன்றுக்குள் என்று சொல்கிறேன். ஷேப்பா. மூன்றில் நிச்சயம் இருப்பார். தி வொர்ஸ்ட்!

**நெறியாளர்:** அந்த அளவிற்கு இந்த ஆளுநர் மோசமானவர். அதாவது சட்டத்தை மீறிய நடவடிக்கையில் அவர் ஈடுபட வேண்டிய கட்டாயம் என்ன அவருக்கு? நீங்கள் மூத்த பத்திரிகையாளராக பல அரசியல் கட்சித் தலைவர்களைப் பார்த்து இருப்பீங்க. பல ஆளுநர்களைப் பார்த்து இருப்பீங்க. ஆனால், இந்த அளவிற்கு ஆளுநர் வரம்பை மீறி செயல்படுகிறார்; சட்டத்தை மீறி செயல்படுகிறார்; அவருக்கு இல்லாத அதிகாரங்களை எடுத்துக் கொண்டு, அமைச்சர்களை நீக்கக்கூடிய ஒரு நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார் என்று சொல்கிற போது அவருடைய எண்ணம் என்னவாக இருக்கும்?

**இந்து என். ராம்:** இது மிகவும் மோசமானதாக இருக்கும். ஒரு அமைச்சரை நீக்கம் செய்வது என்பது. செந்தில் பாலாஜி விவகாரத்தில் இவர் செய்தார். சில பேர் வெறித்தனமாக கொள்கையை கடைபிடிப்பாங்க. அதே மாதிரி இந்த ஆளுநர் தான் பிடித்தால் விடமாட்டேன் எனச் சொல்லி அவர்களுடைய (பா.ஜ.க. ஒன்றிய அரசின்) பிரதிநிதியாக செயல்படுகிறார். அது தான் ஆளுநரின் நோக்கம்.

டெல்லியில் எந்த அளவிற்கு ஆளுநர் கலந்து கொண்டு பேசுகிறார் என்பது நமக்குத் தெரியவில்லை. நமக்கு எதிராகத்தான் வேலை செய்கிறார், இதனால் மக்கள் மத்தியில் வெறுப்பு ஏற்படும், கோபம் ஏற்படும், மாநில அரசின் மீது சிம்பதி – கனிவு – பரிதாபம் ஏற்படும். அனுதாபம் ஏற்படும். சாதாரணமாக மக்கள் மத்தியில் இது தேவை என்ற கேள்வி எழுகிறதே.

ஆளுநர் இங்கே என்ன பேசினாலும் அது இங்கே செல்லாது. இங்கே இருக்கின்ற கலாச்சாரம், சரித்திரம் ஒன்றும் புரியாமல் தான் அவருடைய நடவடிக்கைகள் இருக்கின்றன.

### மக்களை துன்புறுத்த முடிவு எடுத்துவிட்டார்!

**நெறியாளர்:** ஆளுநர் பதவி என்பது ஒரு தனி மரியாதை, இந்தப் பதவி ஆங்கிலேயர் காலத்தில் இருந்து இருக்கக்கூடிய பதவி. அந்தப் பதவியே தேவையில்லை என்றால் கூட அதற்கு ஒரு மரியாதை கொடுக்க வேண்டும் என்ற கட்டாயம் என்பது இருக்கிறது. அது சட்ட ரீதியாக இருக்கக் கூடிய ஒரு பதவி. ஆனால் அந்தப் பதவியில் இருந்து கொண்டு அந்த சட்டத்துக்குட்பட்டு இவர் செயல்பட மாட்டேன் என்கிற போது ஒரு மாநில அரசாங்கம் என்ன செய்யும் முடியும்? அந்த மாநில மக்கள் என்ன பண்ண முடியும்? ஒரு வேளை இந்த மாநில மக்கள் பி.ஜே.பி.க்கு ஆதரவு கொடுக்கவில்லை என்பதினால் ஆளுநரை வைத்து ,இந்த மாநில மக்களை துன்புறுத்த வேண்டும் என்று அவர்கள் முடிவு எடுத்துவிட்டார்களா?

**இந்து என்.ராம்:** ரிவேன்ஞ்சா கூட இருக்கலாம். மக்கள் மீது ரிவேன்ஞ் எடுக்கின்ற மாதிரி நீங்கள் ஏன் எங்களை ஆதரிக்கவில்லை. உங்களுக்கு ஒன்றும் கொடுக்க மாட்டோம். நீங்கள் தேர்ந்தெடுத்த மக்கள் பிரதிநிதிகளுக்கு ஒன்றும் கொடுக்க மாட்டோம். அதனை தடுப்போம். இது தான் ஆளுநரின் வேலை. இதனை ஓவராக இந்த ஆளுநர் பயன்படுத்தி செய்கிறாரா என்பது தான் என்னுடைய கேள்வி, என்னுடைய சந்தேகம். அங்கே இருப்பவர்கள் எல்லோரும் அப்படி இல்லையே, சில அதிகாரிகள் நல்லவர்களாக இருப்பார்கள், சில நல்ல அமைச்சர்கள் கூட பி.ஜே.பி.யில் இருப்பார்கள். அவர்களுக்கே இவர் ஏன் இந்த மாதிரி செய்கிறார்? இதனால் நமக்கு என்ன பயன்? அந்தக் கேள்விக்கு அவர்கள் பதில் சொல்ல வேண்டும் இல்லையா?

இதனால் பி.ஜே.பி.க்கு என்ன நன்மை வரும்? பேக் பையர் தானே எதிர்வினை தானே ஆகும். திருப்பித் தானே தாக்கும். எவ்வளவு நாட்களுக்கு இவரை இங்கே வைத்து இருப்பார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. இந்த ஆளுநர் தேவையா வேண்டாமா என்று மக்கள் மத்தியில் ஒரு வாக்குப்பதிவு நடத்தினால் இவர் தேவை இல்லை என்று தான் அனைவரும் வாக்களிப்பார்கள். இவரை திருப்பி அனுப்பி விடுவார்கள்.

**நெறியாளர்:** உங்கள் அனுபவத்தில் ஆளுநருடைய செயல்பாடுகள் அன்றாடம் விமர்சனத்துக்குள்ளாகக் கூடிய செயல்பாடுகளாகப் பார்த்திருக்கிறீர்களா? எப்போவாவது ஒருமோதல் போக்கு இருந்திருக்கும். ஒரு மாறுபட்ட கருத்து அப்படி என்று இருக்கும். ஆனால் இந்த அளவிற்கு கடுமையாக தினமும் தகராறு அப்படி என்பதனை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா

**இந்து என் ராம்:** இதே மாதிரி நான் பார்த்தது இல்லை. சில மோசமானவர்கள் கூட இங்கே இருந்திருக்கிறார்கள். அவர்கள் இதே போல இல்லை. இதே மாதிரி நான் பார்த்தது இல்லை. இவரை மாதிரி தெலுங்கானா, பஞ்சாப், அரியானாவில் இருக்கிறார்கள் ஆனால் இவ்வளவு இல்லை. இவர்களுக்கு அரசியல் ரீதியாக திட்டம் ஏதோ வந்திருக்கிறது.

### உச்சநீதிமன்றம் நியாயமான கேள்விகளை எழுப்பியிருக்கிறது!

**நெறியாளர்:** உச்சநீதிமன்றம் இதில் என்ன தீர்ப்பு சொல்கிறது என்று பார்ப்போம்.

**இந்து என். ராம்:** ஆமாம், ஆனால் இது வரைக்கும் உச்சநீதிமன்றம் கூறிய கருத்துகளை கேள்விகளை நாம் வரவேற்க வேண்டும்.

**நெறியாளர்:** உச்சநீதிமன்றம் இந்த வழக்கில் நியாயமான கேள்விகளை எழுப்பி இருக்கிறது என்று நினைக்கிறீர்களா?

**இந்து என்.ராம்:** ஆமாம்!

இவ்வாறு இந்து என்.ராம் பேட்டியளித்தார்.

---


## செய்தி - மக்கள் தொடர்புத்துறை

கலைஞர் 100 1924 - 2023

தமிழ்நாடு அரசு வழங்கும் கீழ்காணும் விருதுகளுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | திரைப்பட விருதுகள் | 2019 முதல் 2022 வரை |
| 2. | அரசு மானியம் | 2018 முதல் 2022 வரை |
| 3. | சின்னத்திரை விருதுகள் | 2015 முதல் 2022 வரை |

மேற்குறிப்பிட்டுள்ள ஆண்டுகளுக்கான விருதுகளுக்கு விண்ணப்பிக்கும் முறை, தேர்வு செய்யும் சிறந்த தமிழ்த்திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள், சின்னத்திரை நெடுந்தொடர்களுக்கு வழங்கப்படும் பரிசுகள் விவரம் அடங்கிய தமிழ்நாடு அரசின் விதிகள் கையேடு கூடிய விண்ணப்பப் படிவங்களை **www.dipr.tn.gov.in** என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும், விண்ணப்ப படிவங்களை ரூ.10/- செலுத்தி உறுப்பினர் / செயலாளர், திரைப்படத்துறையினர் நலவாரியம் (முதல் தளம், மாநில செய்தி நிலையம், கலைவாணர் அரங்க வளாகம், வாலாஜா சாலை, சென்னை-600 002) அவர்களிடமிருந்து 24-11-2023 முதல் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் ரூ.100/-ஐ பதிவு கட்டணமாக நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கியில் இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை (The Director, Information and Public Relations Department) என்ற பெயரில் எடுக்கப்பட்ட கேட்பு வரைவோலையை (Demand Draft) இணைத்து மேற்கண்ட முகவரிக்கு 08-01-2024 அன்று மாலை 5.00 மணிக்குள் வந்து சேருமாறு அனுப்ப வேண்டும்.

**இயக்குநர்,**
செய்தி - மக்கள் தொடர்புத்துறை,
சென்னை- 600 009.

**செ.ம.தொ.இ/1333/வரைகலை/2023**

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in


---

## தமிழ்நாடு முன்னாள் ஆளுநர் பாத்திமா பீவி மறைவு!

கொல்லம், நவ. 25 -

தமிழ்நாடு முன்னாள் ஆளுநர் பாத்திமா பீவி மறைவெய்தினார். அவருக்கு வயது 96.



தமிழ்நாடு முன்னாள் ஆளுநர் பாத்திமா பீவி உடல்நலக் குறைவால் நேற்று முன்தினம் மறைவெய்தினார். கேரள மாநிலம் கொல்லத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் நேற்று முன்தினம் மறைவெய்தினார்.

உச்சநீதிமன்றத்தின் முதல் பெண் நீதிபதி என்ற பெருமையும் இவருக்கு உண்டு.

கேரள மாநிலம் பத்தனம்திட்டாவில் கடந்த 1927 ஏப்., 30ல் பிறந்தார். திருவனந்த புரம் அரசு சட்டக் கல்லூரியில் இளங்கலை சட்டப்படிப்பை முடித்தார். பின்னர் 1950ல் வழக்கறிஞராக பணியை துவக்கினார். தொடர்ந்து 1958ல் கேரள கீழ்நிலை நீதித்துறை பணியில் சேர்ந்த இவர் 1968ல் துணை நீதிபதியாக பதவி உயர்வு பெற்றார்.

1972ல் முதன்மை நீதித்துறை மாஜிஸ்திரேட்டாகவும், 1974ல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதியாகவும் பதவி வகித்தார். 1983ல் கேரள உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார். 1989ல் உச்சநீதிமன்ற நீதிபதியாகவும் பதவி வகித்தார். தமிழ்நாட்டின் 11வது ஆளுநராக கடந்த 1997 முதல் 2001 வரை பதவி வகித்தார். நாடு முழுவதும், நீதித் துறையில் பெண்களின் முன்னேற்ற த்துக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் பாத்திமா பீவி. தேசிய மனித உரிமைகள் ஆணைய உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நெருப்புமேடு து. முத்து
### நவம்பர் 25 (2015)



**இளம் வயதிலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.**

**சைதை பகுதியில் வட்ட அவைத்தலைவர், துணைச் செயலாளராக தொடர்ந்து பொறுப்பில் இருந்து, அப்பகுதியில் கழகம் வளர்த்தவர்.**

**இந்தி எதிர்ப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம், குடிநீர் போராட்டம், சட்டநகல் எரிப்பு போராட்டம் என பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு 58 நாட்கள் தலைவர் கலைஞர் அவர்களுடன் சென்னை மத்திய சிறையில் இருந்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---



சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறனின் 20 ம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் அன்னாரின் திருவுருவப் படத்திற்கு மாவட்ட கழக செயலாளர் இரா.இராஜேந்திரன் மலர்அஞ்சலி செலுத்தினார். உடன் மாவட்ட நிர்வாகிகள் ஜி.கே.சுபரசு, மு.கார்த்திகேயன், ஜி. குமரவேல், மஞ்சுரை, தலைமைச் செயற்குழு கே.டி.மணி, பெதுக் குழு உறுப்பினர்கள ஏ.பூபதி, எஸ்.குபேந்திரன், மாநகர நிர்வாகிகள் பா.ரகுபதி, கே.ஆர்.முருகன், ஜே.தினகரன், கே.சுமதி, மேயர் ஆ ராமச்சந்திரன். பகுதி செயலாளர்கள். ஏ.எஸ்.சரவணன், சி.பன்னீர்செல்வம், தமிழரசன், ஜெயக்குமார், சி.பிரகாஷ், கேபிள் ராஜா, கே.டி.ஆர்.தனசேகரன், ஒன்றிய செயலாளர்கள் ரெயின்போ நடராஜன், கே.சி. அறிவழகன், ஓ.எம்.ரமேஷ் உட்பட நிர்வாகிகள் இருந்தனர்.

---

## வாணியம்பாடியில் முரசொலி மாறன் நினைவு நாள் நிகழ்ச்சி!

*திருப்பத்தூர், நவ. 25-*

*திருப்பத்தூர் மாவட்ட கழகம் சார்பில் வாணியம் பாடியில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு அவரின் திருவுருவப் படத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.*

*அருகில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் மு.அசோகன், ஜோலார்பேட்டை நகர செயலாளர் ம.அன்பழகன், மத்திய ஒன்றிய செயலாளர் க.உமாகன்ரங்கம், நாட்றம்பள்ளி கிழக்கு ஒன்றிய செயலாளர் டி.சாமுண்டி, ஜோலார்பேட்டை கிழக்கு ஒன்றிய செயலாளர் கவிதாதண்டபாணி, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தே.பிரபாகரன், நாட்றம்பள்ளி ஒன்றிய குழுத் தலைவர் வெண்மதி சிங்காரவேலன், மாவட்ட விவசாயி அணி அமைப்பாளர் பூ.சதாசிவம், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எஸ்.ராஜா, மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் மு.க.அருள்நிதி, ஜோலார்பேட்டைநகர மன்ற துணைத்தலைவர் இந்திரா பெரியார்தாசன், நாட்றம்பள்ளி ஒன்றிய குழுத் து. தலைவர் டி.தேவராஜி, ஆலங்காயம் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் வி.எஸ்.கார்த்திக் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.*



நீலகிரி மாவட்டம், குன்னூர் வட்டம், மழையின் காரணமாக மௌண்ட்பிளசன்ட் பகுதியில் ஏற்பட்ட மண்சரிவினை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் மற்றும் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா ஆகியோர் நேற்று முன்தினம் (23.11.2023) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.கீர்த்தி பிரியதர்சினி, குன்னூர் வருவாய் கோட்டாட்சியர் பூஷணகுமார் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## நாமக்கல் மாவட்டத்தில் 70ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா!

# நலத்திட்ட உதவிகள்! வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் வழங்கினார்!

### கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. - ஆட்சியர் மருத்துவர் ச.உமா - எம்.எல்.ஏ.க்கள் பெ.இராமலிங்கம், கு.பொன்னுசாமி பங்கேற்பு!

நாமக்கல், நவ. 25-

நாமக்கல் மாவட்டம், நல்லிபாளையம், 70ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா - 2023 ராயல் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார். நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.இராமலிங்கம் (நாமக்கல்), கு.பொன்னுசாமி (சேந்தமங்கலம்), நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு 3470 பயனாளிகளுக்கு ரூ.31.30 கோடி மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகள், மாவட்ட அளவிலான 50 சிறந்த கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற பள்ளி மாணவ, மாணவியர்களை பாராட்டி பரிசுகள், பாராட்டு சான்றிதழ்கள் மற்றும் கேடயங்களை வழங்கினார்.

முன்னதாக கூட்டுறவு வார விழா - 2023 முன்னிட்டு, நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கூட்டுறவு சங்க கொடியினை ஏற்றி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் பேசும் போது, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, நாமக்கல் மாவட்டத்தில் 14.11.2023 முதல் 20.11.2023 வரை கூட்டுறவுத்துறையின் சார்பில் 70 ஆவது அனைத்திந்தியக் கூட்டுறவு வார விழா2023 சிறப்பாக நடைபெற்று கொண்டு இருக்கிறது. கூட்டுறவு வார விழாவில் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் மற்றும் நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளில் கூட்டுறவு அமைப்புகளின் பங்கு என்ற கருத்தில் அனைத்து பகுதிகளிலும் ஒவ்வொரு நாளும் பல்வேறு போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அந்த வகையில் கூட்டுறவு வார நிறைவு விழா மிக சிறப்பாக நடைபெற்று கொண்டிருக்கிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கடந்த இரண்டரை ஆண்டு கால நல்லாட்சியில் கூட்டுறவுத்துறையின் சார்பில் நாமக்கல் மாவட்டத்தில் பயிர்க்கடன் தள்ளுபடி திட்டத்தின்கீழ் 57,419 விவசாயிகளுக்கு ரூ.569.98 கோடி பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. பொது நகைக்கடன் தள்ளுபடி திட்டத்தில் 47,220 பயனாளிகள் பயன் பெறும் வகையில் 56,759 பொது நகைக்கடன்கள் ரூ.224.57 கோடி அளவிற்கு தமிழ்நாடு அரசால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

மேலும் நாமக்கல் மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக்குழு கடன் தள்ளுபடி திட்டத்தில் 39,463 பயனாளிகள் பயன் பெறும் வகையில் 3,738 சுயஉதவிக் குழு கடன்கள் ரூ.86.52 கோடி அளவிற்கு தமிழக அரசால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. விவசாயிகளின் நலன்கருதி நாமக்கல் மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையின் மூலம் 1,10,945 விவசாயிகளுக்கு ரூ.1097.97 கோடி வட்டியில்லா பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. விவசாய பெருமக்களின் மேம்பாட்டிற்காக நாமக்கல் மாவட்டத்தில் கூட்டுறவு துறையின் மூலம் 14,441 விவசாயிகளுக்கு ரூ.98.48 கோடி வட்டியில்லா கால் நடை பராமரிப்பு கடன் வழங்கப்பட்டுள்ளது. விவசாயம் சார்ந்த பணிகளுக்கு 2648 பயனாளிகளுக்கு ரூ.28.39 கோடி மத்திய காலக்கடன் வழங்கப்பட்டுள்ளது. வேளாண் விளை பொருள்களுக்கு 522 விவசாயிகளுக்கு ரூ.20.36 கோடி தானிய ஈட்டுக் கடன் வழங்கப்பட்டுள்ளது. பொது மக்கள் பயன்பெறும் வகையில் 2,65,960 பயனாளிகளுக்கு ரூ.1862.24 கோடி நகைக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

மகளிர் மேம்பாட்டிற்காக சுய உதவிக்குழுக்களின் மூலம் 4333 பயனாளிகளுக்கு ரூ.89.13 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகளின் மேம்பாட்டிற்காக 713 பயனாளிகளுக்கு ரூ.3.72 கோடி மாற்றுத்திறனாளி கடன் வழங்கப்பட்டுள்ளது. சிறு வணிகர்களின் தொழில் மேம்பாட்டிற்காக 3565 பயனாளிகளுக்கு ரூ.10.14 கோடி சிறுவணிக கடன் வழங்கப்பட்டுள்ளது. சிறுபான்மையினரின் பொருளாதார மேம்பாட்டிற்காக டாம்கோ திட்டத்தின் கீழ் 348 பயனாளிகளுக்கு ரூ.2.21 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. பிற்படுத்தப்பட்டோரின் பொருளாதார மேம்பாட்டிற்காக டாப்செட்கோ (TABCEDCO) திட்டத்தின் கீழ் 1650 பயனாளிகளுக்கு ரூ.14.08 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் மூலம் ரூ.534.30 கோடி மதிப்பிலான பருத்தி, மஞ்சள், நிலக்கடலை மற்றும் வாழைத்தார் உள்ளிட்ட வேளாண் விளைபொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. கூட்டுறவு துறையின் மூலம் விவசாயி கள் பயன் பெறும் வகையில் ரூ.99.269 கோடி மதிப்பிலான உரம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. ஏழை மக்கள் பயன் பெறும் வகையில் கூட்டுறவுத் துறையின் கீழ் செயல்படும் 13 மருந்தகங்களின் மூலம் ரூ.7.90 கோடி மதிப்பிலான மருந்துகள் குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

விவசாயிகள் பயன் பெறும் வகையில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் செயல்பட்டு வரும் 42 வேளாண் சேவை மையங்களின் மூலம் ரூ.10.57 இலட்சம் நிகர வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. பொதுமக்கள் பயன் பெறும் வகையில் கூட்டுறவு நிறுவனங்களில் செயல்பட்டு வரும் 140 பொது சேவை மையங்களின் மூலம் 5,86,211 பயனாளிகள் பயன் பெற்றுள்ளனர். இதன் மூலம் ரூ. 1.78 கோடி நிகர வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களை பல்நோக்கு சேவை மையங்களாக மாற்றும் திட்டத்தின் கீழ் 226 திட்டங்கள் ரூ.12.66 கோடி மதிப்பில் செயல்படுத்தப்பட்டுள்ளது. நாமக்கல் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கு NADP (RKVY) 2021-2022 திட்டத்தின் கீழ் ரூ.95.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய ஏலக்களம் மற்றும் அணுகு பாலம் அமைக்கப்பட்டுள்ளது. இராசிபுரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கு NADP (RKVY) 2021-2022 திட்டத்தின் கீழ் ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய ஏலக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது.

கிடங்கு அபிவிருத்தி மற்றும் ஒழுங்குமுறை அமைப்பு (WDRA)இல் பதிவு செய்யப்பட்ட கிடங்குகளில் மாற்றத்தக்க மின்னணு கிடங்கு செலவாணி பற்றுச்சீட்டு (eNWR) மூலம் விவசாயிகளுக்கு 7% குறைந்த வட்டியில் தானிய ஈட்டுக் கடன் வழங்கப்பட்டுள்ளது என வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் தெரிவித்தார்.

தொடர்ந்து, 2003 பயனாளிகளுக்கு ரூ.20.68 கோடி மதிப்பில் வட்டியில்லா பயிர்கடன், 176 பயனாளிகளுக்கு ரூ.1.43 கோடி மதிப்பில் வட்டியில்லா கால் நடை பராமரிப்பு நடைமுறை மூலதனக் கடன், 106 பயனாளிகளுக்கு ரூ.1.57 கோடி மதிப்பில் மத்தியக் காலக்கடன், 78 மகளிர் சுய உதவிக்குழுவை சேர்ந்த 1015 மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு ரூ.6.36 கோடி மதிப்பில் மகளிர் சுய உதவிக்குழுக் கடன், 31 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.15.00 இலட்சம் மதிப்பில் மாற்றுத்திறனாளிகளுக்கான கடனுதவி, 104 பயனாளிகளுக்கு ரூ.1.02 கோடி மதிப்பில் டாப்செட்கோ கடன், 35 பயனாளிகளுக்கு ரூ.9.00 இலட்சம் மதிப்பில் சிறுவணிக கடன் என மொத்தம் 3470 பயனாளிகளுக்கு ரூ.31.30 கோடி மதிப்பிட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் வழங்கினார். மேலும், மாவட்ட அளவில் சிறப்பாக பணியாற்றியப் 40 கூட்டுறவு நிறுவனங்கள், சிறப்பாக பணியாற்றிப் 2 பணியாளர்கள், சிறந்த விற்பனையாளர்களாக 8 பணியாளர்கள், கட்டுரை போட்டி, பேச்சுப் போட்டி, வினாடி வினா மற்றும் ஓவிய போட்டிகளில் வெற்றி பெற்ற 12 பள்ளி மாணவ, மாணவியர்கள், 6 கூட்டுறவு பணியாளர்கள் மற்றும் கலைநிகழ்ச்சிகள் நடத்திய 4 பள்ளிகளுக்கு பரிசுகள் மற்றும் கேடயங்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் நகர் மன்ற தலைவர்கள் து.கலாநிதி (நாமக்கல்), எம்.செல்வராஜ் (பள்ளிபாளையம்), கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் க.பா. அருளரசு, திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் இணைப்பதிவாளர் / செயலாட்சியர் முனைவர் ஏ.விஜயசக்தி, கால்நடை பராமரிப்பு துறை மண்டல இணை இயக்குநர் மரு.எம். நடராஜன், வேளாண்மை இணை இயக்குநர் சு.துரைசாமி, மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் வீ.சகுந்தலா, ஆவின் பொது மேலாளர் ஆர்.சண்முகம், கைத்தறித்துறை உதவி இயக்குநர் அ.பழனிக்குமார், துணைப்பதிவாளர்கள் ஆ.சி.ரவிச்சந்திரன், சி.செல்வகுமார் ஆர்.கர்ணன், செல்வி பா.பூர்விசா, அ.ராம்குமார், து.இரவிச்சந்திரன், சி.இந்திரா, கா.முகமது சலீம், நாகராஜன் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



தருமபுரி கிழக்கு மாவட்டம் வந்தடைந்த இளைஞரணியின் விழிப்புணர்வு பிரச்சாரப் பயணப் பேரணியினரை மாவட்டக் கழக செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தடங்கம் பெ.சுப்ரமணி வரவேற்று பேரணியில் பங்கு கொண்டார்.கிழக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர்.அசோக்குமார் பேரணியினருக்கு நினைவாக வெள்ளி காசுகள் வழங்கினார்.உடன் மாநில,மாவட்ட,ஒன்றிய,நகர செயலாளர்கள்,அணிகளின் அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள்,உள்ளிட்ட கழகத்தினர் கலந்துகொண்டு பேரணியினரை வரவேற்றனர்.

## திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தில்

# வாக்காளர் சேர்ப்பு முகாம் கண்காணிப்புக் குழு!

**மாவட்டக் கழகச் செயலாளர் - டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!**



கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல் படி திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட கும்மிடிப்பூண்டி மற்றும் பொன்னேரி சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழகங்கள் உள்ளடங்கிய வாக்குச்சாவடிகளில் இன்று (25.11.2023 - சனிக்கிழமை) நாளை 26.11.2023 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய தேதிகளின் இந்திய தேர்தல் ஆணையத்தால் வாக்காளர் சிறப்பு சேர்ப்பு முகாம் நடைபெற உள்ளது. இந்த சிறப்பு முகாமினை கண்காணிக்க கீழ்க்கண்ட நிர்வாகிகள் ஒன்றிய, நகர, பேரூர் வாரியாக கலந்து கொள்ள உள்ளனர்.

| ஒன்றிய/நகர/பேரூர் | கண்காணிப்பு குழு (பெயர்/பொறுப்பு) | ஒன்றிய/நகர/பேரூர் செயலாளர்கள் |
|---|---|---|
| பூண்டி கிழக்கு ஒன்றியம். | மு.பகலவன் மாவட்ட அவை தலைவர் செல் : 77080 - 21756 | டி.கே.சந்திரசேகர் ஒன்றியச் செயலாளர் பூண்டி கிழக்கு செல் : 94454 - 33637 |
| பூண்டி வடக்கு ஒன்றியம். | மு.கதிரவன் மாவட்ட துணைச்செயலாளர் செல் : 99945 - 96380 | பொன்னுசாமி (எ) ஜான் ஒன்றியச் செயலாளர் பூண்டி வடக்கு செல் : 97870 - 90883 |
| எல்லாபுரம் தெற்கு ஒன்றியம். | எஸ்.ரமேஷ் மாவட்டப்பொருளாளர் செல் : 99432 - 35027 | ஆ.சத்தியவேலு ஒன்றியச் செயலாளர் எல்லாபுரம் தெற்கு செல் : 97862 - 07475 |
| ஊத்துக்கோட்டை பேரூர். | பா.செ.குணசேகரன் பொதுக்குழு உறுப்பினர் செல் : 97911 - 73345 | கு.அபிராமி குமரவேல் பேரூர் செயலாளர் ஊத்துக்கோட்டை செல் : 94451 – 01755 |
| கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றியம். | A.V.ராமமூர்த்தி பொதுக்குழு உறுப்பினர் செல் : 94438 - 84466 | கி.வே.ஆனந்தகுமார் ஒன்றியச் செயலாளர் கும்மிடிப்பூண்டி தெற்கு செல் : 96779 - 02728 |
| கும்மிடிப்பூண்டி மேற்கு ஒன்றியம். | N.கிருஷ்ணமூர்த்தி அமைப்பாளர் மாவட்ட இலக்கிய அணி செல்:98846 - 36613 | மு.மணிபாலன் ஒன்றியச்செயலாளர் கும்மிடிப்பூண்டி மேற்கு செல் : 90030 – 80066 |
| மீஞ்சூர் கிழக்கு ஒன்றியம். | மு.பாஸ்கரன் மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் செல் : 87783 – 09826 | M.S.K ரமேஸ்ராஜ் ஒன்றியச் செயலாளர் மீஞ்சூர் கிழக்கு.செல் : 98406 - 57335 |
| மீஞ்சூர் தெற்கு ஒன்றியம். | கே. ஆறுமுகம் அமைப்பாளர் மாவட்ட மீனவர் அணி செல் :98942 81198 | கா.சு.ஜெகதீசன் ஒன்றியச்செயலாளர் மீஞ்சூர் தெற்கு. செல் : 63804 - 09500 |
| எல்லாபுரம் வடக்கு ஒன்றியம். | எஸ்.கோபி அமைப்பாளர் மாவட்ட வழக்கறிஞர்அணி செல் :98413 23454 | ஜெ.மூர்த்தி ஒன்றியச்செயலாளர் எல்லாபுரம் வடக்கு செல் : 98848 – 10836 |
| சோழவரம் வடக்கு ஒன்றியம். | மு.தினகரன் அமைப்பாளர் மாவட்ட தொழிலாளர் அணி செல் : 99401 11577 | நா.செல்வசேகரன் ஒன்றியச்செயலாளர் சோழவரம் வடக்கு. செல் : 9884991981 |
| மீஞ்சூர் வடக்கு ஒன்றியம். | ஜி.ரமேஷ் அமைப்பாளர் மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி செல் :9500440433 | பா.சுகுமாறன் ஒன்றியச் செயலாளர் மீஞ்சூர் வடக்கு. செல் : 93619 - 16165 |
| கும்மிடிப்பூண்டி பேரூர். | பழவை முகமது அலவி அமைப்பாளர் மாவட்ட சிறுபான்மை நல உரிமை பிரிவு அணி செல் :90922 23390 | இரா.அறிவழகன் பேரூர் செயலாளர் கும்மிடிப்பூண்டி. செல் : 99656 - 51919 |
| பொன்னேரி நகரம். | எம்.ஆர்.ஸ்ரீதர் அமைப்பாளர் மாவட்ட அயலக அணி செல் : 70106 66264 | ஜி.இரவிக்குமார் நகர செயலாளர் பொன்னேரி செல் : 98404 - 47426 |
| மீஞ்சூர் பேரூர். | எஸ்.மூர்த்தி துணை அமைப்பாளர் மாவட்ட வழக்கறிஞர் அணி 9865517828 | க.சு.தமிழ்உதயன் பேரூர் செயலாளர் மீஞ்சூர் செல் : 9884 - 443848 |
| ஆரணி பேரூர். | மோ. பிரசாத் தலைவர் மாவட்ட பொறியாளர் அணி செல் : 96772 70354 | பி.முத்து பேரூர் செயலாளர் ஆரணி செல் : 99942 – 92266 |
| கும்மிடிப்பூண்டி கிழக்கு ஒன்றியம். | டி.மணி அமைப்பாளர் மாவட்ட விவசாய தொழிலாளர் அணி செல் : 98427 84219 | ந.பரிமளம் ஒன்றியச் செயலாளர் கும்மிடிப்பூண்டி கிழக்கு செல் : 88258 – 32641 |

நானும், முன்னாள் அமைச்சர் க.சுந்தரம், தலைமைச் செயற்குழு உறுப்பினரும் முன்னாள் மாவட்டக் கழகச் செயலாளருமான இ.ஏ.பி.சிவாஜி மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை இணைச் செயலாளர் சி.எச்.சேகர்,தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜெ.மூர்த்தி, மாவட்ட துணைச் செயலாளர் K.V.G.உமாமகேஸ்வரி, எம்.எல்.ரவி, பொதுக்குழு உறுப்பினர்கள் கே.சுப்பிரமணி, பி.வெங்கடாசலபதி, டாக்டர்.பரிமளம் விஸ்வநாதன் ஆகியோர் வாக்காளர் சேர்ப்பு சிறப்பு முகாம் கண்காணிப்பு பணியில் கலந்து கொள்கின்றனர்.நமது கழக பாக முகவர்கள் (BLA-2) தாங்கள் ஆய்வுகள் செய்யும் வாக்குச்சாவடியில் உள்ளாரா என்று கண்காணித்து.அவரிடமிருந்து வாக்குச்சாவடியில் வாக்காளர் சிறப்பு முகாமில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் (படிவம் 6,6A,6B,7&8) போன்ற மனுக்களின் விவரங்களை தேர்தல் அதிகாரிகளிடமிருந்து பெற்று, மாவட்டக் கழகத்திடம் தாங்கள் கண்காணிப்பு பணியில் ஈடுபட்ட புகைப்படங்களுடன் ஒப்படைக்க வேண்டுமாய் தங்களை கேட்டுக்கொள்கிறேன்.

**டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ.**
செயலாளர் - திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

## உங்கள் ஆட்சியில்

# இந்து சமய அறநிலையத் துறை மிகச் சிறப்பாக செயல்படுகிறது!

## நடைப் பயிற்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் ஓய்வு பெற்ற வங்கி உயரதிகாரி கருத்து! பெருமிதம்!



சென்னை, நவ. 25 - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் காலையில் அடையாறில் நடைபயிற்சி சென்று கொண்டு இருந்தபோது அப்பகுதியைச் சேர்ந்த பெரியவர் - கனரா வங்கியின் ஓய்வு பெற்ற உதவி பொதுமேலாளர் - ஏ. வெங்கட்ராமன் அவர்கள் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களை வழியில் சந்தித்தார்.

அப்போது அவர் முதல்வர் அவர்களிடம், “சார், ஒரு நிமிடம்! என்னுடைய கருத்தைக் கூறலாமா?” என்று வினவினார்.

உடனே முதல்வர் அவர்களும் “சொல்லுங்கள்” என்றார்.

உடனே அடையாறு காந்திநகர் மெயின் ரோடு எண் 7-ல் வசிக்கும் கனரா வங்கியின் ஓய்வுபெற்ற உதவி பொதுமேலாளர் ஏ.வெங்கட்ராமன் அவர்கள் தனது கருத்தைக் கூறியதாவது:-

“ரொம்ப பிரமாதமா இருக்குசார் உங்கள் நிர்வாகம். சிலர் சொல்றாங்க, நீங்க டெம்பிளுக்கு ஒண்ணும் பண்றதில்லைன்னு. ஆனால் உங்க அட்வைஸ்ல சேகர்பாபு அழகா பண்ணி - அதுக்கு இன்கம் லாம் வரவைக்கிறார். இந்து சமய அறநிலையத்துறை மிகச்சிறப்பாக செயல்படுகின்றது. இதனை நான் மட்டும் சொல்லவில்லை. எல்லோரும் சொல்கிறார்கள்.

உங்களுடைய ஆட்சியில் அமைச்சராக இருக்கும் சேகர்பாபு கோயிலுக்கு வருமானத்தை அதிகரித்து இருக்கிறார். கோயிலுக்குச் சொந்தமான நிலங்களை யாரோ ஆக்கிரமித்து வைத்து இருக்கிறார்கள். அதனை எல்லாம் மீட்டுக் கொடுத்து இருக்கிறார். இந்த மாதிரி எல்லாம் யாரும் இதுவரை செய்ததில்லை.

**முதல்வர் மு.க. ஸ்டாலின்:** ஆமாம், ஆமாம். இன்றைக்கு அமைச்சர் சேகர்பாபு ஒரு பேட்டியில் கூட இதற்கான பதிலை நன்றாக கூறி இருக்கிறார்.

**அடையாறு ஏ.வெங்கட்ராமன்:** கோவிலில் நிறைய நடக்கிறது. குறிப்பாக கும்பாபிஷேகம் அதிகமாக நடைபெறுகின்றது. முன்பெல்லாம் கும்பாபிஷேகமே கிடையாது 10 வருசமா. இப்போது ஆயிரம் கும்பாபி ஷேகங்கள் நடைபெற்று ஆயிரத்து ஓராவது கும்பாபிஷேகம் நடைபெற இருக்கின்றது. நமஸ்காரம்!

இவ்வாறு கனரா வங்கியின் ஓய்வு பெற்ற உதவி பொது மேலாளர் ஏ.வெங்கட்ராமன் உரையாடினார். அதுபோது அமைச்சர் மா.சுப்பிரமணியன் உடனிருந்தார்.

---

## வேலூரில் இன்று பகுத்தறிவு சீர்திருத்தச் செம்மல்

# கலைஞர் நூற்றாண்டு விழா!

### கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் தலைமை வகித்து சிறப்பு மலரை வெளியிடுகிறார்!

சென்னை, நவ. 25 - பகுத்தறிவு சீர்திருத்தச் செம்மல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா இன்று (25.11.2023 - சனிக்கிழமை) காலை 10.00 மணிக்கு வேலூர் மாநகர் - பேபி மகாலில் நடைபெறுகிறது. இதில் கலைஞர் நூற்றாண்டு விழாவின் அங்கமாக “பகுத்தறிவு சீர்திருத்தச் செம்மல் - கலைஞர்” என்ற சிறப்பு மலரினை நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் வெளியிட்டு விழாப் பேருரை யாற்றுகிறார்.

இந்நிகழ்ச்சியில் வேலூர் மாவட்ட ஆட்சியர் பெ.குமாரவேல் பாண்டியன் வரவேற்றிட, நீர்வளத் துறைச் செயலாளர் சந்தீப் சக்சேனா விழா நோக்கவுரை யாற்றுகிறார்.

கழகப் பொதுச் செயலாளர் - நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் சிறப்பு மலரை வெளியிட்டு தலைமையுரையாற்றுகிறார்.

வீட்டு வசதித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, உணவுத் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோர் முன்னிலை வகித்துப் பேசுகின்றனர். கைத்தறி - துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி சிறப்புரையாற்றுகிறார்.

து.மு.கதிர் ஆனந்த் எம்.பி., சி.என். அண்ணாதுரை எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் வி.அமலுவிஜயன், எம். ஜெகன்மூர்த்தி, ஜெ.எல்.ஈஸ்வரப்பன், ஏ.எம்.முனிரத்தினம், சு.இரவி, க.தேவராஜி, அ.நல்லதம்பி, அ.செ.வில்வநாதன், கோ.செந்தில்குமார், மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் மு.பாபு , துணை மேயர் மா.சுனில்குமார் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.

நீர்வளத்துறை முதன்மை தலைமை பொறியாளர் கு.அசோகன் நன்றி கூறுகிறார்.

**கலைஞர் நூற்றாண்டு விழா நினைவு புகைப்படக் கண்காட்சி!**

அன்று காலை 10 மணிக்கு வேலூர் டவுன் ஹாலில் புகைப்படக் கலைஞர் கோவை சுப்பு ஏற்பாட்டில் கலைஞர் நூற்றாண்டு விழா நினைவு புகைப்படக் கண்காட்சியினை கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் திறந்து வைக்கிறார்.

பிற்பகல் 3 மணிக்கு திருச்சி கலைக் காவேரி கலைக்குழுவினரின் கலை நிகழ்ச்சி பேபி மஹாலில் நடைபெறுகிறது.

மாலை 6 மணிக்கு பேபி ஹாலில் “முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நிலைத்த புகழுக்குப் பெரிதும் காரணம் ‘இலக்கியப் பணியா?’, ‘சமுதாயப் பணியா?’ எனும் பட்டிமன்றம் நடைபெறுகிறது. இப்பட்டிமன்றத்தை எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. துவக்கி வைத்து பேசுகிறார். ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., ப. கார்த்திகேயன் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

நகைச்சுவை நாவலர் புலவர் மா.இராமலிங்கம் பட்டிமன்றத்திற்கு நடுவராக பங்கேற்கிறார்.

இலக்கியப் பணியே என்ற தலைப்பில் முனைவர் இரா.நவஜோதி (குறிஞ்சிப்பாடி), பட்டுக்கோட்டை பி.பாஸ்கர், திருச்சி அன்னலெட்சுமி ஆகியோரும், சமுதாயப் பணியே என்ற தலைப்பில் சேலம் முனைவர் அபு, மணப்பாறை கவிஞர் லலிதா, திருத்தணி வேதநாயகி ஆகியோர் பேசுகின்றனர்.

பகுத்தறிவு சீர்திருத்தச் செம்மல் - கலைஞர் குழு உறுப்பினர்கள் நீதியரசர் கே.சந்துரு, எ.எஸ்.குமாரி, சுந்தர ஆவுடையப்பன், வே.மதிமாறன், வாலாசா வல்லவன், சூர்யா சேவியர், செந்தலை கவுதமன் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

இதில் மாவட்டச் செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், கழக முன்னணியினர், மாவட்ட,ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

---

# தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் முதலமைச்சர் கணினித் தமிழ் விருது!

## விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன!

சென்னை, நவ. 25- முதலமைச்சர் கணினித் தமிழ் விருதுக்கு விண்ணப்பி ப்பது குறித்து தமிழ் வளர்ச்சித்துறை அறிவிப்பு வருமாறு:-

பன்னூறு ஆண்டுகளாக வற்றாத படைப்புகளைக் கொண்டு, சீரிளமை யோடு இயங்கி வரும் தமிழுக்கும், தமிழ்மொழி, பண்பாட்டு வளர்ச்சிக்குத் தொண்டாற்றிடும் தமிழ்த்தாயின் திருத்தொ ண்டர்க ளுக்குத் தமிழால் விளங்கிடும் தமிழ்நாடு அரசு பல்வேறு விருதுகளையும் சிறப்பு களையும் அளித்து, அவர்தம் தொண்டுக்கும் தமிழுக்கும் பெருமை சேர்த்து வருகின்றது நீங்கள் அறிந்த ஒன்றே.

தகவல் தொழில் நுட்ப வளர்ச்சிக்கேற்ப, உலகமெலாம் கணினி வழித் தமிழ் மொழி பரவச் செய்யும் வகையில் கணினித் தமிழ் வளர்ச்சிக்காக சிறந்த தமிழ் மென்பொருள் உருவாக்குபவர்களை ஊக்குவிக்கும் வகையில் தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக முதலமைச்சர் கணினித் தமிழ் விருது என்ற பெயரில் விருது வழங்கப்பட்டு வருகிறது. விருது பெறுபவருக்கு விருதுத் தொகையாக ரூபாய் 2 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம் மற்றும் தகுதியுரை வழங்கப்படுகிறது.

இதுவரை மென்தமிழ் (தமிழ்ச் சொல்லாளர்) (2013), விருபா வளர்தமிழ் நிகண்டு (2014), விவசாயம் (2015), www.tamilpulavar.org (2016), பிரிபொறி (2017), தமிழ் உரைவழி பேச்சு உருவாக்கி (2018), ‘வாணி’ தமிழ்ப் பிழைத் திருத்தம் (2019), ‘செவ்வியல் இலக்கண - இலக்கியம்’ (2020), வட்டெழுத்து (2021), ‘தமிழ்ப்பேச்சு’ மேம்படுத்திய பதிப்பு (2022) உள்ளிட்ட மென்பொருள்களுக்கு முதலமைச்சர் கணினித் தமிழ் விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

அவ்வகையில் 2023ஆம் ஆண்டுக்குரிய முதலமைச்சர் கணினித் தமிழ் விருதுக்கு தனியார் மற்றும் நிறுவனத் திட மிருந்து, தமிழ் வளர்ச்சிக்கான மென்பொரு ள்கள் / செயலிகள் வரவேற்கப்படுகின்றன. விருதுக்கு அனுப்பப்படவுள்ள மென்பொருள்கள் 2020, 2021, 2022ஆம் ஆண்டுகளில் தயாரிக்கப் பட்டதாக இருத்தல் வேண்டும்.

இவ்விருதுக்குரிய விண்ணப்பம் மற்றும் விதிமுறைகளைத் தமிழ் வளர்ச்சித் துறையின் வலைதளத்திலோ (www. tamil valarchithurai. tn.gov.in) அல்லது http://awards.tn.gov.in என்ற இணைய தளத்தின் வழியாகவோ இலவசமாகப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

இதுதவிர, தமிழ் வளர்ச்சி இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், தமிழ்ச்சாலை, எழும்பூர், சென்னை 600 008 என்ற முகவரிக்கு அஞ்சல் வாயிலாகவோ 31.12. 2023 ஆம் நாளுக்குள் விண்ணப்ப ங்களை அனுப்பிட வேண்டுகின்றோம். தக்க ஆவணங்களோடு விண்ணப்பங்கள் அமைதல் விரும்பத்தக்கது. மேற்கண்ட இணையதளத்திலேயே போதுமான விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

கூடுதல் விவரமறிய விரும்புவோர் 044 28190412, 044 - 28190413 ஆகிய தொலைபேசி எண்களை அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளலாம். உரிய நாளுக்குள் (31.12.2023) பெறப்படும் விண்ணப்பங்களே ஏற்றுக் கொள்ளப்படும் என்பதை நினைவிற் கொள்ள கனிவுடன் வேண்டுகின்றோம்.

இவ்வாறு தமிழ் வளர்ச்சித் துறை அறிவித்துள்ளது.



மறைந்த முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறனின் 20 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு திருச்சி தில்லை நகரில் உள்ள கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு அலுவலகத்தில் முரசொலி மாறனின் திருவுருவப் படத்திற்கு கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு தலைமையில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் திமுகவினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வில் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, மாநகர செயலாளரும் மாநகராட்சி மேயருமான அன்பழகன், டோல்கேட் சுப்பிரமணி, மாவட்ட துணை செயலாளர்கள் விஜயா ஜெயராஜ் கருணாநிதி, பகுதி செயலாளர்கள், நாகராஜ் போட்டோ கமல், மோகன்தாஸ் கனகராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் துர்கா தேவி புஷ்பராஜ் கலைச்செல்வி ராமதாஸ் சோழன் சம்பத், சிங்காரம் செல்வராஜ் சுரேஷ், கருணாமூர்த்தி, ராதாகிருஷ்ணன் கருத்து கதிரேசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## மாவட்ட - மாநகர - மாநில அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்

### இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் 2–வது மாநில மாநாடு வரும் டிசம்பர் 17–ஆம் தேதி சேலம், பெத்தநாயக்கன்பாளையத்தில் நடைபெற உள்ளது. இந்த மாநில மாநாட்டுக்காக முன்னெடுக்க வேண்டிய பணிகள் குறித்து, மாவட்ட– மாநகர– மாநில அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் வரும் 26–11–2023 (ஞாயிற்றுக்கிழமை) மாலை 5 மணி அளவில், சென்னை, அன்பகத்தில் இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் முன்னிலையில் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்தக் கூட்டத்தில் இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அன்பகம்
சென்னை – 18.
நாள் : 23–11–2023.

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி



உலக மீனவர் தினத்தையொட்டி குமரி மாவட்டம் இணையம் புத்தன் துறையில் கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. மீனவர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் அமைச்சர் த.மனோ தங்கராஜ், கழக மீனவர் அணிச் செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின், ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ., கழக மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் மற்றும் பலர் உள்ளனர்.

---

## சேலத்தில் இளைஞர் அணி மாநாடு! காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில்

# பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் கிளைக்கழக இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



காஞ்சிபுரம், நவ. 25 - சேலத்தில் நடைபெறும் இளைஞர் அணி மாநில மாநாட்டை யொட்டி காஞ்சி வடக்கு மாவட்டத்தில் பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் வாரியாக வார்டு - கிளைக் கழக இளைஞர் அணி நிர்வாகிகள் - பூத் இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது என்று மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு : -

வருகிற டிசம்பர் 17 - ஆம் தேதி சேலத்தில் நடைபெற உள்ள இளைஞர் அணி மாநில மாநாட்டில் இளைஞர் அணியினர் பெருந்திரளாக கலந்துக் கொள்வது சம்மந்தமாகவும், வாக்குச் சாவடி வாரியாக வழங்கப்பட்டுள்ள குடும்ப விவர OMR படிவம் மற்றும் வீட்டு கணக்கெடுப்பு படிவங்களை பூர்த்தி செய்வது சம்மந்தமாகவும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் அடங்கிய பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் வாரியாக கிளைக் கழக - வார்டு கழக இளைஞர் அணி நிர்வாகிகள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA - 2), பூத் அளவில் போடப்பட்டுள்ள இளைஞர் அணி - தகவல் தொழில்நுட்ப அணி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் கலந்தாலோசனைக் கூட்டம் கீழ்க்கண்ட தேதிகளில், கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விவரப்படி நடைபெற உள்ளது.

1.12.2023 வெள்ளி காலை 9.00 மணி - திருப்போரூர் வடக்கு - தெற்கு ஒன்றியம், திருப்போரூர் பேரூர்,

பகல் 11.00 மணி திருக்கழுக்குன்றம் வடக்கு ஒன்றியம் - பேரூர் மற்றும் மாமல்லபுரம் நகரம், பிற்பகல் 3.00 மணி செங்கல்பட்டு நகரம், மாலை 5.00 மணி

காட்டாங்குளத்தூர் வடக்கு - தெற்கு ஒன்றியம் - 2.12.2023 சனிக்கிழமை காலை 9.00மணி திருப்பெரும்புதூர் வடக்கு - தெற்கு ஒன்றியம், திருப்பெரும்புதூர் பேரூர், பகல் 11.00மணி குன்றத்தூர் வடக்கு - தெற்கு ஒன்றியம், பிற்பகல் 3.00 மணி குன்றத்தூர் நகரம், மாலை 5.00 மணி மாங்காடு நகரம்

3.12.2023 ஞாயிறு காலை 9.00மணி பம்மல் வடக்கு - தெற்கு பகுதி - பகல் 11.00மணி - பல்லாவரம் வடக்கு - தெற்கு பகுதி, செம்பாக்கம் வடக்கு பகுதி, பிற்பகல் 3.00 மணி - ஆலந்தூர் வடக்கு - தெற்கு பகுதி - மாலை 5.00 மணி - கண்டோன்மெண்ட் நகரம்

4.12.2023 திங்கள் காலை 9.00மணி - நந்திவரம் - கூடுவாஞ்சேரி நகரம், பகல் 11.00மணி - மறைமலைநகர் நகரம், பிற்பகல் 3.00 மணி - செம்பாக்கம் தெற்கு பகுதி - தாம்பரம் கிழக்கு பகுதி - பெருங்களத்தூர் தெற்கு பகுதி மாலை 5.00 மணி - புனித தோமையர்மலை வடக்கு ஒன்றியம்

அந்தந்த பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் செயலாளர்கள் இக்கூட்டத்திற்கான அழைப்பிதழை முறையாக அச்சிட்டு இக்கூட்டங்களில் பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் கழக நிர்வாகிகள் - வார்டு - கிளைக் கழகச் செயலாளர்கள் - இளைஞர் அணி நிர்வாகிகள் - அந்தந்த வாக்குச்சாவடிகளில் அடங்கியுள்ள வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA - 2), வாக்குச்சாவடி இளைஞர் அணி மற்றும் தகவல் தொழில்நுட்ப அணி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் முறையாக அழைப்பிதழ் தந்து இக்கூட்டத்தில் அவர்கள் அனைவரையும் பங்கேற்கச் செய்ய உரிய ஏற்பாடுகளை செய்திடும் படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : - டிசம்பர் - 17 அன்று சேலத்தில் நடைபெற உள்ள மாநில மாநாட்டில் இளைஞர் அணியினர் பெருந்திரளாக பங்கேற்பது குறித்து

பூத் வாரியாக வழங்கப்பட்டுள்ள குடும்ப விவர OMR படிவம் மற்றும் வீட்டு கணக்கெடுப்பு படிவங்களை பூர்த்தி செய்வது குறித்து

இவ்வாறு மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவித்துள்ளார்.



இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டு மற்றும் சிறப்பு செயலாக்க திட்டத்துறை அமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி வருகின்ற 17.12.2023 அன்று சேலத்தில் நடைபெறும் தி.மு.க. இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டிற்கு அழைப்பு விடுத்து, கடலூர் கிழக்கு மாவட்டத்திற்கு வருகை தந்த, கலைஞர் மண்டல இருசக்கர வாகன பிரச்சாரப் பயணம் குழுவினை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சரும், மாவட்டக் கழகச் செயலாளருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வரவேற்று வாழ்த்துரை வழங்கினார். முன்னதாக கொள்ளிடம் வழியாக வந்த வாகன பிரச்சார குழுவிற்கு, வல்லம் படுகைபாலம் அருகில் மாவட்ட பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன் தலைமையில் உற்சாக வரவேற்பு அளித்து, தண்ணீர், குளிர்பானம், பிஸ்கெட் போன்றவற்றினை வழங்கினார். இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு கலைஞர் மண்டல இருசக்கர வாகன பிரச்சாரப் பயணக் குழுவிற்கு எழுச்சிமிகுந்த வரவேற்பு அளித்தனர்.

# உடன்பிறப்பே... 33

**தி.மு.க என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையைக் கட்டியெழுப்பி, இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த நீலநாராயணன் அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**

# நீலநாராயணன் : நெஞ்சினிக்க அழைக்கப்பட்ட 'நீலம்'

ஓவியம் : ரவி பேலட்



**1986**-ஆம் ஆண்டின் பிற்பகுதியில் **'இந்தி வாரம்'** கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும் எனச் சுற்றறிக்கை அனுப்பியது ஒன்றிய அரசு. ஒன்றிய அரசுப் பணியாளர்கள் அனைவரும் இந்தியில் கையெழுத்துப் போட வேண்டும் என்றும் அந்த ஆணை சொன்னது. இதற்கு எதிராகக் கிளர்ந்து எழுந்தது கழகம்.

**'இந்தி அரக்கி'** கொடும்பாவிகள் கொளுத்தப் பட்டன. பள்ளி, கல்லூரிகளில் போராட்டங்கள் தீவிரமடைந்தன. நவம்பர் மாதம் கோவையில் இந்தித் திணிப்பு எதிர்ப்பு மாநாடு நடத்தி, தமிழ்நாட்டின் இந்தித் திணிப்பு எதிர்ப்புக் கனலை மீண்டும் எழுப்பி இருந்தது கழகம். கழகத்தினரின் போராட்டங்களால் தமிழ்நாட்டின் சிறைச்சாலைகள் நிரம்பத் தொடங்கின. அப்படி சிறைசென்ற கழகச் சட்டமன்ற உறுப்பினர்கள் பத்து பேரின் பதவிகளும் பறிக்கப்பட்டன.

அப்போது, பேராசிரியர் உள்ளிட்டத் தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்த நிலையில், தானும் சிறைக்குச் செல்ல உள்ள நேரத்தில் கழகத்தின் அன்றாடப் பணிகள், அணி திரட்டும் பணிகளை ஒருங்கிணைப்பதற்கு ஒரு நிர்வாகப் பணிக் குழுவை நியமித்தார் கழகத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

அந்தப் பணிக் குழுவில் தலைவர், துணைத் தலைவருக்கு அடுத்து, அமைப்பாளராக கலைஞரால் அறிவிக்கப்பட்டவர் நீலநாராயணன். பத்து வாரம், எட்டு வாரம் என கலைஞர், பேராசிரியர் மற்றும் கழக முன்னோடிகள் அனைவருக்கும் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. அப்போதும் கழகப் பணிகளில் தொய்வில்லை. காரணம், கழக நிர்வாகப் பணிக்குழு கருமமே கண்ணாகக் கழகப் பணியில் ஈடுபட்டது. அப்படித் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட உடன்பிறப்பே நீலநாராயணன். எல்லோராலும் 'நீலம்' என அன்புடன் அழைக்கப்பட்ட நீலநாராயணன்.

## பாராட்டுக் கூட்டம்

பெரியாரின் பெருந் தொண்டர், அண்ணாவின் அன்புத் தம்பியாகச் செயல் பட்டவர் நீலநாராயணன். கழகம் தொடங்கப்பட்ட நாளில் இருந்தே இயக்கத்தின் வளர்ச்சிக் காக அரும்பாடுபட்டவர் நீலம். கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர். 1922-ஆம் ஆண்டு பிறந்தவர் என்கிற குறிப்பு உள்ளது.

சென்னை மாவட்டக் கழகச் செயலாளராக இரண்டு முறை பொறுப்பு வகித்தவர். கட்சியின் தொடக்கக் காலத்தில் சென்னை மாவட்டச் செயலாளர்களாக இருந்த என்.வி.நடராசன், கோவிந்தசாமி, கண்ணபிரான், மணிவண்ணன், கோ.செங்குட்டுவன், இளம்பரிதி ஆகியோர் வரிசையில் நீலநாராயணன் மாவட்டக் கழகச் செயலாளராக இருந்தார்.

கழகம் மிக வீச்சாக மக்கள் மத்தியில் செல்வாக்கு செலுத்த தொடங்கிய 1960 களில் சென்னை மாவட்டச் செயலாளராகப் பொறுப்பு வகித்தவர். பேரறிஞர் அண்ணா உள்ளிட்ட கழகத் தலைவர்களை அழைத்துப் பல பொதுக்கூட்டங்களை நடத்தி இருக்கிறார்.

சென்னை மாநகராட்சிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலின்போது, கழக வேட்பாளர் கே.கோவிந்தசாமியின் பிரச்சாரக் கூட்டத்துக்கு அண்ணாவை அழைக்கிறார் மாவட்டச் செயலாளர் நீலம். ஆனால், அண்ணாவோ **'பாராட்டுக் கூட்டத்துக்கு வருகிறேன் போங்கள்'** என்று கூறுகிறார். எதிர்பார்த்தபடியே கோவிந்தசாமி வெற்றி பெற, வாக்காளர் நன்றி அறிவிப்புக் கூட்டத்தில் கலந்து கொள்கிறார் அண்ணா.

1962-ஆம் ஆண்டு மே 24 தேதியிட்ட **'நம்நாடு'** இதழில் இதைப் பதிவு செய்துள்ளார் பேரறிஞர் அண்ணா. தேர்தலுக்கு முன்பே, வெற்றிக் கூட்டத்துக்குத் தேதி அளிக்கும் அளவுக்கு, நீலநாராயணனின் கட்சிப் பணிகள் மீது நம்பிக்கைக் கொண்டிருந்திருக்கிறார் அண்ணா.

## கட்சிப் பதவியே பெரிது

அறிவாலயத்துக்குக் கலைஞர் வந்தால், அவர் அங்கிருக்கும் நேரம் நீள்கிறதோ இல்லையோ, ஆனால், அவர் இருக்கும் நேரத்தில் 'நீலம்' இருக்கவேண்டும். "அலுவலகப் பணி எதுவாக இருந்தாலும், 'கூப்பிடு நீலத்தை' எனக் கூவி அழைத்துக் கொண்டிருந்தேன்" எனக் கலைஞர் குறிப்பிடுகிறார். அறிவாலயம் வரும் கழக நிர்வாகிகளும், அவருடன் உரையாடவில்லை எனில், அறிவாலயம் வந்ததுபோல இருக்காது என்பார்கள். அவர்களுக்கும் 'ப்ளூ இருக்காரா' என்பது மிக நெருக்கமான பிணைப்பு என இப்போதும் நினைவு கூர்வர்.

தமிழ்நாட்டின் மூலைமுடுக்குகளில் உள்ள கிளைக் கழகங்கள் முதல், தலைமைக் கழகம் வரையில் உள்ள விவரங்கள் அனைத்தையும் துல்லியமாக மனதில் வைத்திருப்பார்.

இரண்டு முறை சட்டமன்ற மேலவை உறுப்பினராக இருந்தவர் நீலம். கழகத்தின் கட்டுப்பாடு காப்பதில் அவரின் கண்ணியத்தை கலைஞர் எழுதுகிறார். "எனது பேச்சை எந்த அளவுக்கு மதிக்கக் கூடியவர் என்பதற்கு ஓர் உதாரணம் கூற வேண்டுமேயானால், கழகத்திலே ஒருவருக்கு ஒரு பதவிதான் இருக்க வேண்டுமென்று ஒருமுறை தெரிவித்தேன்.

சென்னை மாவட்டக் கழகச் செயலாளராகவும், சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் இருந்த நீலநாராயணன் தனது கட்சிப் பதவியை இழக்க விரும்பாமல் மேலவை உறுப்பினர் பதவியைத் தானாகவே முன்வந்து ராஜினாமா செய்தார்" என்கிறார்.

## விரல் நுனியில் கழக விவரம்

இரண்டு முறை மாவட்டச் செயலாளர் பொறுப்புக்குப் பின் கழகத்தின் அமைப்புச் செயலாளராக நியமிக்கப்பட்டார். கழக நிர்வாகிகளுடன் நெருக்கமாக இருந்தவர், தமிழ்நாட்டின் மூலைமுடுக்குகளில் உள்ள கிளைக் கழகங்கள் முதல், தலைமைக் கழகம் வரையில் உள்ள விவரங்கள் அனைத்தையும் துல்லியமாக மனதில் வைத்திருப்பார். நீண்ட காலம் அந்தப் பொறுப்பு வகித்தார்.

1987-ஆம் ஆண்டு, கழகத்தின் **'பெரியார் விருது'** நீலநாராயணனுக்கு அளிக்கப் பட்டது. அப்போது தலைமைக் கழகம் நீலம் அவர்கள் குறித்து ஒரு குறிப்பு வெளியிட்டது. அதில், "நாற்பதாயிரம் கிளைக் கழகங்கள் - அவைகள் இணைந்த ஒன்றிய நகர- மாவட்ட அமைப்புகள்; இவற்றுக்கான கட்சித் தேர்தலை முறைப்படியும், உரிய நேரத்திலும் நடத்துவதற்குத் தலைமைக் கழகத்தின் அலுவலகமும் அலுவலர்களும் இரவுபகலாக இயங்கினாலும், கழக உறுப்பினர்களின் கட்டுக்கோப்புக் குலையாமல்-அத்துணை அமைப்புகளின் தேர்தலையும் நடுநிலை பிறழாது விருப்பு வெறுப்பின்றித் தலைமைக் கழகச் செயலாளருக்குரிய பொறுப்புடன் அணுகி முகச்சுளிப்போ-முணுமுணுப்போ இன்றி எந்நேரமும் எறும்புபோல சுறுசுறுப்பு காட்டும் இவரது எளிய இயல்பினாலன்றோ வெற்றிகரமாக நிறைவேற்ற முடிகிறது" எனக் கூறப்பட்டிருந்தது. தலைமைக் கழகத்தின் அந்த நம்பிக்கை, கலைஞரின் நம்பிக்கை. நீலநாராயணன் குறித்து கலைஞர் கொண்டிருந்த நம்பிக்கையே கழக அறிக்கையாக வந்தது.

## 9-ஆம் எண் சிறைக் கொட்டடி

தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்பாக இருந்து, தந்தை பெரியார், அறிஞர் அண்ணா இவர்களின் கோட்பாடுகளை நிறைவேற்றும் பணியில் தன்னைக் கரைத்துக் கொண்டவர் நீலம். கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் சிறை சென்றவர், நெருக்கடி நிலை காலத்தில் ஓராண்டு சிறைவாசம் என கழகத்தின் அனைத்துச் சிறைக்குறிப்புகளிலும் இவரது பெயர் இடம்பெற்றுள்ளது.

நெருக்கடி நிலையின்போது சென்னை மத்திய சிறைக் கொட்டடியில், தொழுநோயாளிகள் அடைக்கப்படும் ஒன்பதாம் எண் அறையில் அடைக்கப்பட்டிருந்தார். அந்த அறையின் சக தோழர்களாகக் கழக முன்னோடிகள் சிட்டிபாபு, ஆற்காடு வீராசாமி, வி.எஸ்.கோவிந்தராஜன் ஆகியோருடன், கழகத்தின் இன்றைய தலைவர் வதைக்கப்பட்ட கதையை நாடே அறியும். அப்போதும் உருக்குலையாத எஃகு போல இயக்கம் காத்தவர் நீலம்.

## ஓயாத உழைப்பு

"உழைப்பு, உழைப்பு, ஓயாத உழைப்பின் உருவமாகத் திகழ்பவர், குமரி மாவட்டம் தந்த உடன்பிறப்பு நீலநாராயணன்" என அவருக்கு 'பெரியார் விருது' தரப்பட்டபோது கலைஞர் எழுதி இருந்தார். அந்த ஓயாத உழைப்பு 1996-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 7-ஆம் தேதி தனது இயக்கத்தை நிறுத்திக் கொண்டது. அந்த நாளில் உள்ளாட்சித் தேர்தல் சுற்றுப்பயணத்தில் இருந்தார் முதலமைச்சர் கலைஞர். உடனடியாகத் தனது பயணங்களை நிறுத்திவிட்டு, சென்னை திரும்பி, ரயில் நிலையத்தில் இருந்தே நேராக நீலநாராயணன் வீட்டுக்குச் சென்று இறுதி அஞ்சலி செலுத்தினார்.

"அவர் பெரியாரின் பெரும் தொண்டர், அண்ணாவின் தம்பி, எங்கள் தோளுக்குத் துணை நின்ற தோழர், அவரது பிரிவு கழகக் குடும்பத்திற்கு மாபெரும் இழப்பு. அந்த நல்லவர் பெயரை மனதில் தாங்கி நம் பயணம் தொடர்வோம்" என நீலம் மறைந்தபோது இரங்கல் குறிப்பு எழுதினார் கலைஞர். அது இரங்கல் குறிப்பு அல்ல. இதயத்தின் குறிப்பு. நமக்கு எழுதி வைத்துள்ள இயக்க வரலாற்றுக் குறிப்பு.

...துடிக்கும்

---

## 'அன்பிலதனை அறம்' பயணம்!




'இந்தியன் பீப்பிள்ஸ் தியேட்டர் அசோசியேஷன்' (IPTA) என்கிற அமைப்பின் சார்பில், இந்துத்துவப் பாசிசத்துக்கு எதிரான கலைப் பயணம் தொடங்கப்பட்டு, இந்தியா முழுவதும் சென்று கொண்டிருக்கிறது.

இந்துத்துவப் பிற்போக்கு, அரசியல் செயல்பாடுகள் ஆகியவற்றுக்கு எதிராக அணி திரளும் எழுத்தாளர்கள், கலைஞர்கள், சமூகச் செயல்பாட்டாளர்கள் இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளனர். செப்டம்பர் 28-ஆம் தேதி பகத்சிங் பிறந்த நாளில், ராஜஸ்தான் மாநிலத்தில் தொடங்கிய அந்தக் கலைப்பயணம், 22 மாநிலங்கள் பயணித்து 2024 ஜனவரி 30-ஆம் தேதி காந்தி நினைவு நாளில் டெல்லியில் முடிவடைய உள்ளது.

அந்தப் பயணம் தமிழ்நாட்டிலும், 'அன்பிலதனை அறம்' எனும் முழக்கத்துடன் மேற்கொள்ளப்பட உள்ளது. டிசம்பர் 13-ஆம் தேதி முதல் 17-ஆம் தேதி வரை சென்னை, திருப்பூர், கோவை என தமிழ்நாட்டில் நிகழ உள்ள அந்தக் கலைப் பயணத்தில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்கம், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், திராவிடர் கழகம், திராவிடர் விடுதலைக் கழகம் உள்ளிட்ட அமைப்புகள் முன்னின்று, அந்த நிகழ்ச்சியை நடத்த உள்ளன. சமூக நீதி, அமைதி, ஒற்றுமை விரும்பும் மக்கள் இந்தப் பயணத்தில் பங்கெடுப்பது காலத்தின் தேவையாக உள்ளது.

## :ப்ளாஷ்பேக்



**பெரியப்பா வீட்டில் பேரறிஞர்!**

1941-ஆம் ஆண்டு அக்டோபர் 12 அன்று திருச்சி மாவட்டம், திருவரங்கத்தில் பேரறிஞர் அண்ணா தலைமையில், சுயமரியாதை இயக்க வீராங்கனை இளமுருகு பொற்செல்வி அவர்களின் தங்கை சம்பூரணம்-காரைக்குடி ராம சின்னையா இணையரின் சுயமரியாதைத் திருமணம், துரைசாமி அவர்களது தோட்டத்தில் நடைபெற்றது. எனக்கு நெருங்கிய உறவுக்காரரான பெரியப்பா துரைசாமி அவர்கள், பேரறிஞர் அண்ணாவின் நெருங்கிய நண்பருமாவார். அண்ணா, திருச்சி வரும்போதெல்லாம் என் பெரியப்பா வீட்டில் தங்குமளவுக்கு நெருக்கம். இந்தப் படத்தில் அம்மையார் விசாலாட்சி ராமசுப்பையா, திரைப்பட இயக்குநர் சுப.முத்துராமன், பூவாளூர் பொன்னம்பலனார், வேதாச்சலம் ஆகியோரும் உள்ளனர். வரலாற்றுச் சிறப்புமிக்கப் புகைப்படம் இது.



காமராஜ்

**-டி.எஸ்.காமராஜ்,**
**மாநகர முன்னாள் துணைச் செயலாளர்,**
**திருச்சி மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in


## கருவூலம்

### தூய்மையான நல்லெண்ணம்!

**1962-ஆம் ஆண்டு, தமிழ்நாட்டில் மூன்றாவது பொதுத் தேர்தல் மூன்று கட்டங்களாக நடைபெற்றது. அதற்கு முன்னர், 1961-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கோவையில் தேர்தல் சிறப்பு மாநாட்டினை நடத்தியது கழகம். அப்போது தலைமையுரை யாற்றிய பேரறிஞர் அண்ணா, "நம்மிடம் பணம் இல்லை, வாகன வசதிகள் இல்லை, பத்திரிகை பலம் இல்லை. ஆனால், மக்களின் தூய்மையான நல்லெண்ணமும் ஒத்துழைப்பும் நம் பக்கம் இருக்கிறது. நமக்கு வெற்றியைத் தேடித் தருபவை அவைகளேயாகும்" என தொண்டர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 310




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131